திராவிடநாடு
24-9-50
விலை 8 அணா
தி.மு.க. முதல் ஆண்டு மலர்..
BALU BROS

தீரரே! திரண்டு வாரீர் சிவகெங்கை நோக்கி.
இராமநாதபுர மாவட்ட

# திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு
## சிவகங்கை.

**30–9–50; 1–10–50 சனி, ஞாயிறு இரு நாட்களிலும்**

முத்துச்சாமி நகரில் அமைக்கப்பட்டிருக்கும் மறைந்த மாவீரர் இராமச் சந்திரன்
எழில் மிகு பந்தலில் மாநாடு நடைபெறும்.

தோழர். N. V. நடராசன் அவர்கள் தலைமையில்
தோழர். M. S. கனகராசன் அவர்கள் மாநாடு துவக்குவார்.

### இயல் அரங்கு

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

இரா. நெடுஞ்செழியன் M. A, மு. கருணாநிதி க. அன்பழகன் M. A. ஈ. வெ. கி. சம்பத், T. K. சீனிவாசன், மதியழகன் M. A.
மற்றும் திராவிட அறிஞர்களும், இயக்கப்பத்திரிகை ஆசிரியர்களும் கலந்துகொண்டு தங்கள் கருத்துகளை குழுமியுள்ள மக்களுக்கு விளக்குவார்கள்.

### இசை அரங்கு.

சனி இரவு: இசைப்புலவர்கள் M. M. மாரியப்பா, T. V. நமசிவாயம், கனிஃபா, முகம்மது யூசஃப்

ஆகியோரின் இனிய இசை விருந்து
புரட்சிக் கவிஞரின் புயல்வேகப் பாடல்களை
'இசைத் தென்றல்கள்' பாடக் கேளுங்கள்.

### நாடக அரங்கு.

ஞாயிறு இரவு: நடிப்புப் புலவர் K. R. இராமசாமி,
குழுவினர் நடிக்கும்

## "வேலைக்காரி"

நாடகம் நடைபெறும்.

கவிஞரின் புரட்சிக் கருத்துகளை, இயக்கத் தோழர்களின் 'இதயத் துடிப்புகளை' கேட்கத் திரண்டு வருக.

**மாநாட்டுக் கட்டணம்:—**

வரவேற்பாளர் (உணவு உட்பட) ரூ. 5—0—0 பிரதிநிதி ரூ. 2—0—0
வரவேற்பாளர் ரூ. 1—0—0.

பெண்களுக்குத் தனி இடவசதி உண்டு.

—வரவேற்புக் குழுவினர்.

ஓராண்டை முடித்துவிட்டோம். வேதனையினூடே வளர்ந்துவரும், விடுதலை வேட்கை கொண்ட நமது வெற்றிப்பட்டியலை, இன்று எண்ணிப் பார்க்கும் பொழுது இதயம் புளகாங்கிதமடைகிறது. வசதியையும் வாய்ப்பையும் நாமே தேடிக்கொண்டு, தவழும் பருவத்திலேயே சாதிக்கமுடியாதசெயல்களைச் சாதித்துள்ளோம்.

நாம் தாண்டவேண்டியிருந்த மேடு பள்ளங்கள், சகித்து ஒதுக்கவேண்டியிருந்த சங்கடக்குவியல்கள், பொறுமையோடு வேதனையை மறைத்து புன்சிரிப்போடு உலவவேண்டியிருந்த சம்பவங்கள், பலப்பல. எனினும், அவைகள் மக்களின் அன்பால், கழகச்செயல் வீரர்களின் கட்டுப்பாடு நிறைந்த கடமையுணர்ச்சியால் — நமது ஊக்கத்தை விண்ணிற்கு உயர்த்தின. வெற்றிக் களிப்போடு, கடந்த ஆண்டைத் திரும்பிப் பார்க்கிறோம்—இன்று!

"வீம்பு அல்ல பெரிது" என்று விவேக உரை தந்து கடந்த 17—9—49 அன்று சென்னை வண்ணையம்பதியிலே, தெளிவுரை தந்தார் நமது பொதுச் செயலாளர். "நமது பணி பெரிது. நாம் இந்நாட்டின் நரம்புகள். சில்லரையில் சிந்தனையைச் செலுத்தி, சீரிய பணியின் ஊற்றை அடைப்பது ஆகாது. தகாது" என்று, அவர் கூறிய, வழிப்படி, நடந்து, புதுச்சோலை நிர்மாணித்துவிட்டோம்.

நாடும் மக்களும், முகிலைக்கிழித்துக் கிளம்பிய நிலா, முன்னேற்ற வாழ்வின் விடிவெள்ளி என்று நமது கழகத்தைக் கருதுகின்றனர். இத்தகைய, நல்மதிப்பு, மக்கள் மன்றத்தில் நமக்குக் கிடைத்திருப்பது—நமது இலட்சியபுரி பயணத்தின் அழியா வெற்றியாகும்.

வெற்றிப்பட்டியலை, பொதுச்செயலாளர் முன் வைத்து—அவர் பூரிப்பதைக்கண்டு பெருமகிழ்வடைய இருந்தோம். ஆனால், அந்தோ! பொன்னான இந்நாளில், அவரை, ஆளவந்தார் நம்மிடமிருந்து பிரித்துச்சிறைச்சாலைக்குள் தள்ளிவிட்டனர்!

17—7—49 அன்று பிறந்தோம்!

18—7—50 உடன் ஓராண்டு முடிந்தது!

இரண்டாம் ஆண்டு துவக்கநாள், தியாக முத்திரையோடு, துவங்குகிறது நமக்கு. இலட்சிய ஈடேற்றத்திற்காக, எந்தவிலையும் கொடுக்கும் வீரர்கள் நாம் — என்பதன் இதயமுழக்கத்தை வெளிப்படுத்துவது போல அருமை அண்ணா, சிறைக்கோட்டத்துக்குள் சிக்கிக் கிடக்கிறார்.

நினைக்கவும் நெஞ்சம் வேகிறது—நிலவைப் பிரித்துப்போய் அடைத்துவிட்டனர்!

நாம் சிங்காரச் சிந்து பாடும் நாள். அது கண்டு களிக்கும் சிங்கம், சிறுகூண்டிலே கிடக்கிறது!

தாங்கமுடியாத பிரிவு. இதயம் வெடிக்கக்கூடிய வேதனை. எண்ணங்கள் புயல் வேகங்கொள்ளும் சம்பவம்.

எனினும் சகித்துக்கொள்வோம்—நமது எதிர்கால தியாகக்கட்டங்களின் ஆரம்பவிழா, துவக்கப்பட்டுவிட்டது. பொறுப்பும் சோதனையும் நிறைந்த இரண்டாம் ஆண்டுக்குள் நுழைகிறோம், எதையும் தாங்கும் இதயம் உண்டு என்ற முழக்கத்துடன்!

இரா. நெடுஞ்செழியன்,
பிரச்சார குழுசெயலாளர்.

என். வி. நடராசன்,
அமைப்புக் குழுசெயலாளர்.

கே. ஏ. மதியழகன்,
சட்ட திட்டக் குழுசெயலாளர்.

காஞ்சி. மணிமொழியார்,
நிதிக்குழு செயலாளர்.

# திராவிட முன்னேற்றக் கழக

# ஓராண்டு முடிவு-வெற்றிக் காணிக்கை

★ மொத்த உறுப்பினர்கள் 35,000 ★
★ கிளைக் கழகங்கள் 505 ★
★ மாவட்டக் கழகங்கள் 12 ★
★ நடத்திய பொதுக்கூட்டங்கள் 2035 ★

## நடத்திய மாநாடுகள்

கழக மாவட்ட மாநாடுகள் 7
இந்துச் சட்டத் திருத்த பெண்கள் மாநாடு 1
கோவை முத்தமிழ் வளர்ச்சி மாநாடு 1

## பெற்ற வெற்றிகள்

★ இந்தி ஒழிந்தது
★ 'இலட்சிய வரலாறு' வழக்கு
★ 'உடுமலை பீரங்கி' வழக்கு
★ 'திராவிட நாடு' ஜாமீன்
★ 'கருஞ்சட்டை ஒழியவேண்டுமா?'
★ திவாகருக்குக் கருப்புக் கொடி

## போராட்ட முடிவுகள்

★ டில்லி மந்திரிகளுக்குக் கருப்புக் கொடி
★ இரயில்வே போர்டு அழிப்புப் போர்
★ எழுத்துரிமை காக்க அறப்போர்
★ தடைப்பட்ட நாடகங்கள் நடத்தல்
★ டிக்கட் வாங்காத பயணம்
★ கம்யூனல் ஜி. ஓ. நீடிக்க

## ஆளான அடக்குமுறை

ஆசைத்தம்பி, தங்கவேல், கலியபெருமாள், சி. என். ஏ.—சிறைவாசம்

சீர்காழியில் 144 தடை செய்யப்பட்ட நூல்கள் 11

திராவிடநாடு

ஞாயிறு] 24—9—50 [காஞ்சி

# நமது பணி

★

கோடை வெய்யிலும், குளிரும் பனியும், குமுறும் மழையும், கொக்கரிக்கும் இடியும் எதுவும் நமது பணியைத் தடுக்கமுடியவில்லை.

வேதனைக் கண்ணீருடன் தோன்றிய கழகத்தை, நமது வியர்வை விருந்தால், நாட்டிற்கான நற்சோலையாக்கித் தந்துவிட்டோம்.

ஓராண்டுக்குமுன், திராவிடரியக்க வரலாற்றிலே பரவிய கார்மேகங்களைக் கிழித்துக்கொண்டு கிளம்பிய விடிவெள்ளி — திராவிட முன்னேற்றக் கழகம், வீர கீதம் முழக்கியவண்ணம், இரண்டாம் ஆண்டிற்குள் நுழைந்துவிட்டது.

'இளைஞர்கள்—எனினும் சூரர்கள்' என்ற பாராட்டுரையை, நாடும் மக்களும், நமக்குத் தந்துவிட்டனர். ஆனால், அந்த நல்மதிப்பைப் பெற, நாம் பட்டிருக்கும் கஷ்ட நஷ்டங்கள் — இன்று நாம் எண்ணும்போது, எக்களிப்பையும் குதூகலத்தையுமே தூக்கி வருகின்றன.

வேதனையோடு புறப்பட்டோம்—மார்பிலே தலைவர் பாய்ச்சிய ஈட்டி, விலாவிலே மாற்றார் வீசிய வேல், ஆகியவைகளைத் தாங்கிக்கொண்டு. 'இளைஞர்கள் தானே—அனுபவம் உண்டா? ஏதோ, ஆவேசத்தில் குதிக்கிறார்கள்! நீடிக்குமோ?' என்று, நமது வாழ்வைக் குறித்து வம்பர்கள் கணித்தார்கள். நல்ல சந்தர்ப்பம் — இனி நசித்துவிடும் திராவிடரியக்கம் என்று எதிரிகள் கெக்கலித்தார்கள்.

அலட்சியத்தைப் பதிலாகத் தந்துவிட்டு, ஆர்வப் பாதையில், கண்ணிய விளக்கோடு, நடந்து, இன்று வெற்றி முரசம் எழுப்புகிறோம்.

பணபலம்—நம்மிடம் கிடையாது! பத்திரிகை பலமும், அவ்வளவாக இல்லை! எல்லாவற்றையும் பல்லாண்டு உழைப்புடன் 'விட்டுவந்த' இடத்துக்கு தத்தம் செய்துவிட்டோர் நாம்! ஆகவே தத்தளித்தோம்—எனினும் தயங்கவில்லை! 'உலகில் எந்த அரசியல் கட்சியும் இது போலச் செய்ததில்லையே' என்று, மாற்றார், திகைக்க வேஷம் போட்டு, நாடகமாடி—மக்களிடமிருந்து அவர்கள் அன்போடு தந்த காணிக்கையைக் கொண்டு கழகக் காரியங்களை கவனித்தோம்!

நாம் ஏழைகள் – ஏழைகளுலகு நம்முடையது. எனவே, ஏழைகள் தரும் காசுக்களைக் கொண்டே கட்சிக் கோட்டையைக் கட்ட வேண்டியவர்களானோம் – எனினும், வெற்றி நம் பக்கந்தான்.

புதுக்கட்சி துவங்கும்போது, நம்மிடமிருந்த செல்வம் 'நாம்'தான். நமது உழைப்பையும், ஊக்கத்தையும் வைத்து, தென்னாட்டின் தலை சிறந்த அரசியல் கட்சியாக வளர்த்துவிட்டோம்.

ஓராண்டுக்குள் – இந்த வெற்றி! பொதுவாழ்வு புகுந்தோருக்கு இதைவிட என்ன பரிசு வேண்டும்? ஓராண்டுப் பட்டியலைக் காணும்போது நம் இதயம் எல்லாம் பூரிக்கிறது. 'நாமா—இவ்வளவு வெற்றிகளைப் பெற்றோம்' என்றுகூடத் தோன்றுகிறது.

இந்த ஓராண்டில் நாம் சாதித்த காரியங்கள் பல. புதுக் கிளைக் கழகங்களை நிறுவும் பொறுப்பு, கழகப் பிரச்சாரம் தங்கு தடையின்றி நடைபெற வேண்டிய கவலை, செலவுக்கு வேண்டிய பணத்தைச் சேகரிக்க வேண்டிய சங்கடம், எதிரிகளின் கேலிப் பேச்சுகளை எதிர்த்து நிற்கவேண்டிய தொல்லை, இவைகளினூடே மாவட்ட கழகங்களை நிறுவினோம்—ஒன்பது மாநாடுகளை நடத்தியுள்ளோம்.

அதோடு, நாட்டில் அப்போதைக்கப்போது எழும்பிய நடவடிக்கைகள் குறித்தும், முன்னணியிலிருந்து, பணியாற்றியிருக்கிறோம். நாம் எடுத்த பணிகள் எதுவும், துவண்டு விடவில்லை. மாறாக, வெற்றியைத் தந்திருக்கின்றன. முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டின் முரசொலி கேட்டது நாடு. சின்னாட்களுக் கெல்லாம், 'இந்தி ஒழிந்தது' என்ற களிப்புச் செய்தி கிடைத்தது. மகிழ்ந்தோம் — நாடு நமது பணியின் பெருமையை அறிந்தது.

வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை பறிபோனது காண, துடித்து, நாமே, முதலில் எழும்பினோம் நமக்கு, ஏனையோரின் பலமும் கிடைத்தது. நமது மாணவ மணிகளும், நாட்டவரும் தமது கண்டனக் குரலை யெழுப்பினர்.

டில்லி ஆதிபத்தியத்தை எதிர்த்து அறப்போர் நடத்த கோவில்பட்டியிலே, பாசறை அமைத்தோம். முதல் வெற்றி, பெருமிதமாக திவாகருக்குக் கருப்புக்

(5-ம் பக்கம் பார்க்க)

★  ★

'என்குலம்' எனறனைத் தன்னிடம் ஓட்டிய
மக்கள் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்!
அறிவை விரிவுசெய்! அகண்டமாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!
அணைந்துகொள்! உன்னைச் சங்கமமாக்கு!
—புரட்சிக் கவிஞர்.

குழந்தைப் பருவம் எனினும் கொடுமை ஈட்டிகளைத் தாங்க வேண்டியவர்களானோம். ஆளவந்தார், வளரும் நம்மீது, அடக்குமுறைப் பாணங்களை வீசிய வண்ணமேயிருந்தனர்.

நமது பணியோ, மகத்தானது. வீழ்ந்துபட்ட ஒரு மாபெரும் சமுதாயத்தை, வாழவைக்கும் பெரும்பணி. ஆனால், அதற்கான பண பலமும், பத்திரிகை பலமும், அவ்வளவாக இல்லை. தத்தியும், தவழ்ந்தும், சங்கடத்தினூடே நகர்ந்து செல்வதைக் கண்டும் நாடாளவந்தவர்கள் நம்மைக் கண்டு மருண்டனர். நமது எழுத்துக்கள் மீது பாய்ந்தனர்.

அழகு நடை, சிறந்த சொல்வீச்சு, கருத்துக்கு விருந்து தரும் நமதியக்க நூல்கள் நாட்டு மக்களின் இதயபீடத்தில்மரத் துவங்கின. இந்த நிலை, 'எழுத்துத் துறை' தங்களது ஏகப்போகச் சொத்து என்று எண்ணிக் கிடந்த 'அம்மாமி பத்திரிகைகளுக்கும்' அவர்களது கும்பலுக்கும் கவலையைத் தந்தன.

நமதியக்க நூல்கள், கருத்துக்கள், பத்திரிகைகள் மக்கள் மனதிலே ஒரு புது மலர்ச்சி உண்டாக்குவது காண பொருமினர். அதன் விளைவாகத் தூண்டுகோல் போட்டு, கைப்பாவைகளாகக் கிடக்கும் காங்கிரஸ் ஆட்சியினரைத் தூண்டிவிட்டு, தூபம்போட்டு, **153**A செக்ஷன், பல நூல்களின் மீது வீசப்பட்டது.

ஆட்சியாளரின் ஆணவக் கொக்கரிப்பால், முன்னேற்றக் கழகம் முகிழ்க்குமுன் அடக்குமுறைக்கு ஆளான நூல்கள், நாடகங்கள், ஜாமீன் நடவடிக்கைகள் பல.

அதன் தொடர்ச்சி, புதுக் கழகம் கண்டு, நாம் புது முறுக்குடன் வளர்வதைக் காண வெகு வேகமாயிற்று. அதன் விளைவாக நமது கழக நண்பர்கள் பலர் அடக்குமுறை அம்புக்கு ஆளாகினர். பிரசுரித்த நண்பர்கள், அச்சக உரிமையாளர்கள் அனைவர் மீதும் **153**A பாய்ந்தது.

**153**A பிரிவு, ஆங்கிலேய ஆட்சியால் வகுத்துக் கொள்ளப்பட்டதாகும். அன்று, அவர்கள் தங்கள் ஆதிபத்தியத்தை இந்நாட்டில் பலப்படுத்தியபொழுது, அதற்கு அரண்போல ஆக்கிக்கொண்டதாகும்.

அந்நிய ஆதிக்கத்தை ஒழிக்கும் நோக்குடன் காங்கிரஸ் இயக்கம் தோற்றுவிக்கப்பட்ட பின்னர், அதன் இலட்சியத்தை விளக்கிப் பரப்பும், பல பத்திரிகைகளும், நூல்களும் எழும்பின.

அதன் விளைவாக நாட்டு மக்களிடையே புது எழுச்சியும் விழிப்பும் பரவின. அதைக்கண்ட வெள்ளை ஆதிபத்தியம் 'துவேஷம் ஊட்டுவதைத் தடுக்கும்' சட்டப் பிரிவை தயாரித்து அதைக்கொண்டு, பல தேசிய வெளியீடுகள் மீது தங்கள் பாணங்களைப் பாய்ச்சினர். ஈட்டி பாயப்பாய, அந்த இயக்கம் வளரவே செய்தது. அன்று, தேசிய இயக்கத்தினர், 153A செக்ஷனை எதிர்த்து நடத்திய ஆர்ப்பாட்டங்களும், எதிர்ப்புகளும், அமோகம்.

இருந்தும், இன்று, அதே சட்டப் பிரிவை நம் மீது வீசுகின்றனர். 'துவேஷம்' ஊட்டுவதாகக் குற்றஞ்சாட்டி நம்மீது கொடுமைக் கணைகளைப் பாய்ச்சிக் கொண்டேயிருக்கின்றனர்.

வெளியில் துப்பியதை எடுத்து விழுங்கும் செயல்! எனினும் இனிக்கிறது, இவர்களுக்கு!!

இந்த ஓராண்டில், நம்மீது வீசப்பட்ட அடக்குமுறைப் பட்டியல், இது!

1. திராவிடர் நிலை.

   என்ற சி. என். ஏ. பேச்சை வெளியிட்ட சென்னை மெர்க்கண்டைல் பிரசுக்கு 1000 ரூ. ஜாமீன்.

2. விடுதலைப் போர்.

   சி. என். ஏ. தீட்டி, திராவிடப் பண்ணையார் வெளியிட்டது.

3. இலட்சிய வரலாறு.

   சி. என். ஏ. தீட்டியது திராவிடப்பண்ணையாரின் வெளியீடு. வழக்கு மன்றத்தில், வகுப்புத் துவேஷமூட்டக் கூடியது எதுவுமில்லை என்று தீர்ப்பு கிடைத்தது.

4. காந்தியார் சாந்தியடைய.

   ஏ. வி. பி. ஆசைத்தம்பி தீட்டியது. ஆறு மாத சிறைவாசமும் 500 ரூபாய் அபராதமும் கட்டுமாறு தீர்ப்பு தரப்பட்டது. இப்போது, வழக்கு, ஐகோர்ட்டிலிருக்கிறது.

5. அழியட்டுமே திராவிடம்

   து. வீ. நாராயணன் தீட்டியது. அவர் இறந்துபோயும், அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. பின்னர் பிரசுரகர்த்தர் துறையூர் தங்கவேல்மீது, வழக்குத் தொடர்ந்து ஆறுமாத சிறைவாசமும், 500 ரூபாய் அபராதமும் கட்டுமாறு தீர்ப்பளிக்கப்பட்டது.

6. கிளர்ச்சி

   பத்திரிகைமீது நடவடிக்கை.

7. கருஞ்சட்டை ஒழிய வேண்டுமா?

   புலவர் செல்வராஜ் தீட்டிய நூல். ஆட்சேபகரமான தெதுவும் இல்லையென்று, நீதி மன்றத்தில், தீர்ப்பு பெறப்பட்டது.

8. உடுமலை பீரங்கி

   பி. ரங்கநாதனை ஆசிரியராகக் கொண்ட சஞ்சிகை. மதத்துவேஷம் ஊட்டியதாக வழக்கு தொடர்ந்தனர். நீதி மன்றம் சர்க்காரின் நடவடிக்கையைத் தள்ளியது. நாம் வெற்றி கண்டோம்.

9. கோட்சேக் கூட்டம்

   பிச்சமூர்த்தி தீட்டிய நூல் வழக்கு நடைபெறுகிறது.

10. ஆரியமாயை

   C. N. A. தீட்டி, திராவிடப் பண்ணையார் வெளியிட்டது. இதன் காரணமாக C. N. A. ஆறு

மாதம் சிறை வாசத் தண்டனை அனுபவிக்கிறார்.

11. சவுக்கடி

எம். எஸ். சிவசாமி எழுதியது. வழக்கு முதலில் தள்ளப்பட்டு, பிறகு 'Clerikal Mistake' என்று காரணம் சொல்லி மீண்டும் தொடரப்பட்டது. ஆளவந்தாரின் இப்போக்கை யெதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(இது மட்டுமின்றி திராவிட கழகத் தலைவர் பெரியார் தீட்டிய 'பொன்மொழிகள்' மீதும் அடக்கு முறை வீசி, அவரை சிறையில் அடைத்துவிட்டனர்.)

இவ்வளவு கழக நூற்கள் மீது, நடவடிக்கை யெடுத்தனர். சிலவற்றின்மீது, சர்க்காரின் போக்கு தவறானது, ஆட்சேபகரமானது எதுவும் இல்லையென்ற தீர்ப்பு பெற்றிருக்கிறோம்.

அவைகளில் குறிப்பிடக் கூடியது, "திராவிட நாடு" பத்திரிகைமீது ஜாமீன் கோரியது சம்பந்தமாக சென்னை உயர்நீதி மன்றம் தந்த தீர்ப்பாகும்.

திராவிட முன்னேற்றக் கழகம் அரும்பி ஓராண்டு முற்றுப் பெறுவதற்குள், இத்தனை அடக்குமுறை அம்புகள், நமது நூல்களின்மீது பாய்ந்துள்ளன.

வளரும் நேரத்தில் வந்து பாயும் இந்த அடக்கு முறையை எதிர்த்து, எழுத்துரிமையைக் காக்கவும் கோவில்பட்டியில் தி. மு. க. செயற்குழு, முடிவு செய்திருக்கிறது.

அம்முடிவு, இரண்டாம் ஆண்டின், உரிமைப் போராக முரசொலிக்கும் நாள் விரைந்து கொண்டிருக்கிறது!

✻

விடுதலையே, நீ எப்பொழுதும் எட்டாத வானவெளியில் மிதந்துகொண்டே இருந்து விடாதே—ஆர்வலர்கள், கவிகள், நாட்டு நலம் விரும்பிகளின் கனவிலேயே தங்கிவிடாதே! வா, வா, மனிதக் குழந்தைகளின் மத்தியிலே உனக்கு விடமைத்துக் கொள்!

இங்கர்சால்.

# வாடுகிறார்



தள்ளாத வயது. நாட்டுக்கு அவர் ஆற்றிய பணிகள், பல. அவரை இந்த அரசாங்கம், சிறைக்குள்ளே பூட்டிப் போட்டிருக்கிறது. அரசியல் வாழ்வில் ஈடுபட்ட ஒருவருக்கு, அவரது 'பொன்மொழி'களுக்காக, வேதனைப் புயலில் ஆழ்த்தியிருக்கிறது. இக்கொடுமையைகாம்பிரசாட்சியிலன்றி வேறெங்கு காணமுடியும்? ஒழிக அடக்குமுறை!

3-ம் பக்கத் தொடர்ச்சி

கொடிமூலம் சென்னையிலும், காஞ்சியிலும், திருக்கழுக்குன்றத்திலும், மகாபலிபுரத்திலும் கண்டோம்.

ஆளவந்தாரின் அடக்குமுறையைக் கண்டித்து, மக்களின் அதிருப்தியை நமது பிரச்சார வீரர்கள் மூலம் திரட்டிக் காண்பித்தோம், சேலத்துச் சிறையில் 22 காவற்கைதிகள் சுடப்பட்டதைக் கண்டித்து 'கண்டன வாரம்' கொண்டாடினோம்.

அம்பேத்காரின் இந்துச் சட்டத் திருத்த மசோதாவுக்கு ஆதரவைத் திரட்டித் தந்தோம்,

நாட்டுக்கு நலந்தரும் பயக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட நாம் தயங்கவில்லை. அதேபோல நாட்டு மக்களுரிமையைப் பறிக்கும் ஆளவந்தார் போக்கையும் அனுமதிக்கவில்லை,

நமது நூல்கள், பத்திரிகைகள்மீது வீசப்பட்ட அடக்குமுறை ஈட்டிகளை எதிர்த்து, நீதிமன்றமேறி வெற்றிபெற்றுள்ளோம். எழுத்துரிமையை நிலைநாட்ட 'சிறைச்சாலை' நோக்கியும் பயணம் கிளம்பியுள்ளோம்.

அதன் விளைவாக, இன்று ஓராண்டின் முடிவில் நிற்கும் நம்மிடையே பொதுச்செயலாளர் அண்ணா அவர்கள் இல்லை! பொல்லாத அரசாங்கம்—வெஞ்சிறையில் அவரைப் பிடித்துப்போட்டிருக்கிறது!

ஓராண்டில், தியாகத் தழும்புகளோடு, தத்தித் தவழ்ந்து, பெருமித வெற்றியோடு, அடுத்த ஆண்டை எட்டிப் பார்க்கிறோம்.

சோதனையும் வேதனையும் நிறைந்ததாகவே காட்சியளிக்கிறது.

வேதனையோடு பிறந்தோம்—வேதனைப்படும் சமுதாயத்துக்காகப் பாடுபடுகிறோம். நமது வாழ்வே வேதனைமயம்!

எனவே, எதற்கும் நாம் கலங்கவில்லை. புன்சிரிப்போடு புறப்படுகிறோம்—நாட்டு மக்களின் நல்லாசியோடு! நமது இளங்காளைகளின் இதயகீதத்தோடு!

வாழ்க திராவிட முன்னேற்றக் கழகம்!
வளர்க அதன் கொள்கைகள்!!

—அரங்கண்ணல்

# திருநாள் காண வாரீர்!

சி. என். ஏ.

நாணயமான எண்ணம், உண்மையான இதயத் துடிப்பு, தெளிவான நம்பிக்கையிருக்குமானால், நமது கோரிக்கைகள் கானல் நீராகிவிடாது. கஷ்டங்களைச் சகித்துக் கொள்ளும் மனோபாவமும், நெருக்கடிகளைப் பொறுத்துக் கொள்ளும் நெஞ்சுரமும், நம்மிடையே வளரவேண்டும்.

வெற்றி முழக்க மெழுப்பிய வீரப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் நாம். வீணைசையிலும், வெட்டி வீரத்திலும், நாட்களைக் கழிக்கும்—சுபாவமும், போக்கும் கொண்டவர்களல்ல நாம்.

நமது கட்டுப்பாடும், ஐக்கியமும், இன்று மகோன்னதமாக வளர்ந்திருக்கின்றன. இந்த நிலையைக் காணும் அரசியல் தொண்டன் எவனும் அகம்களிக்காமல் இரான்! எனது இதயமும், இந்நிலையால் பூரிக்கிறது! இந்தப் புது நிலை வளருவதே சமுதாய வெற்றியின் நன்னாள், புதுவாழ்வு தரும் பொன்னாள்.

அத்தகைய திருநாளைக் காணப் புறப்பட்டுவிட்டோம். தொடங்கிவிட்டோம்.

தோளில் சுமை, பாதையில் சங்கடம் — எனினும் துணிவைத் துணைகொண்டு, வீரப் போரில் இறங்கிவிட்டோம்.

நாம் எதிர்த்து நிற்கும் சக்திகள், இலேசானவையல்ல—எனினும் எதிர்க்கிறோம்.

வடநாட்டு ஏகாதிபத்தியம் வளர்ந்து வரும் பயங்கரம் நம் கண்ணில் தென்படுகிறது — பதைக்கிறோம்! எனினும் பயப்படவில்லை!!

அறிவுத்துறையில் நம்மைப் புறங்காட்டிடச் செய்யும், தந்திரசாலிகளின் திட்டங்கள், கோரவாயுடன் கொக்கரிக்கின்றன! எனினும், நாம் குலையவில்லை — கொட்டுமுரசு என்று குரலெழுப்புகிறோம்!

தனிநாடு கோரும் நமக்குத் தெரியும்—வளர்ந்து வரும் வடநாட்டு ஆதிபத்தியத்தின் தலைவர்களான நேருவுக்கும் பட்டேலுக்கும் இருக்கும் சக்தியும், புகழும். அவர்கள் பெரியவர்கள்—உலகத்துக்கே அறிமுகமானவர்கள்.

அவர்கள் மடியிலே அரசாங்கத்தின் கஜானாச் சாவி! கையிலே சிறைக் கதவின் திறவுகோல்!!

நம்மை, சுண்டுவிரல் காட்டி ஆட்டிவைக்கும் அதிகாரமும், நமது இலட்சியத்தைப் புறமுதுகிடச் செய்யும் பிரச்சார வசதியும் அவர்களிடம் கிடக்கிறது.

ஆயினும் நாம் அயரவில்லை! அஞ்சவில்லை!! கலங்கவில்லை!!

## அது ஏன்?

வடநாட்டில் மந்திரிகள் இருப்பானேன், அவர்கள் தென்னாட்டை ஆள்வானேன்?

கீர்த்திபெற்ற மாபெரும் சமுதாயம், சோற்றுத் துருத்திகளிடம் தொடை நடுங்கிச் சாவானேன்? ஆண்ட பரம்பரை, வீழ்ந்து கிடப்பானேன்? கஜினியும், அலெக்சாண்டரும், பாபரும், அக்பரும், அவுரங்கசீபும் அடியெடுத்து வைக்காத—வைக்கமுடியாத—தென்னாடு, சிறப்பிழந்து மடிவானேன்?

இந்தக் கேள்விகளை நாம் நினைக்கிறோம்—நெஞ்சம் குமுறுகிறது. கேட்கிறோம்—மக்கள் மனங்கொதிக்கிறார்கள்.

ஆனால் நம்மோடும், மக்களோடும் ஒத்துப்போக மறுக்கும் காங்கிரஸ் நண்பர்களைக் கேட்கிறேன், 'கனம்'களைக் கேட்கிறேன். தனித்து வாழ, நம்மிடம் ஆற்றல் இல்லையா? வாள் வலிமையற்றவரா, நாம்? நிகும்பலை யாகத்தை நம்பியவரா நாம்? இந்திரனின் வஜ்ராயுதத்தையும், பிரம்மாஸ்திரத்தையும் நம்பிக் கிடந்தோரா நாம்? நெஞ்சிலே வஞ்சத்தையும், உதட்டிலே விஷத்தையும் வைத்துக்கொண்டு வாழ்வோரா நாம்? காட்ட முடியுமா? கையிலே வாள்—கீழே தலை!—இதல்லவா, நமது வீரம். இதை யாரே மறுப்பர்?

வெள்ளைக்காரனை விரட்டியதாக வீரம் பேசும் வீராதி வீரர்களைக் கேட்கிறேன், வெற்றி பெற்றோம் என்று எக்களிப்போடு உலவும் எனது நண்பர்களைக் கேட்கிறேன்!

எது உமது தாய் நாடு? சேரனும் சோழனும், பாண்டியனும் சேர்ந்துலவியது—எந்தையும் தாயும் மகிழ்ந்துலாவியது என்றெல்லாம், சமயம் வாய்த்தபோது, பெருமை பேசுகிறீர்களே, அந்தத் தாய் நாடு, தமிழகம்—எப்படியிருக்கிறது?

நீங்கள் மறந்துவிட்டீர்கள், உங்களது தாய் நாட்டை—நாங்கள் கவனமூட்டுகிறோம். தாய் நாடு அடிமைப்பட நீங்கள் உடந்தையா யிருக்கிறீர்கள்—அதை எடுத்துக் காட்டுகிறோம்.

நீங்கள் உலவும் இந்த பூமி, என்றாவது அந்நியப் படையெடுப்பால் அழகிழந்ததுண்டா? சந்திரகுப்தன் காலடி, சமுத்திரகுப்தன் குதிரைக் குளம்பு, கனிஷ்கன் முரசம், சாந்த சொரூபி அசோகனின் ஆட்சி, சமரச ஞானி அக்பரின் செங்கோல்—எதுவும் படாத நாடல்லவா, தென்னாடு!

வீழாத நாடு! பிறரால் வீழ்த்தப்படாத நாடு!!

இன்று கையிலே தராசு ஏந்திய டாடாவும். நெஞ்சிலே வஞ்சம் தாங்கிய பிர்லாவும் உலவும் வேட்டைக் காடாகவல்லவோ, ஆகிவிட்டது.

இந்த உண்மையை மறுக்க முடியுமா? மறைக்க முயற்சிப்பவன் ஒன்று சர்வாதிகாரியாக இருக்க வேண்டும்—அல்லது பைத்தியக்காரனாக இருக்கவேண்டும்.

## இழந்தோம்—மறக்கவில்லை!

நாம், நமது எல்லையை இழந்துவிட்டோம்—ஆனால் மறந்துவிடவில்லை. நமது பழம் வீரம் மங்கி வருகிறது—ஆனால் மறைந்து விடவில்லை.

எனவேதான், வீர முரசம் கொட்டுகிறோம். நமது வாழ்நாளிலேயே சுதந்திர திராவிடத்தில் நமது மூச்சு போகவேண்டும் என்ற ஆசை வர, வர எனக்கு அதிகமாகி வருகிறது. என்னைச் சேர்ந்தோரிடமும் வளர்ந்து வருகிறது. கனவை நனவாக்க வேண்டும் என்று இந்நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் சபதம் எடுத்துக் கொள்ளுங்கள். நமது பிற்காலச் சந்ததி; நமது கல்லறை மீது கண்ணீர் வடிக்கும்படி விட்டு விடாதீர்கள்.

நம்மிடம் வீரமிருக்கிறது, விரும்பியதைப் பெற தீரர்கள் உள்ளோம், நமது கோரிக்கை நியாயம் நிரம்பியது, நீதிதான் நமது பாதை. இந்நிலையில் நாம் ஏன் தயங்கவேண்டும்? வடநாட்டார், என்ன, வீராதி வீரர்களா? அல்லது வடநாட்டு ஆட்சிதான் திறமை நிரம்பிய ஆட்சியா? அவர்களது வீரமும் திறமையும்தான் காஷ்மீரில் பின்வாங்குவதிலும், லெயிக் அலீயைத் தப்பியோட விட்டதிலும் சிரிப்பாய்ச் சிரிக்கிறதே!

சிறு காஷ்மீரைக் காக்க இவ்வளவு கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்கும் இந்தக் கையாலாகாத ஆட்சியை நம்பி மாபெரும் திராவிடத்தை ஒப்புவிக்கலாமா? நாளை ஒரு வெளிநாட்டான் படையெடுத்தால், என்ன ஆகும் நமது வாழ்வு?

வேண்டுமானால், தரை மார்க்கமாக வடநாட்டுக்கு ஆபத்து ஏற்படுவது சுலபம். தென்னாட்டில் முடியாது' மூன்று பக்கம் கடல், வடக்கே விந்தியம். நமது நாடு, இயற்கைக் கோட்டை. இளித்த வாயரால் வீழ்ந்தது முன்பு. இதை, இப்போது, பெற நாம் முயல வேண்டாமா?

இன்று காங்கிரஸ் உள்ள நிலையைப் பார்த்தால் இன்னும் ஐந்து ஆண்டுகளில் எல்லோரும் நமது பாசறை நோக்கி வருவார்கள்—நம்மைவிட ஆதாரத்தோடு பிரிவினைக் கிளர்ச்சிக்கு போராடவே செய்வார்கள். இந்த நம்பிக்கையை, நாடு இன்றுள்ள நிலை எனக்குத் தருகிறது.

## வளரும்!

கம்யூனல் ஜி. ஓ.—நமது பிரச்சினையென்று ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் கூறப்பட்டது. இப்போது கைவிடமாட்டேன் என்று அவர்களே பேசுகிறார்கள். "வேத பாராயணத்தால் ஏமாற்றி காலங் கழிக்க விடோம். தகுதி திறமை பேசும் கும்பல் தங்கள் வீட்டுக்காரிகளை வயலில் நடவுநட அனுப்புமா? உழுது நாற்று நட இறங்குவரா, முப்புரி அணிந்தோர்?" என்று அதட்டிக் கேட்கிறார், காங்கிரஸ் தோழர் கன்னியப்பன். நாம் கூட இதுபோலக் கேட்டதில்லை—'அந்தக் கூட்டத்திற்கு, உழுது பழக்கம் இல்லையே' என்ற எண்ணத்தால். இன்று அவர் கேட்கிறார்.

இந்நிலை வளராமலா போகும்?

ஆகவே, நமது கோரிக்கை மென்மேலும் வலுப் பெற்று வருகிறது. கிடைக்காத இடங்களிலெல்லாம் குரல் கேட்கிறது. இந்த நேரத்தில் நமது கடமையைச் செய்யத் தயங்காதீர்! அரும்புமீசை கொண்டோரே, ஆற்றல்படைத்த என் தம்பிமார்களே, கோவில்பட்டித் தீர்மானங்களை வெற்றியாக்கிக் காட்டுங்கள். 'அறப்போர் எப்போது?' என்று கேட்பீர்கள். 'இதோ, திட்டம் தரப்பட்டுவிட்டது! தயாராகுங்கள் — தனித்தத் திராவிடம் பெற தளரா உழைப்பைத் தரத்தயாராகுங்கள்!

எனது நாட்டின் இழிவைத் துடைக்க நான் என் கடமையைச் செய்தேன், என்ற திருப்தியோடாவது செத்துமடிவோம்—ஆளவந்தார் நமது போரில் நம்மீது ஈட்டிகளை வீசினால்! நாட்டின் விடுதலைப் போரில் ஈடுபடும் நம்மீது துப்பாக்கியையும், பீரங்கியையும் நீட்டலாம். நீட்டட்டுமே! என்னபோகும்? உயிர்போகும்—மானமிழந்து மதிகெட்டு வாழ்வதிலும் நாட்டின் விடுதலைக்காக இந்த உயிர் போனால்தான் போகட்டுமே!

நமது பணி மகத்தானது — மாபெரும் சமுதாய வாழ்வையே புதுப்பிப்பது. இதற்கு நாம், எவ்வளவோ, தியாகங்களைச் செய்யாமலா முடியும்?

முயல்வோம், எதிரிகளின் சூது நம்மை இவ்வுலகினின்றும் பிரித்துவிட்டால்—நமக்குப் பின்னர் நாட்டுக்காகப் போராடி உயிர் விட்டோம் என்ற பெருமையாவது உலவட்டும்! வீரம்பரப்பரையினர், வீழ்ந்து அடிபணிந்துகிடந்தனர்—என்ற அவமானச்சொல் சரித்திர ஏட்டிலிருந்து மறைய, நாம் சிந்தும் இரத்தமாவது பயன்படட்டும்!

ஆமாம், இதை முடிவோடு கூறுகிறேன்.

நாம் அரசியலில் அனாதைகள்— ஆதரவு இல்லாதவர்கள்—அடக்கப்படுபவர்கள்.

இதைச்சொல்லுவதில் வெட்கப்படவில்லை நான். வேதனைக் கண்ணீர் சிந்துகிறேன். நிர்க்கதியாக நிற்கும் நமக்குப், பத்திரிகைப் பலமில்லை, பணபலமில்லை — ஆனால் நாம் எதிர்த்து நிற்கும் எதிரிகளோ, மிகப் பெரியவர்கள்! பெரியவர்கள் என்பதற்காக நாம் பின்னடையவில்லை — அவர்கள் தந்திரக்கோட்டைகளைத் தவிடு பொடியாக்கியே வருகிறோம்.

வீட்டுக்கு வீடு, நமது வீரகீதம் எழும்பட்டும் அமீர் சந்த், சாணக்யன் பரம்பரையின் சூதுச்செயலை! ஒழிப்போம் என்பது நாடெங்கும் முழங்கட்டும்! அந்நியன் எந்நாட்டை ஆள ஒருபோதும்—சம்மதியோம் என்ற பேச்சு எங்கும் உலவட்டும்!

இந்த முரசொலி கோவில் பட்டியிலே எழுப்பப் பட்டுவிட்டது. நமது கல்லறைமேல் புல்முளைக்கும்வரை இனி அடங்காது—தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருக்கும்!

(சென்னை திருவல்லிக்கேணி நடேசன் மன்றத்தில் 7—9—50 அன்று பேசியபோது சிதறியவை)

சென்னை மக்களே!

25-10-50

ஆச்சாரியார் வருகிறார்!!

தயாராகுங்கள்

கருப்புக் கொடியுடன்!

தி. மு. க.

# செயலாற்றும் சென்னை

திராவிடர் இயக்கம் உருவாகி முப்பத்திநான்கு ஆண்டுகள் முடிவடைந்து விட்டன. நமது இயக்கம் மக்களின் மனோபாவத்திற்கேற்ப, காலத்தின் நிலைக்கேற்ப அவ்வப்போது பல பெயர்களால் அழைக்கப்பட்டு வந்தாலும் இயக்கத்தின் குறிக்கோள், ஒன்றே என்பது வெள்ளிடைமலை. இயக்கம் பற்பல காலங்களிலே, பல ஆபத்துகளுக்குள்ளாகி சிக்கித் தவித்து செத்து விடுமோ என அஞ்சிய நேரத்திலெல்லாம் பிழைத்து, வளர்பிறைபோல் வளர்ந்து, போராட்டங்கள் பல நடத்தி, ஒவ்வொன்றிலும் வெற்றியையே கண்டுள்ளது.

என்றாலும், சென்ற ஆண்டின் பிற்பகுதியிலே நமது இயக்கம் திராவிடர் கழகமாக காட்சியளித்த போது இயக்கத்தினின்றெழும்பிய சூறாவளியில் இயக்கத்தையே செயலற்றதாக்கி ஸ்தபிக்கச் செய்து விட்டது. ஆனால் சாகவில்லை.

வேறுபெயர் பூண்டு வீறுகொண்டு முன்னேறி சென்ற 1949-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17-ம் நாளில், சென்னையிலே தியாகராயர் வட்டத்திலே ராபின்சன் பூங்காவிலே, திராவிட முன்னேற்றக் கழகமாக காட்சியளித்தது.

கே. கோவிந்தசாமி

சென்னை மாவட்ட செயலாளர்

நமது இயக்கம் கருவாகி கிளைவட்டம், மாவட்டம், என்ற அங்கங்கள் கொண்டு உருவெடுத்து ஓங்கிவளர்ந்து கொண்டு வருகின்ற வண்ணமேயுள்ளது. நமது சென்னை மாவட்டமும், இயக்கத்தின் ஓர் அங்கமே என்றாலும், இயக்கம் தோன்றியது இம்மாவட்டத்திலே யாதலின் இயக்கத்தின் தலைமைக் கழகம், இங்கேயே இருந்து வருகின்ற வாய்ப்பும் வசதியும் பெற்று, நமது மாவட்டக் கழகம், தலைமைக் கழகத்தின் நேர் பார்வையிலேயே இருந்து தனது தளரா பணியினை ஆற்றி வருகின்றது என்பது சிறப்பின் பாற் பட்டதேயாகும்.

இயக்கத்தின் சக்தி, மூச்சு, ஆவி உணர்வு அத்தனையும் திரண்டுருண்டு ஓருருவாகி திராவிட முன்னேற்றக்கழகமாக பரிணமித்த இருதிங்கள் பதின்மூன்று நாட்களான பிறகு 1949-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4-ம் நாளிலே, சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் தனது 3[illegible]-கிளைக்கழகங்களை அதிகாரபூர்வமாக உள்ளடக்கிக்கொண்டு தனது பணியினை செயல் முறையில் துவக்க ஆரம்பித்தது.

இன்று மாவட்டக் கழகம், 45 - கிளைக் கழகங்களைக் கொண்டு பல்லாயிரக் கணக்கான அங்கத்தினர்களின் ஒத்துழைப்பாலும், எண்ணற்ற மக்களின் ஏகோபித்த பேராதரவாலும், கண்ணியத்தைக் கைவிடாது, பொறுப்பை நன்குணர்ந்து, கட்டுப்பாடு குலையாது, பொறுமையுடன் ஆனால் வீர உணர்வுடன் வெற்றிப் பாதையிலே தனது பணியை ஆற்றி வருகின்றது. இந்த ஓராண்டு காலத்திலே மாவட்டக் கழகத்தின் சார்பில் 6-பொதுக் கூட்டங்களை நடத்தியுள்ளது. அதன் கிளைக் கழகங்களின் சார்பில் நூற்றுக்கு மேற்பட்ட பொதுக் கூட்டங்கள் அரசாங்கம் நாணும்படியும் அன்பர்கள் போற்றும்படியும் நடந்துள்ளன. மாவட்டத்தின் நிர்வாகிகள், இந்த ஓராண்டிலே பத்து முறை கூடித் தங்கள் நிர்வாகக் காரியங்களைக் கவனித்திருக்கின்றனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்த ஓராண்டுக்குள் 1950-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 21, 22-ம் நாட்களில் மாவட்டத்தின் முதல் மாநாட்டை வெற்றி முரசு கொட்ட நடத்திக் காட்டினர், நமது கிளைக் கழக, மாவட்டக் கழக அன்பர்கள்.

தலைமை நிலையக் கட்டிடத்திற்கு மாநாட்டு மிகுதிப் பணத்திலிருந்து ரூ. 3250ஐ தந்துதவியது என்றால், இக்கழகத்தின் பெருங்குணம் தனது ஒவ்வொரு அங்கத்தினருக்கும் உண்டு என்பதோடு, சென்னை நகரிலேயே வசிக்கும் ஒவ்வொரு தி, மு. கழக அங்கத்தினரும் பெருமைப்படவேண்டியதாகும்.

இம்மாவட்டக் கழகத்தின் பெரும் சக்தியே அன்று இந்தியை எதிர்த்து தனது போராட்டத்தை நடத்திக் காட்டிற்று. அதே ஜீவசக்தி இந்த ஓராண்டுக்குள் அப்போராட்டத்தின் வெற்றிச் சங்கையூதி களிப்புக் கூட்டம் நடத்தி மகிழ்ந்தது. மீண்டும் நமது மாவட்டக் கழகம், சென்ற திங்கள் 2-ம் நாளன்று ராபின்சன் பூங்கா பொதுக்கூட்ட வாயிலாக, சமூகநீதி போராட்டப் புரட்சி சங்கை ஊதிவிட்டது.

அண்மையிலே, இத்திங்கள் 9-ம்நாள் வடவர் ஆதிபத்திய சூழ்ச்சியை வேரோடறுக்கக் காட்டிய கருப்புச்கொடி நிகழ்ச்சி, திவாகரை திணரடித்தது.

மீண்டும் ஒரு போராட்டம். எழுத்துரிமையைப் பறித்து கழகத்தின் கர்த்தாவையே சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் தள்ளிவிட்டது அரசாங்கம், இத்திங்கள் 18-ம் நாள் போராட்டம் துவக்கிவிட்டது, மாவட்டக் கழகம்! போர்—போர்தான் இனி! மாவட்டக்கழகம் இனி அயராது. இயக்கம் 34-ஆண்டுகளுக்கு முன்பு துவக்கியபோது கொண்ட குறிக்கோள் வெற்றியுறும் வரை, அயராது, இயக்கம் பணிக்கின்ற கட்டளைகளை எல்லாம் தனது கடமையாகக் கொண்டு சென்னை மாவட்டக்கழகம் தயங்காது பணிசெய்யும்.

இவ்வாண்டு முழுவதும் உள்ளன்புடன் ஒத்துழைத்து கழகத்தின் கண்ணியத்தைக் காத்த இயக்கத் தொண்டர்கள் அனைவரையும் வாழ்த்துவோமாக!

# உழைக்க வாரீர் திரண்டு!

என். வி. நடராசன்

அமைப்புக் குழு செயலாளர்.

திராவிட முன்னேற்றக்கழகம், இருளை விலக்கிக் கொண்டு முகிழ்த்து ஓராண்டு ஆகிறது. இந்த ஓராண்டு முடியும், கழக நாளை நாடு முழுமையும் மகிழ்ச்சியோடு கொண்டாடியுள்ளனர்.

திராவிட சமுதாயத்தில், குறிப்பாக திராவிட இன எழுச்சியுடைய நமது இயக்கம், கட்டுக்கோப்பான அமைப்பு முறையில் இயங்கிவர முடியாத சூழ்நிலை இறுக்கிப்பிடித்து வந்த காரணத்தினாலேயே பல ஆண்டுகளாக நாம் உழைத்தும், நமது கொள்கைகள் நாட்டின் நல்வாழ்வை நிமிர்ப்பவைகளாயிருந்தும் கூட— எவ்வளவு வெற்றியை இத்தனை ஆண்டுகளுக்குள் பெற்றிருக்க வேண்டுமோ, அந்த அளவை எட்டிப் பிடிக்கவில்லை.

திராவிட சமுதாயத்தின் விடுதலை முரசு பல்லாண்டுகளுக்கு முன்னரே ஒலித்தது. முரசம் வலுப்பெறும் நேரத்தில், முரசத்தால் சுயநல லாபம் பெறும் 'ஜரிகைக் குல்லாய்கள்' அதை தங்களதாக்கத் தந்திரம் செய்தனர். கொள்கை வீரர்களின் வீர மூச்சு 'குள்ளநரி'ச்செயலை, புறமுதுகிடச் செய்தது. 'சேலம், செய்தது.

இதுபோல, பற்பல, இடியும் மின்னலும் நமது மாபெரும் இயக்கத்தின் மீது தாக்கிய காரணத்தால், அவைகளை எதிர்த்து நிற்கவேண்டிய பெரும் பொறுப்பு, இயக்க வீரர்களுடையதாயிற்று, ஆகவே, நமது இயக்கம், இன்றுவரை வளர்வதும், தேய்வதுமாக ஊசலாடியே வந்திருக்கிறது. எனினும்: நாம், அழியவில்லை-உண்மையும் நீதியும் நம் பக்க மிருப்பதால்.

ஆனால் இத்தன்மையைப் போலவே என்றும் ஒரு இயக்கத்தை நடத்தி வெற்றி பெற்றுவிட முடியாது. இதற்கு முன்பிருந்த சூழ்நிலைக்கும் இன்றைய நிலைக்கும் எவ்வளவோ மாறுபாடுகளைக் காண்கிறோம், நமது இயக்கத்துக்காக மட்டும் இதைக் கூறவில்லை. நாட்டின் நல்வாழ்வுக்கு ஆக பாடுபடும் இயக்கங்களிலெல்லாம் புத்துணர்ச்சியும், ஜனநாயக உரிமையும்; கொள்கையில் உறுதிப்பாடும் நிலவவேண்டுமென்று, முற்போக்கு சக்திகள் முழக்கமிட்டு வருகின்றன.

ஆகவேதான், திராவிட முன்னேற்றக் கழகமும் அமைப்பு முறை ஜனநாயகம், கொள்கையில் உறுதி, பூஜா உணர்ச்சியற்ற தன் மானத் தொண்டு ஆகியவைகளை அரணாகக் கொண்டு கடந்த ஓராண்டாக பணி புரிந்து வந்திருக்கிறது. மேலும் பணி புரியவும் முற்பட்டுள்ளது.

தி. மு. க., அமைப்புக்குழு செயலாளன் என்ற முறையில் அக்குழுவும், யானும் செய்துள்ள பணியினை எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அமைப்புக்குழு வேலைகள் எல்லாம் முழு வெற்றியளிக்கும் தன்மையில் நடந்தேறியுள்ளதாகக் கூறுவதற்கில்லை. எனினும் நமக்குள்ள வசதிகளை நோக்குமிடத்து கடந்த ஓராண்டில் தி. மு. க. அமைப்புக்குழு ஆற்றியுள்ள தொண்டினை எவரும் குறைகூற முடியாது.

ஒவ்வொரு மாவட்டக் குழுவினரும், அமைப்பாளர் செயலாளர்கள் உள்பட அனைவரும் தங்கள் தங்கள் மாவட்டங்களில், கிளைக் கழகங்களை நிறுவுவதிலே தீவிரப் பணியாற்றிருக்கின்றனர்.

இன்றுவரை 518 கிளைக் கழகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

உறுப்பினர் சேர்க்கும் திட்டத்தில் மட்டும், கிளைக்கழகம் தோற்றுவிப்பதில் காட்டப்பட்ட ஊக்கமும் முயற்சியும் நமது இயக்க வீரர்களால் காட்டப்பட்டிருந்தால், நமது கழகம், அமைப்பு முறை வாய்ந்த ஒரு மாபெரும் கட்சியாக இருப்பதைக் கண்டு, நமது மனம், பன்மடங்கு குதுகலம் அடையும்! இருப்பினும், இந்த ஓராண்டில் சேர்க்கப்பட்டிருக்கும் உறுப்பினர்கள் தொகை—35 ஆயிரம் ஆகும்! ஓராண்டிலே, தவழ்ந்து வரும் குழந்தை நிலையிலே, இது பெரும் மகிழ்வு தரக்கூடியதுதான் என்றாலும், காரியமாற்றக் கூடியகாளைகள் நாம் என்பதைக் காட்ட, விரைந்து விரைந்து உறுப்பினர் சேர்க்கவேண்டும்.

கிளைக் கழகத்தினரும், மாவட்டக் குழுவினர்களும், யாதொரு விஷயங்களையும் எதேச்சாதிகாரமின்றி தங்கள் தங்கள் கமிட்டியின் மூலமே நிறைவேற்றும் பண்பு நம் கழகத்தில் வேரூன்றி, வளர்ந்து வருகிறது. முறைப்படி, கிராம, மாவட்ட, தலைமை நிலையம் வரை கூடுமான அளவு தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. நாளாவட்டத்தில் மேலும் பலனளிக்கக் கூடிய வகையில் இத்தொடர்பு நிலைத்துவிடும் என்பது உறுதி.

25 உறுப்பினர்களுக்கும் குறையாமல் சேர்க்கப்படும் ஊர்களில் மட்டுமே கிளைக்கழகங்கள் நிலவவேண்டுமென்ற நிபந்தனை இன்று கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

எல்லா கிளைகளின் கணக்கு விபரங்களையும்-மற்றும் முக்கிய விஷயங்களையும் கமிட்டிகள் மூலமே பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது.

(அடுத்த பக்கத்தில்)

# அண்ணா சிறைப்பட்டார்!

அண்ணா சிறைப்பட்ட நாள், நம் கழகத்தின் முதல் ஆண்டு முடிந்து இரண்டாவது ஆண்டு துவங்கும் நாள்!

சென்ற ஆண்டு செப்டம்பர் 17 திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கப்பட்டது.

இவ்வாண்டு செப்டம்பர் 18ந் தேதி, இரண்டாம் ஆண்டின் துவக்க நாள், அண்ணா சிறைப்பட்டார்!

கிடைத்தற்கரிய பெருமை! நம் முயற்சி பலன்தரத் துவங்கி விட்டது என்பதை, அண்ணா சிறைபட்டச் சேதியைவிட, வேறெது இவ்வளவு திட்டவட்டமாக நமக்கும் உலகிற்கும் அறிவிக்க முடியும்?

ஒரு ஆண்டு! 500க்கு மேற்பட்ட கிளைக் கழகங்கள் முளைத்தன. 7 மாவட்ட மாநாடுகள் கூடின. கோயில்பட்டியில் கூடிய செயற்குழு, மத்திய சர்க்கார் மந்திரிகள் திராவிடத்திற்கு வரும்போது கருப்புக் கொடி காட்டி பகிஷ்கரிக்க வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றியது. தீர்மானம் நிறைவேற்றிய 10 நாட்களில் சென்னைவந்த மத்திய சர்க்காரின் ரேடியோ மந்திரி திவாகருக்கு சென்னைத் திராவிடர் பல்லாயிரவர் சொரணையற்ற சோற்றுத் துருத்திகளுக்கும் உணர்ச்சி உண்டாகும் முறையில், கருப்புக் கொடி காட்டினர், 13ந் தேதி மகிழ்ச்சிக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது.

**சம்பத்**

அண்ணா சிறை செல்லும் முன்னர் பேசிய கடைசி பொதுக்கூட்டம் அதுதான். 17ந் தேதியும் வந்தது திராவிடத்தின் பெரும் நகர்களில் ஆண்டு விழா பேருணர்ச்சியுடன் கொண்டாடப்பட்டது. 18ந் தேதி காலை உதித்த கதிரவன் அண்ணாவையும் நாம் கூட இருந்த காலத்தில் உதிர்த்த பொன்மொழிகளுக்காக தண்டனைபெற்ற பெரியாரையும் திருச்சி சிறைக்குள் முறையே 12ம் நெம்பர், 13ம் நெம்பர் அறைக்குள் தள்ளிவிட்டே மறைந்தான்!

எதிர்பார்த்தது நிகழ்ந்தே விட்டது! அண்ணா சிறைக்குள்! நாம் வெளியில்! நம்பொறுப்பு மகத்தானது.

அமைதி குன்றாமல் ஆனால் ஆர்வம் குறையாமல் ஆத்திரப்படாமல் ஆனால் வளரும் உறுதியோடு நம் பணியை நாம் தொடருவோம். பேச்சுரிமை, எழுத்துரிமை, ஆகிய அடிப்படை உரிமைகள் இந்த சர்க்காரின் காலடியில் மிதிபட்டு அழிவதை மக்களுக்கு எடுத்துச் சொல்லுவோம். மந்த புத்தியோடு போட்டி போடும் மண்டைக் கர்வம் படைத்த இந்த சர்க்கார் உணர வேண்டும், அண்ணா சிறையில் உள்ளபோது, வெளியில் இருந்தபோது இருந்ததைவிட கட்டுப்பாடும், பிரச்சாரமும் கட்சித் திட்டங்களை நிறைவேற்றுவதில் உள்ள உறுதியும், பல மடங்கு அதிகப்பட்டிருக்கிறது என்பதை. அவ்வகையில் வளருவோம், செயலாற்றுவோம்!

பாசிசம் தலைவர் உருவில் வந்தபோதும் போராடி வெற்றி கண்டவர்கள் நாம். ஆகவே ஆளவந்தாருக்கு புத்தி வரும் வரையில் நாம் அஞ்சாமல், அயராமல், தயங்காமல், தளராமல் கிளர்ச்சி செய்துகொண்டேதான் இருப்போம். இதை ஆட்சியாளர் உணரும் நாள் வெகு தொலைவில் இல்லை.

கடைசியாக ஆட்சியாளருக்கு ஓர் எச்சரிக்கை. எங்கள் இதய பீடத்தில் ஆட்சி செய்யும் அண்ணாவை, நடமாடும் அண்ணாவாக, உயிரோடு ஒப்படைத்திருக்கிறோம். எங்களிடம் திருப்பித் தரும்போது சற்று ஏறுமாறுகள் ஏற்பட்டிருந்தாலும்,...நான் சொல்ல வேண்டியதில்லை, நீங்கள் தந்து தீரவேண்டிய விலை என்ன என்பது விளக்க வேண்டிய ஒன்று அல்ல.

அண்ணா வாழ்க! அடக்குமுறை ஒழிக!

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

நமது பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள், குறைந்தது ஒரு இலட்சம் உறுப்பினர்களையாகிலும் சேர்த்துத் தரவேண்டும் என்று கட்டளையிட்டுள்ளார்.

எதிர்காலம்—நமக்கு இடர் மிகுந்ததாகத்தானிருக்கும். காங்கிரஸ் சர்க்காரின் அடக்குமுறை அம்புகளைத் தாங்க வேண்டியவர்களாக இருக்க வேண்டும்.

அதன் 'அறிவிப்பு' தான் இன்றைய மகிழ்ச்சிகரமான நேரத்தில் 'அண்ணா' அவர்கள் நம்மிடம் இல்லாமலிருப்பது.

ஆகவே, ஆட்சியாளருக்கு அறிவுறுத்தும் நம் பணிகளில் முக்கியமான உறுப்பினர் சேர்க்கும் திட்டத்தை ஒவ்வொரு கிளைக் கழகத்தினரும், தீவிரமாகக் கொள்ளவேண்டும்.

பொதுவாக எல்லா கிளைக் கழகத்தினரும் அமைப்புக் குழு வேலைத் திட்டங்களில் ஆர்வங் காட்டி ஒத்துழைத்து வருவது குறித்து எனது மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்னும் நான்கு மாவட்ட மாநாடுகள் நடைபெற்றதும், சிறந்த முறையில் நாடே கண்டு வியக்கும்படி மாகாண மாநாடு நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது. ஆகவே, பொதுச்செயலாளர் கோரிக்கையை, வெற்றியாக்கி, ஒரு இலட்சம் பேர் கொண்டதாக நமது குழந்தைக் கழகத்தை, வெற்றிச் சிந்து பாடச் செய்வது நமது கடமையாகும்! ஆகவே, வாரீர் திரண்டுழைக்க!! வளர்க உரிமை வேட்கை!!!

# கிளைக் கழகத் தோழர்களுக்கு!

அன்புடையீர்!

"நான் உள்ளே இருக்கும் போது, வெளியே நீங்கள் ஆத்திரப்படாமல், ஆர்வத்தோடு, இயக்கத்தை நடத்திச் செல்கிறீர்கள் என்ற 'சொல்' போதும், எனக்குச் சிறையே சிங்கார மாளிகையாகக் காட்சி தரும்"

என்ற அறிவு மொழிகளை நமக்குக் 'காணிக்கை'யாகத் தந்துவிட்டுக் காவற்கோட்டம் நண்ணியுள்ளார், நமது கழகத்தின் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள்.

அந்தக் 'காணிக்கை'ச் சொற்களைக் கண்ணியமாக காப்பாற்றவேண்டியது, நம்முடைய கடமையாகும்.

அறிஞர் அண்ணா அவர்கள் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் இந்த நெருக்கடி நேரத்தில், கிளைக் கழகத்தினர் எடுத்துக்கொள்ளவேண்டிய உடனடி நடவடிக்கைகள்:—

கண்டனக் கூட்டம் கூட்டுதல்.

அண்ணா அவர்கள் தண்டிக்கப்பட்டதன் காரணத்தை விளக்குதல்.

பேச்சுரிமை, எழுத்துரிமை, கூட்டங் கூட்டும் உரிமை ஆகியவை பறிபோவதை விளக்குதல்.

அரசாங்கத்தின் அடக்குமுறை ஆட்சித்தன்மையைப்பற்றி விளக்கி மக்களை தெளிவுறச் செய்தல்.

மத்திய அரசாங்கத்தின் மந்திரிகள் வந்தால் அவர்களுக்குக்கருப்புக்கொடிகாட்டுதல்ஆகியஇவைஆகும்.

மற்றும் பழக நடவடிக்கைகளான கிளைக்கழகங்களைத் தோற்றுவித்தல், கழகஉறுப்பினர்கள் சேர்த்தல் கழகக் கருத்துக்களையும், திட்டங்களையும் பரப்புதல், கட்டுப்பாடு ஒழுங்கு அமைதி ஆன பண்புகளைக் காப்பாற்றுதல் ஆகிய கடமைகளை நாமெல்லோரும் அயராதுசெய்து வருவோமாக!

அவசிய — அவசர நடவடிக்கைகளுக்கு அவ்வப்போது அறிக்கைகள்விடப்படும்!

இரா. நெடுஞ்செழியன்,
பிரசாரக்குழு செயலாளர். தி. மு. க. தலைமை நிலையம், சென்னை.




முக்கிய செலவுகளுக்கெல்லாம் 'பணமில்லை!' 'பணமில்லை'யென்று பஞ்சநாதம் செய்கிறது இந்திய சர்க்கார்! ஆனால் சாதாரண காஷ்மீருக்காக, இந்திய வருமானத்தையே கொண்டு கொட்டி, படாடோபமாகச் செலவு செய்து வருகிறது, நேரு சர்க்கார்.

இப்படி விரயமாக்கினால் எப்படி இருக்க முடியும் பணம்?

காஷ்மீரப் பிரதமர் அப்துல்லா, மாப்பிள்ளை போலிருக்கிறார். இந்திய நாடோ, அவரது மனைவி போல ஆக்கப்பட்டிருக்கிறது. அதற்கு, வரி வருமானத்தில் ஒரு பங்கு வரதட்சணையாகத் தரப்பட்டுக்கொண்டிருக்கிறது ஒவ்வொரு நாளும் இராணுவச் செலவு, நிர்வாகச் செலவு என்ற பெயர்களில்!

# எங்கே ஜனநாயகம்?

D. S. வேலன்.

"ஆம், பளபளப்பாக இருக்கிறது. கண்ணைப் பறிக்கிறது. நிறம், ஒளி ஆகியவற்றைப் பார்க்கின்றபோது இது, அசல் தங்கம் என்பதில் ஐயமில்லை."

"அல்லவே அல்ல; இது பித்தளை"

"இல்லை; இது ஒரு கலப்பு உலோகம்"

"அப்படியல்ல, இது அழகான முலாம் பூசப்பட்ட பித்தளை"

"சரி, வீண்பேச்சு எதற்கு; எடு அந்த உரைகல்லை' உரை போட்டுப் பார்த்து விடுவோம்"

பித்தளை நகைக்குத் தங்கமுலாம் பூசிக் கடை வீதியிலே விற்கவந்தான் ஒரு எத்தன். அதனைத்தொடர்ந்து நடைபெற்ற உரையாடல் இது.

உரை கல்லிலே உரைத்துப் பார்க்கப்பட்டபோது உண்மை தெரிகிறது, எத்தன் விழிக்கிறான். வேதனையும், வெட்கமும் அவன் முகத்திலே தாண்டவமாடுகின்றன.

கையிலே உரை கல்லை ஏந்தியவனின் கண்கள் கனலைக் கக்குகின்றன.

அக்கம் பக்கத்திலுள்ளோர், எத்தனை ஏறிட்டுப் பார்க்கின்றனர். சிலர் எத்தன்மீது ஆத்திரமும், கோபமும் கொள்கின்றனர்.

தன் நிலைமையைச் சமாளிக்க எத்தன் ஏதேதோ பேசுகின்றான், என்றாலும் எத்தன் எத்தனே என்ற உண்மை அம்பலமாகி விடுகிறது.

ஏறக்குறைய இந்த எத்தனின் நிலைமையிலேதான் இருக்கிறது, இன்றைய ஆட்சி முறை. எத்தன் எங்ஙனம் சொல்லொன்று செயலொன்றாக நடக்கிறானோ, அங்ஙனமே நடக்கின்றனர் ஆட்சியாளரும்.

"இதோ பாரீர் மக்களாட்சியின் மகத்துவத்தை; அதோ காணீர் அடுக்கடுக்காய் திட்டங்களை; நாங்கள் ஜனநாயக வாதிகள். ஜனநாயகமே எமது குறிக்கோள்" என்றெல்லாம் ஓயாது பேசுகின்றனர், எழுதுகின்றனர்.

ஆனால் அதே நேரத்தில்தான், நாட்டின் நாலா பக்கங்களிலும் ஜனநாயகம் பறிக்கப்படும் படலம், நாள் தவறாமல் நடந்து கொண்டிருக்கிறது. ஆட்சியாளரின் ஏட்டிலே காணப்படுவது ஒன்று; நாட்டிலே நடப்பது மற்றொன்று; அதற்கு அவர்கள் காட்டும் காரணங்கள் வேறொன்று.

"இந்திய சர்க்கார் மதச் சார்பற்ற சர்க்கார்" இது ஏட்டிலே உள்ளது.

மதச் சின்னங்கள், மதச் சடங்குகள், மதவிழாக்கள் முதலியவற்றுக்கு ஆக்கமளித்தல்—இது நாட்டிலே நடப்பது.

"மத சுதந்திரம், அளிக்கிறோம்" இது அவர்கள் கூறும் காரணம்.

X X X

"சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் இவையே ஆட்சியாளரின் குறிக்கோள்" இது ஏட்டிலே உள்ளது.

சம சந்தர்ப்பம் அளித்து, சமத்துவத்துக்கு வழிகோலவல்லவகுப்புவாரிப் பிரதிநிதித்வம் போன்ற சமூக நீதிகளை, சட்டத்தின் துணை கொண்டு சாய்ப்பது.—இது நாட்டிலே நடப்பது.

"சாதி, மத வேற்றுமைகளுக்கு இந்திய அரசியலில் இடமில்லை" இது அவர்கள் கூறும் காரணம்.

X X X

"பேச, எழுத, கூட்டம்கூட எல்லோருக்கும் சுதந்திரம் உண்டு" இது ஏட்டிலே உள்ளது.

அடிக்கடி 144; பகுத்தறிவு ஏடுகளைப் பறிமுதல் செய்தல்; பத்திரிகைகளுக்கு ஆயிரக்கணக்கில் ஜாமீன் கேட்டல், 153-A சட்டத்தைக் காட்டி, அறிவுநூலியற்றும் ஆசிரியர்களை அடக்க முயல்வது, அச்சகங்களை மிரட்டுவது, ஆசிரியர்கள் மீது வழக்குத் தொடுத்தல், சிறைப்படுத்தல், சிறையிலே மொட்டை அடித்தல்—இவை நாட்டிலே நடப்பன.

"அமைதிக்குப் பங்கம் வராமல் பாதுகாக்கிறோம்" இது அவர்கள் கூறும் காரணம்.

* X *

இம்மாதிரி, ஆட்சியாளரின் போக்கை அலசி ஆராய்ந்து கொண்டேபோனால், இந்நாட்டு ஜனநாயகத்தின் குட்டு அம்பலமாகிவிடும்.

எடுத்ததற்கெல்லாம் வகுப்புத்துவேஷம், பொது ஜனபாதுகாப்பு, என்றுசொல்லிஜனநாயகத்தைக் சிறுகச் சிறுகக் கொலை செய்துகொண்டே வருகின்றனர் ஆட்சியாளர். ஆட்சியாளரின் இந்தத் திருப்பணிக்கு அல்லாடிகளின் ஆதரவும் அமோகமாக இருந்துவருகிறது.

மேலே கூறப்பட்ட எத்தன், பித்தளைக்குத் தங்க முலாப்பூசி, அதனைவிலைகூற கடைவீதி வந்தான். அது போலவே இந்த ஏகாதிபத்திய எத்தர்கள், தமது எதேச்சாதிகார ஆட்சிக்கு ஜனநாயக முலாம்பூசி, அதனை மக்கள் மன்றத்திலே விலைகூற வந்துள்ளார்போலும்.

இத்தகைய ஏகாதிபத்திய எத்தர்களின் ஜனநாயகத்தை எடைபோட்டுப் பார்க்க—அலசி ஆராய்ந்து பார்க்க தோன்றியுள்ள ஆராய்ச்சிக் கூடம்தான் திரா

விட முன்னேற்றக் கழகம். அந்த ஆராய்ச்சிக் கூடத்திலே, பகுத்தறிவுஎன்னும் உரைகல்லிலே இந்தியஆட்சியாளரின் ஜனநாயகத்தை உரைபோட்டுப்பார்க்க ஆரம்பித்துவிட்டனர் திராவிட மக்கள்.

நாட்டின் நலிவுதீர, நல்லாட்சி மலர "திராவிட நாடு திராவிடருக்கே" என்பதை இதயகீதமாகக் கொண்டு அறப்போர் தொடுக்க ஆரம்பித்துவிட்டது தி. மு. கழகம்.

தி. மு. கழகத்தின் இந்தப் பணி, இந்திய ஜனநாயகத்தை உரைபோட்டுப் பார்க்கும் ஓர் உன்னதப்பணி. அகிம்சா வீரர்களின் ஆட்சியின் தன்மையை அளவிட்டுப்பார்க்கும் ஓர் அளவு கோல்.

எனவே, வகுப்புத்துவேஷம் என்ற வறட்டுவாதம் பேசியோ, அமைதிக்குப் பங்கம் விளைப்போர் என்ற அர்த்தமற்றக் காரணத்தைக்காட்டியோ திராவிடத்தின் எழுச்சியை அடக்கிவிடமுடியாது, அடக்க நினைப்பதும் பைத்தியக்காரத்தனம்.

"எங்களுக்குப் பலாத்காரத்தில் நம்பிக்கை இல்லை. பதவி பெறுவதல்ல எமது குறிக்கோள்" என்று, பல தடவை கூறிவந்திருக்கிறது, கூறியும் வருகிறது தி.மு. கழகம். அதனை, செயல் அளவில் காட்டியும் வருகிறது. ஆகவே, பொருத்தமற்றக் காரணங்களைக்காட்டி, ஜனநாயகப்போர்வையில் ஒளிந்துகொண்டு, தி. மு கழகத்தின்மீது மேலும் அடக்குமுறை அம்புகளை வீசலாம் என்று ஆட்சியாளர் நினைப்பார்களாயின், அவர்கள்தம்மைத்தாமே ஏமாற்றிக்கொள்வதாகவே முடியும். அது மட்டுமல்ல, அப்படிச்செய்ய முனைன்றால் அவர்கள் நிலை மிக மிகக் கேவலமாகிவிடும். அகிலஉலகும் இவர்களைக் கண்டு நகைக்கும்படியான நிலை நிச்சயம் ஏற்பட்டுவிடும். முடிவில், பித்தளையைத் தங்கம் என்றுகூறி, விற்பனை செய்ய கடைவீதி வந்தவனின் கதிதான், இந்த ஆட்சியாளருக்கும் நேரும்.

எனவே, தி. மு. க. தொடுக்கும் அறப்போர்களை ஜனநாயகக் கண்கொண்டு பார்த்து, ஆவனசெய்யவேண்டியது ஆட்சியாளர்கடமை. தி. மு. க. ஜனநாயகத்தைப் பரீட்சை செய்து பார்க்க—அதன் புனிதத்தன்மையை புடம்போட்டுப் பார்க்கத் தோன்றியுள்ள மாபெரும் சக்திவாய்ந்த ஒருஇயக்கம். இந்தஇயக்கத்திடம்காட்டும், கண்ணியம், மரியாதை பொறுப்புணர்ச்சி ஆகியவற்றைப்பொருத்தே இருக்கிறது, இந்திய ஆட்சி முறையின் எதிர்கால வாழ்வு. இன்னும் சிலஆண்டுகளில் எப்படியும் திராவிடம் பிரியத்தான் போகிறது. பிரியாமலிருக்க வழியில்லை. இருக்கவும் முடியாது. இந்தப் பிரிவினையால், இந்திய உபகண்டத்துக்கு ஏதோ கேடு வந்திடுமோ என்று அரசியல் அறிந்த யாரும் அஞ்சத்தேவையில்லை. எனவே, நல்லமுறையில்—ஜனநாயக முறையில் எங்களுடைய நாட்டை எங்களிடம் ஒப்படைக்க வாரீர் என ஆட்சியாளருக்கு அறிவுறுத்துகிறது திராவிடம். ஓராண்டைக்கடந்து, அடுத்த ஆண்டிலே அடிவைக்கும் தி. மு. கழகம் ஆட்சியாளருக்கு நினைவூட்ட விரும்புவது இதுதான். அதுமட்டுமல்ல 'எங்கேஜனநாயகம்?" எனவும் ஆட்சியாளரை அறைகூவிக்கேட்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம்!

———

# மல்லிகைத் தோட்டம்

[ தில்லை. வில்லாளன் ]

மல்லிகை மணம் கம்மென்று வீசியது. அவன் தளர் நடைபோட்டு நடந்துவந்து கொண்டிருந்தான். அவனையுமறியாமல் ஒரு புதுவகை உற்சாகம், அவனது மனமேடையில் நாட்டியமாடிற்று—அதன் பிரதிபலிப்பு அவன் முகத்தில் தெரிந்தது.

இருள் முழுவதும் ஓடிவிடவில்லை. இருளும் பகலும் தங்கள் தழுவலிலிருந்து பிரிந்துவிடவில்லை.

இருளும் இருக்கிறது—ஒளியும் பரவுகிறது—ஆனால் இருளாகவும் இருந்துவிடவில்லை. ஒளி முழுவதும் வந்துவிடவில்லை.

மல்லிகை மணம், அவனது களைப்பை விரட்டிவிட்டது. களிப்பைத் திரட்டிவிட்டது.

ஒரு கணம் நின்றான்—அமைதியாக! அடுத்த கணத்திலே அவனையுமறியாமல், ஒரு வெறி வேகங் கொண்ட ஆவல், இந்த மல்லிகைத் தோட்டத்தினுள் நுழைந்து, செடிகளைத் திருத்தி, நீர்ப்பாய்ச்சி, பாத்திகளைச் சரிப்படுத்திட வேண்டுமென்று! — நின்றான், யோசித்தான்.

ஒளிபரவத் தொடங்கிற்று. மலர்த் தோட்டம் கொஞ்சம் தெளிவாகத் தெரிந்தது!

மல்லிகைச் செடிகள் இருந்தன. எனினும் காளானும், கள்ளியும் ஏராளம் இருந்தன. வேண்டாத புதர்கள் வேணமட்டும் மண்டிக் கிடந்தன. ஒரு பக்கத்திலே கரு நாகப் புற்றுகள்—இன்னொரு இடத்தில் பயங்கரப் படுகுழிகள்! பாதைகள் சரியாக இல்லை, பாத்திகள் ஒழுங்காக அமையவில்லை. நீர் இறைக்க உள்ள கிணறோ பாழ்பட்டிருந்தது. ஏற்றம் ஒழுங்காக அமையவில்லை. அவனுக்கு நா ஊறிற்று. அவனை மேலும் மேலும் எண்ண வானத்தில் இலட்சிய சிறகுகளைக் கட்டிக்கொண்டு பறந்து வரத் தூண்டியது, குளிர்ந்த தென்றலோடு கலந்து வந்த மல்லிகை மணம்!

அவன் எண்ணமிட்டான்—பிறகு களிப்பால் ஆடினான், பாடினான்!

காட்டு மல்லிகை, கவனிப்பாரற்றுக் கிடந்தது. அவன் அந்த மல்லிகைத் தோட்டத்தினுள் நுழைந்து செல்ல முடிவு செய்தான்.

மல்லிகைத் தோட்டம்—மணம் பரப்புகிறது! அவனுக்கு அதில் அதிக அக்கரை வந்ததற்கு வேறு காரணமும் உண்டு, நிச்சயமாக! அந்தப் பகுதியிலே ஓரே முடைநாற்றம்—சாக்கடையின் துர் நாற்றம்! சாக்கடையைத் தூர்த்து, மல்லிகைத் தோட்டத்தை விரிவு படுத்திவிட்டால், அங்கு சுகம் பரவும், சோகம் பறந்தோடும் என்று எண்ணினான்.

இருள் ஓடிவிட்டது, ஒளி தெளிவாகிவிட்டது!

உள்ளே நுழைந்தான் அவன்.

குண்டு மல்லிகைகள் பூத்துக் குலுங்கிச் சிரித்தன. அவன் இதழ் கடைக் கோடியில் ஒரு சிறு முறுவல் தோன்றி மறைந்தது.

சுகங் கெடுக்கும், சாக்கடையும், முடைநீர்க்கால் வாய்களும் பெருத்துப்போன அந்தப் பகுதியிலே வாழ்ந்து அலுத்துப் போனவன் அவன்—அதனை எப்படி மாற்றுவது என்று எண்ணி எண்ணி, ஆயிரந் திட்டங்கள் போட்டிருப்பான். அவன் மனதிற்கு அன்று வந்த திருப்தி என்றுமே வந்ததில்லை. ஏனெனில், மலர் மணத்தைப் பரப்பும் மார்க்கம் மிகச் சிறந்த வழியென்று, அவன் இதயம் சொல்லத் தொடங்கிவிட்டது.

“என்னைப் பார், என் அழகைப் பார், நான் தரும் இன்ப மணத்தை நுகர்—பிறகு சொல்! உன்னைப் போன்றவர்கள் என்னைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டார்கள் என்று! கவனிப்பாரற்றுக் கிடக்கிறேன் நான், ஆனால் காலமும், சூழ்நிலையும் எனக்காகக் காத்துக் காத்து ஏங்குகிறது என்ற உண்மையை! மல்லிகை மணம் விரும்பாதார் யாருமில்லை. ஆனால் நானிருக்கும் தோட்டமோ, திருத்தாத பகுதியாக இருப்பதால், மக்கள் நுழைவதற்கே அஞ்சுகிறார்கள். நீயே கூட யோசிக்கிறாய் அல்லவா?” என்று கூறிற்று ஒரு மலர்.

“உன்னால் முடியும்—நீ முனைந்தால் இம் மலர்த் தோட்டம் விரியும், பெரிதாவது மட்டுமல்ல, பெரும் பயன் தரும் பொக்கிஷமாகும். ஊரார் என் குலத்தைக் கொத்து கொத்தாக ஏற்பர். உன்னையும் புகழ்வர்” என்று பேசிற்று, அதற்குப்பக்கத்திலிருந்த வாடிய மலர்—ஆனால் இன்னும் செடியிலிருந்து இற்றுவிழவில்லை!

“நீ மட்டும் இத்தோட்டத்தைக் கவனிக்கத் தொடங்கிவிட்டால், இந்த வட்டார வாலிபர்கள் எல்லோரும் உன் பக்கம் வந்துவிடுவார்கள். இந்த மல்லிகைத் தோட்டமே மாற்றாரின் மருட்சிக்குக் காரணமாகிவிடும்” என்று அடுத்து அறிவுரை தந்தது வேறொரு மல்லிகை.

மலர்கள் பேசுவது போலத் தோன்றின, அவனது உணர்ச்சிகளை வழியவிடும் கண்களுக்கு முன்னால்! அவன் நடந்து சென்றான் மேலும்!

ஒளி மிகவும் விசாலமாகிவிட்டது. தோட்டத்துக்காரர் யாரேனும் உண்டா என்று பார்க்கலாம்! அவன் மனதில் இந்த எண்ணம் திடீரென தைத்தது.

* * *

“எனக்கு மலர் என்றால் உயிர்”

“உன் முகமே சொல்கிறதே, அதை”

“எனக்கு மட்டுமல்ல, மல்லிகை மணம், மக்கள் எல்லோருமே விரும்பி ஏற்பது”

"ஆம், தெரியும் எனக்கும்!"

"பின், இம்மலர்த் தோட்டத்தை மட்டமாக வைத்திருப்பதேன்?"

"முடிந்த அளவு செய்தேன் — செய்கிறேன்— நான் என்ன உன்னைப்போல கட்டிளங் காளையா?"

"மன்னிக்க வேண்டும், உங்கள் உழைப்பால் இந்தக் காட்டிலும் நறுமணம் விரிக்கும் நல்ல மலர்கள் இருக்கின்றன."

தோட்டக்காரக்கிழவரை அவன் கண்டான். பேசினான். அக்கிழவரோ சலிப்பு–வெறுப்பு–அலுப்பு அத்தனையும் கலந்து பேசினார். அவனோ, அவருக்கு நம்பிக்கையூட்டும் வகையிலே கேள்வி மேல் கேள்வியை நீட்டினான்.

கிழவர் பெருமூச்சு விட்டார்!

"உன்னைப் போன்ற ஒருவன் என்னுடனிருந்து விட்டால்......இத் தோட்டம் இப்படியா இருக்கும்! ......ஹூம்......" இப்படி நீண்ட மூச்செறிந்தார்.

"மலர்க் காட்டினைத் திருத்தியமைக்க மனங் கொண்டுவிட்டேன். ஆகவே தயங்கவேண்டாம். இனி நான் உழைப்பேன்" என்றான் அவன்.

கிழவர், வந்த குமரனைக் கட்டியணைத்துக் கொண்டார். மல்லிகை மலர்கள் குதூகலத்தால் கூத்தாடின. அங்கு புகுந்து செல்லும் காற்றின் மூலம் இந்தச் செய்தியை சொல்லி யனுப்பிவிட்டன!

* * *

ஊருக்குள்ளே நுழைந்தான், வாலிபர்கள் அவனைச் சூழ்ந்துவிட்டனர். அவரவர் உள்ளத்தைப் பொத்துக்கொண்டு வரும் பல சந்தேகங்களைக் கேட்டனர். அவரவர் உணருகிற வரையில் விடைசொன்னான்.

"முடைநாற்றத்தை விரட்டியடிக்க என்ன வழி?"

"வழி இருக்கிறது. உங்கள் ஒத்துழைப்பு மட்டுமிருந்து விட்டால், துர்நாற்றம் தூரவிலகிவிடும். நறுமணங் கமழும் நல்லதொரு மலர் வனமாக இருக்கும், நாம் வாழும் பூமி"

"உங்கள் வழி சரியென்று எங்கள் மனதில் பட்டால் நிச்சயம் உம் விரலசைந்த பக்கம் வேலை செய்யத் தயார்"

"துர்நாற்றம் போகவேண்டும்"

"ஆம், அவ்வளவுதான்"

"சுகாதாரம் பெருக வேண்டும்"

"நிச்சயமாக!"

"நோய் கூடாது, பிணி வேண்டாம்!"

"ஆம், ஆம்!"

வாலிபரிடையிலே அவன் நின்றுகொண்டிருந்தான். ஒரு மல்லிகை மலரை எடுத்துத் தன் கரத்தின் மீது வைத்துக்கொண்டான்.

"பார்த்தீர்களா, வாலிப நண்பர்களே! ஒரு மலர், இந்த ஊரையே வாழ்விக்கும். இம்மாதிரி மலர்கள் பூத்திடும் தோட்டத்தையே, முடைநீர்க் கால்வாய்களை அடைத்துவிட்டு அதன்மீதே அமைத்துவிட்டால், நாம் நினைத்தது நடக்கும்" என்றான் அவன். எல்லோரும் அவன் பக்கம் வந்துவிட்டனர். பிறகு கூட்டமாக தோட்டத்தை நோக்கி நடந்தனர்.

* * *

கிழவர் பூரித்துப்போனார். புதிதாக வந்தவன் மலர்க்காட்டை எவ்வளவு அழகாக மாற்றி அமைத்துவிட்டான். தோட்டத்திலே வேலை செய்ய எத்தனை பேர், தாங்களாகவே வந்து குவிகிறார்கள்! தங்கள் உயிர், உடல், பொருள், எல்லாவற்றையும் அதற்காகத் தரத் தயங்கவுமில்லை அவர்கள்! கிழவர், அவனைத் தட்டிக் கொடுத்தார். பாராட்டினார். புகழ்ந்தார்.

"உன்னால்தான் இந்தத் தோட்டம் இப்படி மாறிற்று! எத்தனை உழைப்பாளிகள், எவ்வளவு உற்சாகத்தோடு உழைக்கிறார்கள்" என்றார் கிழவர்.

"என்னால் இல்லை. உங்கள் மலர் தந்த மணத்தால் நடக்கிற விந்தை" என்றான் அவன்.

கிழவரோ, தோட்டத்தைச் சுற்றிச் சுற்றிவந்தார். மல்லிகைத் தோட்டத்தில் இப்பொழுதுள்ள செடிகளைப் பார்த்து, அவரே வியந்துகொண்டார். புது வகையான பயிர் முறைகள் பலவற்றைப் பயன்படுத்தி, விதவிதமான மல்லிகைகளை வளர்த்திருந்தான். தோட்ட வேலையில் பழக்கப்பட்ட கிழவருக்கே புரியவில்லை. அவன் அவைகளை எடுத்து விளக்கினான்.

கிழவருடன், அவன் வருவதற்கு முன்னால் இரண்டொருவர் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் கிழவர் அவனைப் பெருமையோடு அறிமுகப்படுத்தினார்.

அவர்கள் உள்ளத்திலே விஷம் பரவத் தொடங்கிவிட்டது. நேற்று வந்தவனுக்கு இத்தனை ஆதரவு, பாராட்டென்றால், நெடுநாள் இருந்தவர்களுக்குக் கொஞ்சம் பொறாமை வந்திடச் செய்வது இயற்கை தானே!

மலர்க்காட்டை எண்ணி கிழவர் மகிழ்ந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அவர்கள் அவரை அணுகினர்.

"இந்தத் தோட்டத்து மல்லிகைக்கு ஊரிலே பெரிய கிராக்கிங்க!"

"அப்படிங்களா"

"ஒரு சரம் காலணா, ஐந்தணாவுக்குக்கூட விற்கிறுங்க!"

"ஆகாங்..."

"இந்த ஊர்க் கோயிலிலே, ஒப்பந்தம் பேசிக் கொள்ளணுமின்னு கூடக் கேட்டாங்க!"

"நிறைய பணம் வரும்னு சொல்லுங்க!"

"பணத்திற்கு என்னங்க, கோயில் தர்மகர்த்தா பெரிய கோடீஸ்வராருங்க, பணத்தைப் பணம்னு பார்க்க மாட்டாருங்க. அதுவும் கோயில் காரியமின்னு, பணத்தைத் தண்ணி மாதிரி செலவு பண்ணுவாருங்க!"

"எதுக்கும் அவனை ஒரு வார்த்தைக் கேட்டுகிட்டு!"

"தோட்டம் உங்களுடையது!"

"தோட்டம் என்னுடையதானாலும், உழைப்பு அவனுடையது, அதுவும் இப்பொழுதிருக்கும் புது நிலைக்குக் காரணம் அவன்தானே!"

"நீங்கள் உழைக்கவில்லையா?"

"உழைக்கிறேன் இன்னமும்—ஒவ்வொரு வேலையிலும் குற்றமும், குறையும் சொல்லிக்கொண்டு புகுந்து புகுந்து செய்கிறேன். இருந்தாலும், அவன் வரவால், என் தோட்டத்தின் வாழ்வில் ஒரு புது நிலை

ஏற்பட்டுள்ளது என்பதை, என்னால் மறுக்க முடிய வில்லையே!"

"நாம் என்ன செய்கிறோம். பணத்தைப் பெருக்கவும், பாதுகாக்கவும் வழி தேடுகிறோம். இதற்கென்ன அவன் யோசனை வேண்டிக் கிடக்கிறது!"

குத்தி விடுவதில் பேர் போனவர்கள் அவர்கள்.

அவர்கள் வாதம், கிழவருக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் பிடித்திடத் தொடங்கிற்று! சரியென்று தலையசைத்துவிட்டார். கோயிலுக்கு மலரை அனுப்பத் திட்டமிட்டார். முடிவு மட்டும் செய்யவில்லை.

* * *

தோட்டத்தில் வாலிப உழைப்பாளிகள் ஏராளமாகக் கூடித் தங்களுக்குரிய பணிகளில் ஈடுபட்டிருந்தனர். சில பெண்கள் குடமேந்தி, நீர் முகந்து வந்த வண்ணமிருந்தனர். சில வாலிபர்கள், அவைகளை வாங்கிச் செடிகளுக்கு ஊற்றினர். சிலர் களைகளை நீக்கினர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலையிலீடுபட்டிருந்தனர்.

இப்பொழுது அவன் வந்தான். அவனை எல்லோரும் ஆர்வத்தோடு வரவேற்றனர்.

அவன் அன்று மகிழ்ச்சிப் பிம்பமாகக் காட்சி தந்தான். அவனையுமறியாமல், அவன் உள்ளத்தில் உவகை கூத்தாடிற்று.

ஆண்டுகள் பலவாக அவன் பாடுபட்டான். அதன் விளைவை அவன் பார்க்கிறபொழுது, பூரிப்பு வராமலா இருக்கும்? உவகை ஊறாமல் போய்விடுமா?

பலவாண்டுகளுக்கு முன்னால், அத்தோட்டத்து ஓரம் நின்று கண்ட காட்சி அவன் மனத்திரையில் நின்றது. இன்றுள்ள நிலையும் பார்த்தான். உழைப்பில் வாரா உறுதிகள் உளவோ என்ற பொன்மொழி, அவன் இதயத்தில் பட்டுத் தெறித்தது!

இப்பொழுது அத்தோட்டத்தில் பாம்புப் புற்றுகள் இல்லை ஆனால், அதை யொழிக்க அவன் நடத்திய போர்—இன்று நினைத்துக்கொண்டால் கூட மயிர் கூச்செறிகிறது! தோட்டத்துக் கிழவர் கூட பயந்து நடுங்கி விட்டார் "எனக்குத் தோட்டத்து வேலையே வேண்டாம்—இதை விட்டொழித்து வெளியேறி விடுகிறேன்" என்றே கூறிவிட்டார். அவன்தான் அவரைச் சமாதானப் படுத்தி, மருடி ஊதி, வாலிப உழைப்பாளிகள் எல்லோரையுங் கூட்டி நிறுத்திக்கொண்டு, எல்லா நாகங்களை அடித்து விரட்டினான். அதில் எவ்வளவு பெரிய பயங்கர சூழ்நிலை — கள்ளியை, காளானை ஒழிக்க அவன் பாடுபட்டதை எண்ணினால் கூட, ஆச்சரியம் வந்து தழுவுகிறது! அந்தக் காளான்களும், கள்ளிகளும் உயிர் பெற்றிருந்தால், அவனை நிச்சயமாக ஒழித்துக் கட்டாது விடாது!

ஒரு நாள், ஒரு கருநாகம் அவனைப் பாய்ந்து கொத்தவந்த நினைவு வந்தது — அவன் உடம்பு சிலிர்த்துவிட்டது!

நீர் இறைக்கும் போது ஒரு நாள் அந்தப் பெருங் கிணற்றில் விழுந்துவிட்டான்......

ஒரு செடியைப்பிடுங்கி, வேறொரு இடத்தில் நடும் பொழுது, வேலியிலிருந்த ஒருவிஷப்பூச்சிக் கடித்து விட்டது......

பொழுது விடியுமுன் நுழைந்து, பொழுதுபோயும் இருட்டிலும் வேலை செய்துள்ளான் பல நாட்கள்...

மலர் விற்பனையில் ஏற்பட்ட தகராறினால் தோட்டத்தையே அழித்துவிட்டு, இந்தக் கிழவரை ஒழித்துவிடத் திட்டமிட்ட பல சூதுக்காரர்களை எதிர்த்து, தன் உயிரையே பணயம் வைத்து வேலை செய்திருக்கிறான்...

இப்படிப் பல பல எண்ணங்கள், அவன் மனக் கடலில் அலை மோதின.

"இவ்வளவு பாடுபட்டு, மலர் வனத்தை வளர்க்கிறோம். முடை நாற்றம் போயிற்று. ஊரார் முகத்தில் உற்சாகம் வழிகிறது. மக்கள் உள்ளம், மகிழ்ச்சியால் மலர்கிறது"

"இந்த உழைப்பு வீண் போகாது, நல்ல பயனைத் தரும்"

"மலர், துர்நாற்றத்தைப் போக்குவதோடு மட்டுமல்ல, புதிய வலிவை மக்களுக்குத் தரும்"

"உடல் வலிமை மட்டுமல்ல, உள்ள உறுதியைத் தரும்"

"மலர்க்காடு, எதிரிகளுக்கு ஓர் போர்க் கூடாரமாக இருக்கும்"

"நோய்களை விரட்டியடிக்கும்!"

"சோர்வைத் துரத்தும்"

"கவலையை மாற்றும்"

"ஏக்கத்தைப் போக்கும்"

"துக்கத்தை நீக்கும்"

இப்படியெல்லாம் அவன் கனவு கண்டான்.

அவனால் அங்கு வந்து கூடிப் பணியாற்றும் இளந் தோழன் ஒருவன் அவனருகில் வந்தான்.

"இந்த மலர்களை எல்லாம்,தோட்டத்துப்பெரியவர் என்ன செய்கிறார்"

"மக்கள் விரும்பி ஏற்கின்றனர்—கொடுக்கிறார்"

"பணத்திற்கா?"

"பின் உழைப்பிற்கு ஊதியம் வேண்டாமா?"

"ஊதியம் மட்டும் போதாது—உபயோகமும் வேண்டும்"

"வாங்குபவர்கள் அதை என்ன செய்கிறார்கள் என்று தெரியுமா?"

"ஏன்...மங்கைமார் கூந்தலிலே செருகிடுவர், குமரர் அவர்களுக்குத் தெரியாமல் முகர்ந்து மகிழ்வர். குழந்தைகள், சின்னஞ் சிறு சடைகளில் சூடிமகிழ்வர். மணக்கும் தம்பதிகள் மார்பிலே புரளும். பேசிடும் பெருமக்கள் கழுத்திலே விழுந்து கிடக்கும்..."

"ஆனால், அழுக்கேறி விளக்கெண்ணை வாடையடிக்கும் சிலைகளுக்கும் போகுமே!"

"அது மட்டும் கூடாது! நாம் உழைத்து, நாட்டு மக்கள் மாட்டித் தவிக்கும் கெட்ட நாற்றத்தை விரட்டப் பயன்படவேண்டிய மலர்களை அந்த சிலைகளுக்குப் போட்டு, தெய்வத்திற்கு அவமானம் தேடவேண்டாம்"

இப்படி வாலிபரிடையே அவன் பேசிக்கொண்டிருக்கையில், ஒரு வாலிபன் சுருக்கென்று கேட்டான்.

"இவ்வளவும் பேசுகிறீர்களே, தோட்டத்துப் பெரியவர் அப்படிச் செய்ய விரும்பினால், நீங்கள் தடுக்க முடியுமா?"

"இந்த எண்ணத்தை வளர்த்தவரே அவர் அவரா அப்படிச் செய்வார், பைத்தியமப்பா நீ"

"பணம் ஏராளம் வருமென்றால்..."

"கொள்கையை விட்டா, பணம் தேடுவது, பாதுகாப்பது!"

இப்படி உரையாடல் ஓடிக்கொண்டிருக்கையில், தோட்டத்துக் கிழவர் அங்கு வந்தார். "வேலை நடக்கட்டும், வெட்டிப் பேச்சு வேண்டாம்" என்று சிரித்துக் கொண்டே சொன்னார்.

* * *

"இது உண்மையா?" என்று ஆத்திரத்தோடு கேட்டான் அவன்.

கிழவர் திரு திருவென விழித்தார். அவன் அடங்கிவிடவில்லை. உரத்த குரலில் பேசினான்.

"ஐயா பெரியவரே, உங்கள் தீர்மானம் தீதானது—மாற்றிக்கொள்ளுங்கள். இத்தனை நாட்கள் பாடுபட்டு, கடைசியில் சிலைக்குக் கொண்டு சமர்ப்பிக்க ஒப்பந்தம் பேசிவிட்டீர்களே! இது கூடாது என்று ஆயிரம் முறைகள் என்னிடம் கூறியிருப்பீரே, அத்தனையும் மறந்துவிட்டீரா? கொஞ்சம் யோசியுங்கள். ஊரார் தூற்றுவார்களே! துர்நாற்றம் போக்கவே நல்ல மணம் பரப்பும் மல்லிகைத்தோட்டம் ஏற்பாடுசெய்துள்ளோம் என்று சொல்லியிருக்கிறோமே! அதனை நம்பித்தானே பலர் ஊதியமுமின்றி நம்மிடம் வேலை செய்கிறார்கள். அவர்கள் சீறிடுவார்களே, இந்தச் செய்தியைக்கேட்டால்!"

"தோட்டம் என்னுடையது—துடுக்குத்தனமாகப் பேசாதே!"

"ஐயோ! இதுவா துடுக்கு—அடுக்குமா, உமக்கு? இந்த அக்கிரமத்தைச் செய்ய எப்படி மனந் துணிந்தீர்? மலரை, மண் குவியலாக்க எப்படித் திட்டமிட்டீர்? அதன் பலனைப் பாழாக்க எப்படி ஒப்பிற்று உம் உள்ளம்? என்னால் புரிந்துகொள்ள முடியவில்லையே!"

"பித்தன்போல பேசாதே—யோசி! பணமடா, பணம், செல்வம், பொருள்...அதை மறக்காதே!"

"பணம் வேண்டாமென்று சொல்லவில்லையே! அதற்குக் கொள்கையை விடவேண்டுமா? யோசிக்க வேண்டியது நானல்ல, நீங்கள்! நன்றாக யோசியுங்கள்! நாட்கணக்கில் யோசியுங்கள்!" அவன் அழவில்லை—அவ்வளவுதான். அந்த அளவிற்கு உள்ளம் நொறுங்கிவிட்டது! ஆனால், அதற்கு எதிர்மாறாக கிழவர் கோபத்தின் உச்சநிலைக்குப் போய்விட்டார்.

அவர் இதயத்தில் சிறு பொறியாக இருந்த பொறாமை, பெருந்தீயாகிவிட்டது. அவருக்கு அவனைவிட அதிகமாக உழைப்பாளிகளிடம் மதிப்பு தேடவேண்டும் என்று ஆசை—தோட்டத்தில் அதிக தகுதிகள் அவனுக்குண்டு, கிழவருக்கு, வேண்டிய தகுதிகளிலேயே சில, கிடையாது! அவருக்கு அவனைக் காட்டிலும் இருந்த தகுதி ஒன்றே ஒன்று—அதுதான் அனுபவம்! அதுவும் வயது முதிர்ந்துவிட்ட காரணத்தால் இயற்கையாகக் கிடைக்கக்கூடிய தகுதிதான்!

அவருக்கு, ஏனோ, வேண்டாத பொறாமை வளர்ந்து கொண்டேவந்தது. அதனைவெளிக்குக்காட்டிக்கொள்ளாமல் அவர் வேறு வகையில் பதில் கூறினார்,

"தோட்டம் என்னுடையது — அங்குள்ள மலர்களும் என்னைச் சார்ந்தவை! மலர் விற்பனை என் சொந்த விஷயம். கோயிலுக்குத்தான் கொடுப்பேன், இல்லை, குப்பைத் தொட்டியில்தான் கொட்டுவேன், நீ யார் கேட்க?" என்று கேட்டுவிட்டார், அதன் பின் விளைவை சிந்திக்காமல்!

"சரி, ஐயா, நான் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டு வந்தான், தன்னிருப்பிடத்தை நோக்கி!

x x x

இருள் சூழ்ந்த நேரம்—வானத்திலே நிலவும் இல்லை. தன்னந் தனியனாக அவனது குடிசையிலே, கயிற்றுக் கட்டிலிலே படுத்துக் கிடந்தான்.

அவனது இளந் தோழர்கள் ஒவ்வொருவராக அங்கு வந்துசேர்ந்தனர். யாரோடும் அவன் பேசவில்லை. பேச முடியவில்லை! நல்ல காய்ச்சல்—நெருப்பாய்க் காய்ந்தது அவன் உடல்—தோழர்கள் துடித்தனர்.

கிழவருக்கு ஏன் இந்தக் கெடுமதி! யார் செய்தது, இப்படி அவரை மயக்கிவிட்டது — எவனோ, நம் எதிரி அவருக்கு இந்த அவசியமற்ற யோசனையைச் சொல்லிக் கொடுத்துவிட்டான் — நம்மையும் அவரையும் பிரித்துவிட நயவஞ்சகர்கள் செய்த சதி—இப்படியெல்லாம் அவர்கள் பேசினர். அவனுக்கு மட்டும் இந்த வார்த்தைகள் எதுவும் காதிலே விழவில்லை—ஊமையாகிவிட்டான்.

அவன் கண்களிலே நீர் வடிந்தது—அவன் நினைவில், துர்நாற்றத்தால் துவண்ட ஊர்மக்கள் தான் வந்து நின்றனர். அவர்களின் எதிர்காலம் என்ன ஆவது என்று எண்ணினான். குபு குபு வென்று இன்னும் அதிகமாக நீர் வடிந்தது.

"நாங்கள் எல்லோரும் சேர்ந்து கடைசி முறையாகக் கேட்டு வருகிறோம். பிறகு நாம் பிரிந்து சென்று ஒரு தனித் தோட்டம் வைப்போம். நாம் உழைப்பாளிகள்—புதிய மலர்க்காட்டை மிக எளிதில் ஏற்பாடு செய்து விட முடியும்!" என்றனர்.

"செய்யுங்கள், செய்து, சேர்ந்திருக்க வழி காணுங்கள்" என்றான் அவன்.

தோழர்கள் மறுநாளே கிழவரை நெருங்கினர். தங்கள் கண்ணீரைக் காட்டிக் கேட்டனர். அவர் கடு கடுப்போடு பதில் சொன்னார்.

அத்தோடு விடவில்லை. உடனேயே ஆள் அனுப்பி கோயில் தர்மகர்த்தாவை அழைத்து வந்து ஆயுள் ஒப்பந்தமே செய்துவிட்டார். ஒரு வேளை பிறகு மனம் மாறினாலும், நிலைமை மாறக் கூடாது என்ற பிடிவாதக் கோபத்தோடு!

கண்ணீரோடு திரும்பினர் தோழர்கள் — கவலை அவர்களைத் தொடர்ந்து வந்தது—ஊராரின் அவதி அவர்களின் இதயத்தை முள் போலக் குத்தியது.

x x x

இறுதியில் பெரியவர் தோட்டத்தில் வேலைசெய்து கொண்டிருந்த எல்லோரும் விலகிச் சென்றனர். அவனைத்தலைமையாக வைத்து புதியதோர் பூந்தோட்டத்தை ஏற்படுத்திவிட்டனர். இரண்டொரு மாதங்

களுக்குள்ளாகவே, நல்ல மல்லிகை மலரை மலர்விக்கும் மல்லிகைக் கொடிகள் ஏராளம் வளர்ந்துவிட்டன.

ஊர்மக்கள் பாராட்டினர். ஒத்துழைத்தனர். மலரும் பயனை அதிகம் தந்தது, ஊராருக்கு! திருப்தியைத் தந்தது, தோட்டம் வைத்தவர்களுக்கு!

அவன் தன்னுடனிருக்கும்தோழர்களுக்கெல்லாம், வேலையைப் பங்கிட்டுக் கொடுத்தான். அவரவர்திறமைக் கேற்ற பகுதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுவிட்டதால் மல்லிகைத்தோட்டத்தின் வேலை எளிதானதுமட்டுமல்ல, விரைவில் வெற்றியுந் தந்துவிட்டது.

கிழவர், இந்தப்பிரிவை முதலில் சாதாரணமாக நினைத்தார். இவர்கள் போனால் என்ன, இன்னும்பலர் வருவர் என்று எண்ணினார். ஏமாந்தார்! பிறகு இருக்கும் ஆள்களையே தட்டிக்கொடுத்து, தயார் செய்ய வேண்டி வந்துவிட்டது. இருக்கும் மல்லிகைத்தோட்டத்தை இன்னும் விரிவுபடுத்தாவிட்டாலும், அழிந்து போகாமல் காக்கவேண்டும் என்ற அளவிற்கு வந்துவிட்டார். பணத்தை வீசினார். இருந்தும் புது ஆள்கள் நுழையவில்லை.

அதேநேரத்தில் புதிதாக வைக்கப்பட்ட மல்லிகைத்தோட்டத்தின் புகழ் வளரக்கண்டு அவருக்குக் கோபம் வரத்தான் செய்தது!

"எனது மலர்கள் — அவர்கள் தோட்டத்திலே வளர்வன!"

"என்னைத் துரோகம் செய்துவிட்டார்கள்!"

"சதி செய்துவிட்டார்கள்!"

இப்படி ஆயிரம் புதுக்காரணங்களைக்காட்டினார். ஊராரோ செவிடராகிவிட்டனர். ஆனால் அவர் வாய்மட்டும் ஓயவில்லை.

புதுத்தோட்டம் தொடங்கி ஓராண்டும்முடிந்தது. ஒவ்வொரு உழைப்பாளியும் தனது வெற்றிப்பட்டியலை அவனிடம் நீட்டினர்.

"இதோ பாருங்கள், எவ்வளவு மல்லிகைச் செடிகளை இவ்வாண்டு நட்டுவிட்டேன்!"

"மலர் விற்பனை மிக திருப்தி"

"நான் எவ்வளவோ நீர் பாய்ச்சி விட்டேன்!"

"ஆயிரக்காணக்கான களைகளை அகற்றி விட்டேன்!"

"வேலியை ஒழுங்காக்கி விட்டேன்"

"புது மலர்ச் செடிகளையும் நட முயற்சி எடுத்துக்கொண்டு விட்டேன்"

இப்படித் தோழர்கள், தேன்மீது பால், பால்மீது கற்கண்டுப்பொடி, அதன்மீது குங்குமப்பூ......இப்படிச் சுவைக்குமேல் சுவை சேர்த்தார்கள்.

இதைக் காண்கிற அவரோ தூற்றல் துந்துபியை நிறுத்தாமல் முழங்கிய வண்ணமிருந்தார்.

X X X

இந்த இருக்குமே ஒரு எதிரி—அவன் வைத்திருந்த தோட்டத்திலே மல்லிகை இல்லை. மணமில்லாத கனகாம்பரச் செடிகளை வைத்துக்கொண்டு விளம்பரத்தால் வியாபாரத்தை விரிவு படுத்திக்கொண்டு விட்டான்.

மல்லிகைத் தோட்டம் ஏற்பட்ட பிறகு அவனுக்கு அதிக இலாபம் கிடைக்கவில்லை. அதுவும் அது இரண்டாகிவிட்ட பிறகு அவனுக்கு இன்னும் அதிகத்தொல்லையாகப் போய்விட்டது.

தினந்தினம் யோசித்தான்—கடைசியிலே கண்டு பிடித்தான் ஒரு புது யுக்தியை! கட்டிவிட்டான் ஒரு கதை—அவர்கள் இருவருமே மயக்க மருந்து விற்பவர்கள். அவர்கள் தோட்டத்து மல்லிகைகள் உண்மை மலர்களல்ல—மயக்கந்தரும் விசித்திர விஷப்பூக்கள்!—இப்படிச் சொன்னது மட்டுமல்ல, நீதி மன்றத்திலே வழக்கும் போட்டுவிட்டான்!

வழக்கு நடந்து, அவர்கள் சிறைக்கும் சென்றனர்.

மல்லிகைத் தோட்டம் மட்டும் அழிந்து விடவில்லை. இன்னும் அதிகமலர்களை மலர்வித்து மணத்தை மிகவும் அதிகமாக்கி விட்டது!

எதிரியோ ஏதேதோ எண்ணிக் கொண்டுதான் வழக்கு சோடித்தான்—ஒருமுறை மட்டுமல்ல, இரண்டு முறைகள் அவன் கட்டிவிட்ட சரடுகள் புளுகுகள் என நிரூபிக்கப்பட்டு முகத்திலே கரி பூசிக்கொண்டான்.

இந்த முறை எப்படியாவது அவர்களைச் சிறையில் தள்ளி, அவர்கள் சிறை செல்கிற காட்சியைக் கண்டு சிரித்திட வேண்டும் என்று திட்டமிட்டான். அதனால் மலர்த் தோட்டங்கள் அழிந்துபடும் என்று கனவு கண்டான்.

அவர்கள் சிறை செல்லுமுன்னே, அதே தோட்டத்து மலர்களாலே தொடுக்கப்பட்ட மாலைகளைக் கொணர்ந்து போட்டனர் அவர்கள் தோட்டத்து உழைப்பாளிகள்!

கிழவரின் தோட்டத்தில் பணியாற்றுபவர் ஒரு மாலை கொணர்ந்திருந்தனர். அவருக்கு மட்டும் போட்டுவிட்டு, முகத்தை எப்பக்கந் திருப்புவது என்று இடந் தேடினர். ஆனால் அவனது தோட்டத்து சக உழைப்பாளிகளோ, இரண்டு மாலைகள் கொணர்ந்து இருவருக்குமே போட்டனர்.

தோட்டத்துப் பெரியவரேகூட, அவர்களின் கண்ணியத்தைக் கண்டு கொஞ்சம் கலங்கிவிட்டார். பிறகு இருவரையும் ஒரே சிறையிலே தள்ளினர்.

தோட்டக்காரர்கள் இருவரும் சிறையில் கிடக்கிறார்கள்—மல்லிகை மலர்களின் விற்பனை சொற்பமாகி விடும், இனி கனகாம்பரம் அதிகம் விற்றுவிடும் என்று எண்ணிக்கொண்டிருந்தான் கனகாம்பரக் கடைக்காரன்.

நடந்ததோ, நேர்விரோதமானது! ஆத்திரங் கொண்ட ஊரார், கனகாம்பரத் தோட்டத்தை அழித்துப் போடவும் துடித்தெழுந்தனர். அவன் தோட்டத்தின்மீது படையெடுப்பது போலக் கிளம்பியும் விட்டனர். அவனது தோழர்களை அவர்களைத் தடுத்து நிறுத்தினர்.

மல்லிகைத் தோட்டம் விரிந்து வருகிறது இப்போதும்—மணம் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது!

மல்லிகைத் தோட்டத்தின் மலர்களின் மணம் வீசிற்று, வீசுகிறது—வீசிக்கொண்டே இருக்கிறது!

✲

# அரசியல் அரிச்சுவடி

அரசியல் என்றால் என்ன? கேள்வி வியப்பைத் தரலாம்—ஆனால் இதற்கு உண்மை விடை தரத் தெரியாத 'ஊர்க் குருவிகள்' அரசியல் வானத்திலே உயர உயரப் பறக்கின்றன! அவர்கள் உணர்ந்து கொள்ளட்டும், இதனை!

அரசியல், அரசு—இயல் என்ற இரு சொற்களின் கூடுதலால் பிறக்கும் ஒரு சொல். அதை ஒரு அரசனே இருந்து இயங்கவைக்கும்போது அந்த பெயர் பெறுகிறது. ஆனால் எப்போதும் அரசனே நாட்டின் எல்லா வேலைகளையும் கவனிப்பதில்லை. எனினும் அவன்தான் தலைவன்! ஆனால் அது பிற்கால மனிதர்களால் ஒப்புக் கொள்ளப்படாதபோது, மேற்கண்ட அதிகாரங்களை மக்களே ஏற்றுக்கொண்டு, மக்களாகவே கூடிப் பேசி, மக்களை மக்களுக்காகவே மக்களாலேயே ஆளப்படுவதைப் பொதுவாக, மக்களாட்சி, அல்லது ஜனநாயகம், என்று பெயரிட்டு அழைக்கப் படுகிறது.

சி. பி. சிற்றரசு

ஆனால் மற்ற நாட்டைவிட இந்த நாட்டில் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற தலைவர்கள், தம்மைப் பொது ஜனங்களின் பணியாளர்கள் என்று சொல்லிக்கொள்வதைக் கேவலமாகவும் அரசியல் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்வதில் பெருமையும் படுகிறார்கள். ஆனால் அப்படி அவர்கள் கூறிக்கொள்வதில் நமக்கு கருத்து வேற்றுமையில்லை யாயினும் அரசியல் என்றால் என்ன? என்பதை அவர்கள் தெள்ளத் தெளியத் தெரிந்துகொண்டால் நாம் மிக மிக நன்றியுள்ளவராயிருப்போம்.

அரசியல் என்பது மக்கள் ஒருவருக் கொருவர் சரியாகப் புரிந்து கொள்ளவும், ஒரு மனிதன் எப்படி நடந்தால் மற்றவருக்குத் துன்பம் இல்லாமல் இருக்கும் என்பதற்காகவும், எப்பொழுதோ ஒரு காலத்தில் மனிதனுடைய பழக்க வழக்கங்கள் வரிசைமாறி, நல்லபயன் தரமுடியாமல், ஒன்றன் விளைவையறியாமல் செய்துவிட்டுப் பிறகு அல்லல்படுகிற நிலையை மாற்றி, வரிசைக் கிரமமாக அமைத்துத் தருவதற்கும், தன் உழைப்புத் தன் குடும்பத்தோடு நில்லாமல், பிறருக்கும் பயன்தரும் வண்ணம் இருப்பதற்கும், மனிதன் மானசீக வாதத்திலேயே ஆழ்ந்து விடாமல், உலகாயுத வாதத்தையும் அறிவுக் கண் கொண்டு பார்ப்பதற்கும், மக்களின் தேவைகளை அவ்வப்போது கவனித்து உடனடியான நிவாரணம் செய்வதற்கும், இயற்கை வளப்பங்களை மக்களுக்குப் பயன்படுத்தப் பொதுவான செல்வத்தைக் கொண்டு, அணை, ஆறு முதலான சாதனங்களைச் செய்து கொடுப்பதற்கும், மக்கள் வாழ்க்கையில் அடைய வேண்டுமென்று நினைக்கின்ற,—ஆனால் எட்ட முடியாத தூரத்தில் இருக்கும் நன்மைகளை எட்டுமளவுக்கு இழுத்துக் கொடுப்பதுமான ஏற்பாடுகளும் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய கால வெள்ளத்தால் அழிக்க முடியாத மக்களின் பண்பாடுகள் எவ்வளவு மாற்றமடைந்திருக்கின்றன என்பதைக் காட்டும் காலக்கண்ணாடியைப் போலவும், ஒரு குறிப்பிட்ட சட்ட ரீதியான நிலைமையை அல்லது ஒரு ஏற்பாட்டை பொதுவாக நாம் அரசியல் என்கிறோம்.

மனித சக்தி என்ற அவனது முயற்சிக்கும், சமுதாயம் ஏதாவதொரு பொது விதியில் அடங்க வேண்டுமென்ற எல்லைக் கோட்டுக்கும் இடையே எழுப்பப் பட்ட பாலந்தான் அரசியல் என்று பெயர் பெறுகிறது.

ஆனால் அந்த அரசியல் ஒரு காலத்தில் ஒரு சில புனிதர்களால் நடத்தப்பட்டது என்றாலும், இன்று அது ஓர் கேடான, அபாய விளையாட்டாக விளையாடப் படுகிறது.

அரசாங்கம் என்றால் தாமரை இலை, மக்கள் என்றால் அதன்மேல் மிதக்கும் தண்ணீர்த் துளிகள் என்ற நிலையில் இன்றைய அரசியல் பிழைபட நடத்தப்படுகிறது. அரசியல் மக்களை சந்தோஷப்படுத்த என்ற நிலை மாறி அயல் நாட்டாரை சந்தோஷப்படுத்த என்ற நிலையில் செலுத்தப்படுகிறது.

மனிதன் தேவைகள் மனிதனே தனியாகப் பெற முடியாமல் தத்தளிக்கும்போது தனக்கிருக்கும் சட்ட செல்வாக்கினால் தேடித்தர முனையும் சக்தி இருக்கின்றதே அதைத்தான் எந்த அறிவுள்ள நாட்டிலும் அரசியல் என வழங்குவது வழக்கம்.

சந்தேகத்தைக் கைமுதலாகக் கொண்டு, சட்டத்தின் வன்றுகோல் கொண்டு உண்மையை நிராகரிப்போர், அதிகமான பயமும் பக்தியு முடையோர், மனதிற்கு அடிமை பட்டு மனத்தால் நடத்தப்படுவோர், எதிரிகளின் கூட்டத்தை தடை செய்துவிட்டோம் என எக்காளமிடுவோர், பொதுமக்களுக்குப் பயன்படும் பொதுஸ்தாபனங்களின் பணத்தைக் கொள்ளையடிப்போர், அறிவியல் கோட்டைக் கதவுகளை சட்ட செல்வாக்கால் முற்றுகையிடுவோர் ஆகியோர் இன்றைய அரசியல் தலைவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால் எவன், பிறர் இன்பந்துய்ப்பதற்காகத் தன் இருதயக்கதவுகளைத் திறந்திருக்கின்றானோ, எவன், பிறர் பிழையைப் புதைக்கத் இருதயப் பீடத்தில் சவக்குழியைத்தோண்டி இருக்கின்றானோ, எவன், தன்னிலை மறந்து பொதுநலத்திற்குத் தன்னை இலவசமாக ஒப்படைக்கின்றானோ, எவன், பலநாட்டு அரசியலை ஆராய்ந்து தன்நாட்டுக்கு வேண்டிய அரசியலை வகுக்கும் ஆற்றல் படைத்திருக்கின்றானோ, எவன், அரசியலைப்பணம் சேர்க்கும் சந்தையென எண்ணாமல் மக்கள் மனதை ஒன்று சேர்க்கும் சந்தையென எண்ணுகின்றானோ, எவன், அந்த அரும்பணிக்காகத்தன் புனித

வாழ்நாளை, போனால் திரும்பாத உயிரை ஒப்படைக்கின்றானே, அவனே உண்மையான அரசியல் தலைவனாகத் தகுதியுடையவனாகின்றான்.

அப்படி ஏற்படுகிற எல்லா அரசியலும், சுதந்திரம் என்ற அழகான வார்த்தையின் அடிப்படையிலே எழுகிறது. ஆனால் சுதந்திரம் என்றால் என்ன எனக்கவனித்தால், அது மனித எண்ணத்தின் அடிவாரத்திலே பிறக்கும் ஓர் உணர்ச்சியின் பெயர். பிறரால் பறிக்க முடியாத ஒரே ஒரு பொருள் சுதந்திரம். மனிதன் இழக்கமுடியாதது. பிறரால் சூறையாடமுடியாதது சுதந்திரம் ஒன்றுதான் மனிதன் இயற்கையிலேயே நல்லவன் என்ற உண்மையை அவன் அடைந்திருக்கும் சுதந்திரத்தின்மூலந்தான் வெளியிடமுடியும்! ஏனெனில் ஆதிமனிதன் நிலைக்களன் அவன். உறுப்பெற்ற இயற்கை சக்திகளை அடக்கியாளும் வன்மை பெற்றவனும் அவன்தான்! சுற்றியிருக்கும் சூழ்நிலைக்கு அவன் அடிமைப்படாமல், அவைகளைத்தன் சக்திக்குட்பட்டதாகச் செய்வதற்காக, அவனுக்கு அந்த நாட்டாரால் அளிக்கப்படுகிற சன்மானம்தான் சுதந்திரம் என்று பெயர் பெறுகிறது.

ஆனால், எல்லாக் காலங்களிலும் இந்த சுதந்திரத் தொனி கேட்டதா என்றால் இல்லை. ஆதி மனிதன் சுதந்திரமாக வாழ்ந்தான். அவன் வாழ்ந்த அந்த வாழ்க்கைக்கு சுதந்திரம் என்றுதான் பொருள் என்றுகூட அவனுக்குத் தெரியாது, தேவைகளும் அவனுக்கு அதிகமில்லை.

அவன் நீண்ட தூரம் செல்லவில்லை. அவனுடைய தேவைகளை அவன் கண்ணுக்கெட்டிய தூரமான எல்லைக்குள்ளேயே வகுத்துக்கொண்டான், மிதமிஞ்சிய சேமிப்பும் அவனுக்குத் தெரியாது, தேவையானது கிடைத்ததோடு முடிந்தது அவன் வாழ்க்கை.

ஆனால் அவனுக்கிருந்த ஓரேஒரு தொல்லை விலங்கினங்களைப்பற்றியதாகும். அவைகளில் அடக்கியாள முடிந்ததை எல்லாம் அடக்கித் தனக்கு உதவி செய்யும் பிராணிகளாக்கிக் கொண்டான். அடங்காதவைகளைக்கொன்று குவித்தான். அந்த ஆத்திரத்தினால்தான் அவைகளின் தோல்களை பலவிதக்கருவிகளாகச்செய்து முழக்கமெழுப்பினான். இப்படியே தன் இச்சையாக சுதந்திரத்தோடு வாழ்ந்துவந்த அவன், இயற்கை இன்பங்களுக்காக ஆள் சேர்க்கவும், அதனால் குடும்பம் பெருகவும், அதற்காக சேமிப்பு ஆசையும், அதை நிர்ணயிக்க அதிக உழைப்பும், அந்த உழைப்பின்மூலம் கிடைக்க முடியாதவைகளை, பிறரை வஞ்சித்து, ஏமாற்றி, பயங் காட்டி, கொள்ளையடித்து, திருடி சேர்க்கவேண்டியவனாய்விட்டான்.

இப்படி அவன் கட்டுக்கடங்காத ஆசையால்செய்த அக்கிரமங்களை எல்லாம்வீரம்என்று சொல்லிக்கொண்டு விட்டுப்போனவனை கோழையென்று பரிகசித்தானேயன்றி, நீதியை எண்ணிப் பார்க்க அவன் மனம் அவ்வளவு பண்பட்டிருக்கவில்லை. அது அவனுக்குத் தெரியவும் தெரியாது.

சமுதாய சக்கரம் பல்லாயிரம் ஆண்டுகள் சுழன்று கொண்டே வந்தது. நெடுநேரம் கடையப்பட்டமோரில் வெண்ணெய்க்கிடைப்பதைப்போல வாழ்க்கைச் சக்கரம் பலஆண்டுகள் சுற்றிச் சுற்றி இறுதியில் கண்டெடுத்த கருந்தனம் சுதந்திரம்!

அந்த அருமையான சுதந்திரம் இன்று வெறுங் கேலிக்கூத்தாக்கப்பட்டிருக்கிறது. சுதந்திரப்பிரகடனத்தின் வாசகங்களை வெட்கித் தலைகுனியுமளவுக்கு அரசியல் நடவடிக்கைகள் நிகழ்ந்தவண்ணம் உள்ளன.

மீண்டும் நாகரீகம் காட்டுமிராண்டி காலத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது.

தற்காலிக வெற்றியால் சந்தோஷப்படுகிறது ஒரு இனம், அது அணைபோட்டு விட்டோம் என்று ஆர்ப்பரிக்கிறது. ஆனால் அந்த அணை கருங்கல்லால் அல்ல, களிமண்ணால் என்பது அதற்குத் தெரியாது.

உண்மை அரசியலை நாம் ஊராருக்கு நடத்திக் காட்டப்போகும் பொன்னாள்தான், நாளை நடக்க இருக்கும் திராவிடப் பிரிவினைநாள். அந்நாள் வரும்வரை அரசியல் அலங்கோலங்கள், ஆட்சிக்கோணல்கள் இருந்துதான் தீரும்!

*


புதிய வெளியீடு :

## தமிழிசைப் பாடல்

(புதுவைச் சிவம்)

இசையரங்கில் பாடுவதற்கேற்ற மெட்டுக்கள்,

அழகு தமிழில்!

விலை 0—8—0

தனிப் பிரதிக்கு 7 அணா தபால் தலை அனுப்புக.

**ஞாயிறு நூற்பதிப்பகம்,**

**புதுச்சேரி.**

(A)



# விற்பனைக்குத் தயார்

| | |
|---|---|
| நல்லதீர்ப்பு | 0—4—6 |
| நாடும் ஏடும் | 0—6—0 |
| திராவிடர் நிலை | 0—4—0 |
| திராவிடநாடு திராவிடருக்கே! | 0—8—0 |
| திரு. வி. க. மணி மடல் | 1—8—0 |
| திருமணப் பரிசு | 0—6—0 |
| எது சுயமரியாதை? | 0—8—0 |

வியாபாரிகளுக்கு கழிவுண்டு

தபால் செலவு வேறு

கிடைக்குமிடம்:—

**மாணவர் பதிப்பகம்,**

2/45, முத்துமாரிச் செட்டித்தெரு,

மண்ணடி, சென்னை.

AD.

# ★ முள்ளுள்ள ரோஜா ★

"வில்"

அவர்கள் நாடு கடத்தப் பட்டவர்கள்!

ஆம், அவர்கள் பிறந்த மண்ணிலிருந்து, விரட்டியடிக்கப் பட்டார்கள், நாடாள்வோரின் நா ஆடிய விதமாக அவர்கள் ஆட மறுத்ததால்! புவியாளும் பூபதிகளின் போக்கையும், நோக்கையும் எதிர்த்துப் பேசினர் —ஏளனப்படுத்தினர் — கண்டித்தனர், கடுமையாக!— காரசாரமாகத் தாக்கினர்! ஆகவே அவர்கள், ஆளுவோரின் கனல் வீசிடும் பார்வையில் மாட்டிக் கொண்டனர்.

"சென்று விடுங்கள், உங்கள் சென்ம பூமியை விட்டு" என்று துணிந்து துரத்தியடித்து விட்டது, துரைத்தனம்! அஞ்சி அடங்கி விட்டனரா, அவர்கள்? இல்லை, இல்லை. நாடு கடத்தப்பட்டாலும் எங்கள் இதயத்திலே ஊறிக்கிடக்கும் எண்ணங்களை, எங்களிடமிருந்து கடத்திவிட முடியாது என்று கூறிக்கொண்டே நடந்து விட்டனர்.

பிறந்த பொன்னாட்டைவிட்டுப் பிரிந்தனர்—எனினும் அந்நாட்டின் நல்வாழ்விற்கான திட்டங்கள் போடுவதைமட்டும் மறந்துவிடவில்லை.

இத்தாலி—அவர்களின் தாயகம் — அந்த மண்ணிலேதான் பிறந்தனர். அதிலேதான் மடியவேண்டும் என்ற அசைக்கமுடியாத ஆசை கொண்டவர்கள் அவர்கள்.

இத்தாலிநாடே, எழிலுள்ள நாடே, உனைவிட்டு நாங்கள் ஓடப்போகிறோம் வீணே, எனினும் எமது இதயத்தில் கிடக்கும் நினைவைமட்டும் விரட்டிடமுடியுமோ என்று கண்ணீர் சொரிந்தவண்ணமே பிரிந்தனர்.

மார்சேல்ஸிலே அவர்கள்கிடந்துழன்றனர்—வாழ்விற்காக அவர்கள் படாத பாடுபட்டனர். என்னினும்தாயகத்தின் நினைவுமட்டும் உலரவில்லை — எப்பொழுதும் ஈரமாகவே இருந்தது.

அவர்களிலே ஒரு இளைஞன் — அவன் பெயர் மாஜினி—அவன் தாயகத்தை எண்ணி எண்ணி ஏங்காத நேரமில்லை. தன்னைப்போலஉள்ளவர்களைக்காணும் பொழுதெல்லாம் பிறந்த பூமி தவிக்கிற தவிப்பைத்தான் முதலில் அவர்களுக்குக் கூறுவான்.

தூக்கிலே தொங்கும் பிணம்—சித்திரவதைக்குள்ளாகி சிதறுண்ட இத்தாலி—இரண்டிற்கும் வேற்றுமையில்லை!

இத்தாலி, பாலமில்லாத பாதை—துண்டு துணுக்குகளாகப்போன எழிற்சித்திரம்!

இத்தாலி, அவன் கனவிலும் நனவிலும் வந்துபோகும் கனவுக்கன்னி, சொப்பன சுந்தரி!

அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு அடிமையாகக்கூடாது, அவன் பிறந்த நாடு, அவன் தவழ்ந்து விளையாடிய தாயகம், அவன் நடந்தமகிழ்ந்த சென்மபூமியென்று அவன் எண்ணினான்.

அடக்கியாள்பவர் ஆஸ்டிரியரானாலும், ஆகாய வெளியிலிருந்து இறங்கிவந்தவரானாலும் சரி, வெளியேறிடவேண்டும்.

இத்தாலியை இடர்க்குழியாக்கிடும் குருமாரின் கொட்டமும் அடக்கப்படவேண்டும். போப்என்றபெயரை வைத்துக்கொண்டு, போக்கிரித்தனங்கள் பல புரிந்திடும் பொல்லாதவர்கள் கையிலே சிக்கிச்சிதைகிற நிலை இத்தாலிக்கு இருக்கக்கூடாது! இகத்தை மறந்து, பரலோக யாத்திரைக்குத் தங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டிய குருமார் கூட்டம், போக போக்கியங்களிலே புரண்டு துள்ளிவரும் புள்ளிமான்களென ஓடி, கிள்ளைமொழி பேசிடும் கள்ளப்பெண்களோடு கலவியாடி, களித்திடும், கயவர்களாகிவிட்டார்கள். அவர்கள் பொன்னாசை கொண்டுவிட்டார்கள். பெண்பித்தம் பிடித்துக்கொண்டது அவர்களுக்கு, மண்ணாசைமட்டும் வராமல் இருக்குமா? ஆண்டவன் சந்நிதியிலே அமர்ந்து, அந்தரலோக ஆராய்ச்சி செய்யவேண்டிய அவர்கள், நாடாளும் நற்பணிகளிலே குறுக்கிடுவதும், குதர்க்கம் விளைவிப்பது ம் தங்கள் பெருமைக்குரிய காரியங்கள் என்று எண்ணி ஆடாத ஆட்டமாடுகின்றனர். தாங்கமுடியாத துடுக்குத்தனங்களிலீடுபடுகின்றனர். அவர்களின் கோணல்சேட்டைகள், ஆணவ ஆட்டங்கள் அத்தனையும் நிறுத்தப்படவேண்டும், இத்தாலியில்:

இத்தாலியை இருட்குகையாக்கும் முடிமன்னர்களின் பிடிபோக வேண்டும்.

சொத்து, சுகம், உடல், பொருள், ஆவி—இவை அத்தனையும் தத்தம் செய்யத் தயார்—அவனது இன்ப பூமி இத்தாலியின் விடுதலைப் போராட்டத்திற்காக!

மாஜினி, மற்றவர்களிடம் இப்படிப் பேசுவான், கிடைக்கிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும்!

"என் கூட்டுத் தோழர்களே, கேட்டிடுங்கள் இந்த வார்த்தைகளை,—நாடுகடத்தப் பட்டோம், நயவஞ்சகர்களால்! ஆனாலும் நாம், நம்பிக்கை பிழந்து விடவில்லை. நாம் பிறந்த நாட்டை நாம் எப்படி மறக்க முடியும்? நாம் இத்தாலி தேசத்தவர்• நம்மவர் எங்கிருந்தாலும் இனவுணர்ச்சி கொள்ளவேண்டும். இத்தாலியிலிருந்தாலும் சரி, தென் அமெரிக்காவில் வாழ்ந்தாலும் கவலையில்லை—இத்தாலி மக்கள் எழுச்சி கொள்ள வேண்டும், புரட்சி முழக்கம் எழுப்பவேண்டும். அதற்காக உழைக்கப் போகிறேன் நான்—உங்கள் ஒத்துழைப்பு கிடைக்குமா, எனக்கு" என்று கேட்டான்.

கோடை இடியென, கொட்டு முழக்கமென அவர்கள் கூவினர். "வீரனே, தீரனே, வீண் வார்த்தைகள் வேண்டாம்—எரியும் தீயில் இறங்கென்றாலும் சரி, கொந்தளிக்கும் கடலில் குதி எனினும் சரி, 'வாளெடுத்து வயிற்றைக் கிழி' என்று கட்டளையிட்டாலும் சரி—நாட்டிற்காக நீ எதைச்சொன்னாலும் சரி, செய்வோம்—சந்தேகம் வேண்டாம்!" என்றனர்.

மாஜினி, துடிதுடிப்பான அவன்சிந்தனை சொன்னபடிச் செய்யத் தொடங்கினான்.

1831-ம் ஆண்டு இளைய இத்தாலி (Young Italy) என்றொரு சஞ்சிகை துவக்கப்பட்டது!

ஆதிக்க வேட்டைக்காரர்களின் ஆணவத்தை வேட்டுவைத்து பிளப்பவனுயிற்றே மாஜினி—அவனுக்கு ஆதரவு திரட்டியா தருவர்! ஆபத்து அம்புகளை ஏவிய படியே இருந்தனர்.

ஒவ்வொரு நாட்டிலிருந்தும் விரட்டியடிக்கப் பட்டனர். இத்தாலியிலிருந்து பிரான்சுக்கு, பிரான்சிலிருந்து ஸ்விட்ஸர்லாந்துக்கு ஓடினர். ஆனாலும் நாட்டுணர்ச்சி மட்டும் அவர்கள் இதயத்தை விட்டு ஓடவே இல்லை.

துப்பாக்கி முனையிலே நிறுத்தப் பட்டான் அவன்—பலதடவைகளில்! அவனது சுதந்திர துடிப்பு அடங்கவே இல்லை. இதயத்தின் அடிவாரத்தில் அது ரீங்காரம் செய்த வண்ணமே இருந்தது.

குற்றவாளிக் கூண்டிலே இழுத்து நிறுத்தினர், நினைத்த பொழுதெல்லாம், ஆதிக்க வெறியர்கள்—அவனது குன்றாத ஊக்கம் குறைந்து விடவில்லை. மறைந்து விடவுமில்லை.

தண்டனைக்குமேல் தண்டனை—ஆனாலும் சலிப்பு அவனை அண்ட முடியவில்லை. கொடுமைக்குமேல் கொடுமை, இருந்த போதிலும் கோழைத்தனம் அவனை நாடமுடியவில்லை.

அவன் தெளிந்த சிந்தனையாளன் — கூர்த்த மதி படைத்தவன்—கொள்கைகளில் அழுத்தமான மனப்பிடிப்பு கொண்டவன். ஆகவேதான், தோல்வியைக் கண்டு துவண்டுவிடவில்லை. துன்பத்தைப் பார்த்து மிரண்டோடவில்லை. எதையும் தாங்க, இதோ என் இரும்பு இதயமுண்டு என்று ஏமாற்றங்களை எளிதாக்கிக்கொள்வான். வெற்றிபுரியின் தொலைவைக் கண்டு அவன் சோரவே இல்லை.

அவனது கம்பீர உருவமே கணக்கற்ற தோழர்களை அவனுக்குக் காணிக்கையாக்கிற்று!

அவனது இனிய பேச்சு அணி அணியாக வீரர்களை அவன் பக்கம் இழுத்து வந்தது!

நீரிலே தோன்றி மறையும் குமிழிபோல அடிக்கடி அவன் உதட்டுத் தடாகத்தில் எழுந்து அழியும் சிரிப்பு பல தீரரை அவனிடம் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது.

கரிய கண்களும், அவைகள் செய்யும் கணக்கற்ற மாயங்களும் பல இளைஞரை மாஜினியின் மறவர்களாக்கிவிட்டன!

முள்ளில்லாத ரோஜா இல்லை — மாஜினியும் முள்ளுள்ள ரோஜாதான்! அவன் வீரன், விவேகி, சிந்தனையாளன், புத்துலகச் சிற்பி, புரட்சித் தலைவன், புதுமை விரும்பி, நல்லாட்சி நாட்டங் கொண்டோன், நாட்டுணர்ச்சி நாதத்தை, மக்கள் மன வீணையிலிருந்து எழுப்பியவன், தியாக புத்தி ஊற்றைத் திறந்துவைத்தவன்—எனினும், சிறு குறைகள் உண்டு — அவை மறந்துவிடக்கூடியன! பிறர் அவனது யோசனைக்கு மாறுபட்டால் சீறுவான்—சிந்திக்காமல்கூடத் தாக்கி விடுவான்!

அவன் இத்தாலியர் முன்னேற்றத்திலே நம்பிக்கை அதிகம் வைத்திருந்தான்.

இத்தாலியை எழில் கொப்பளிக்கும் ஒரு இன்ப மாளிகையாக்கவேண்டும் என்பது அவன் ஆசை. ஆனால், அதற்காக பேயாட்டம் போடும் பித்தர் போக்கிலே நடந்திட மனந் துணியவில்லை.

அவன் பிரஞ்சுப் புரட்சி நடத்தியவர்களிடமே குறை கண்டான். அவர்கள் திட்டத்திலேயே தீய பகுதிகள் உள்ளன என்று கூறினன். அவை பலன் தாராதவை என்று தயங்காமல் சொல்லிவிட்டான்.

உரிமையை, எரியும் மாளிகைகளிலே, இரத்த வெள்ளத்திலே புரண்டிடும் பிணங்களிலே, அமைதி அழிந்து, அடி, உதை, வெட்டு, குத்து, விடாதே, பிடி, வீசு வாளை, நீட்டு ஈட்டியை, சுடு, தாக்கு...என்ற பயங்கரக் குரல்களுக்கிடையே, ஐயோ, கொலை, கொல்லாதே, விட்டுவிடு, புண்ணியம் உண்டு, என் குழந்தை அதோ நீ, இதோ அக்கிரமம்.........என்று நம் நெஞ்சைப் பிளக்கும் பரிதாப ஓலத்திற்கிடையே தேடுவது என்றால் அதனை அவன் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை!

சுதந்திரப் போரில் சிந்திடும் இரத்தத்தை அவன் மதிக்க மறுக்கவில்லை. ஆனாலும், அதற்குமுன் தனி மனிதனின் உரிமைப் போருக்கு ஆயத்த காரியங்களைச் செய்யவேண்டும் என்றான்.

உரிமை வேண்டும்—ஆனாலும் கடமையை மறக்காதே!—என்பது அவனது இலட்சிய கீதம்!

உரிமையைக் காக்கப் போராடிய வரலாறுகள், பிரான்சு நாட்டு ஏட்டிலே இடம் பெற்றதுண்டு, இங்கிலாந்திலேகூட ஏராளம் இருக்கின்றன. எனினும், கடமை புணர்ச்சியை ஊட்டியது இத்தாலி என்று எதிர்காலம் சொல்லவேண்டும் என்பது அவனது ஆசை!

கடமை, இனவுரிமைப் போர் வானத்து ஒளி விடும் நட்சத்திரமாகிவிடவேண்டும்! உள் வீக்கம், ஊமைக்காயம் எல்லாம் மடிந்திட இதுதான் மார்க்கம், உரிமைப் போர்க் காலங்களில்!

சிலர் உலகத்திற்கே உழைக்கத் துடிக்கிறார்கள்—பலர் விரிந்த பெருந் தேசங்களுக்கே உழைத்திட வேண்டும் என்கிறார்கள்—இப்பொழுதும்! அதுபோல மாஜினியைப் பார்த்துக் கூறினர் பலர், அவன் அவர்களைப் பார்த்து அலட்சியமாகச் சிரித்தான். மனித சமுதாயத்திற்கு உழைப்பது என்பது அவரவர் நாட்டிற்கு அவரவர் தொண்டாற்றுவதுதான் என்று திட்டவட்டமாகச் சொன்னான்.

வடநாட்டுப் பிடியிலே அகப்பட்டு அவதிப்படுகிறது, திராவிடம்—அந்தத் திராவிடமும், அக்கக்காகப் பிரிந்து கிடக்கிறது. மனங் கவரும் மலையாளம், திகட்டாத பாகுமொழி பேசும் தெலுங்கு தேசம், களிப்பை யூட்டும் கன்னடம், இத்தனைக்கும் தலைமை வகிக்கும் தமிழகம் என்று பிரிந்து கிடக்கின்ற காட்சியைக் கண்டு இணைத்து திராவிடம் என்று பெயரிட்டு அழைக்க நாம் ஆவல்கொண்டுழைக்கிறோம்.

வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் கொடுங்கோலாட்சியைக் கொன்று தள்ளிவிட்டு, தனியாட்சி நடத்த நாம் போரிடக் காத்திருக்கிறோம்.

மாஜினியும் அப்படித்தான். ஒரு நாட்டின் வெவ்வேறு அங்கங்களான பூமிகள் சிலரின் ஆளுகையிலே சீரழிந்து போவதைக் கண்டு உள்ளம்வெதும்பினன்.

ஆஸ்டிரிய ஆதிக்கத்தை அவன் கடுவிஷமெனக் கருதினான்.

அவன் இத்தாலியிலே ஒரு புதியதொரு அரசு பூத்திடச் செய்யவேண்டும் என்று எண்ணினான், அவன் எண்ணம் ஈடேற அதிக நாட்கள் பிடித்தன. அவன் இத்தாலியிலே மக்களாட்சி மலர்ந்து மணம் பரப்பி, உரிமை தென்றலடித்து, உற்சாக ஆறு ஓடி, சுதந்திர நீர் பருகி, சுக உணவு உண்டு, மக்கள் மகிழவேண்டும் என்று எண்ணினான். முடியாட்சியின்மீது அவனுக்கு அடங்காத கோபம்—எனினும், அவன் நினைத்த இத்தாலி உருவாகிவிட்டது, ஆட்சி முறையிலே அவன் கண்ட கனவு பலிக்காவிட்டாலும்!

ஒரே ஆட்சி என்று, அகண்ட இந்தியாவைக் காட்டுபவர்கள், திராவிடத்தில் பிரிந்து கிடக்கும் நான்கு பிரிவுகளைக் காட்டினால் கேலி பேசுகிறார்கள்! 'முடியுமா இது?' என்று முகத்தைச் சுளித்துக்கொண்டு பேசுகின்றனர், அகண்ட இந்தியாவே ஒரு ஆட்சியிலிருக்க முடியும் என்பவர்களுக்கு, திராவிடத்தின் ஒற்றுமையிலே சந்தேகம் பிறக்கிறது-விசித்திரம் கலந்த வேதனைதான் இது!

மாஜினி ஊட்டிய உணர்ச்சிதான், இத்தாலி மக்களின் இதயத்தை இரும்பாக்கி, எதிர்ப்புகளை ஏளனப் படுத்திடத் துணிவு தந்தது. பிறகு இத்தாலியக்கூட்டுறவுக்கு உதவியளித்த முடிமன்னன் விக்டர் எமானுவலின் வீரமும், காவூரின் அரசியல் நுண்ணறிவும், தன்னலங்கருதாத தியாகிகள் பட்டாளத்தின் தலைவன் கரிபால்டியின் ஒத்துழைப்பும்தான் மாஜினியின் இலட்சியத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டன!

மாஜினி தன் கடைசி மூச்சைவிடும் வரையில் இத்தாலிதான் அவன் இதயத்தில் நர்த்தனம் செய்து கொண்டிருந்தது. 1872ல் அவனை சாவு, தழுவிக் கொண்டது!

மாஜினி, போராடினான், தன் தாயகவிடுதலைக்காக! விடுதலை விளக்கை, அடிமை இருள் சூழ்ந்துகிடந்த இத்தாலியில்இளம்இதயங்களில்ஏற்றிவைத்தான். அந்த ஒளியினால்தான் பின்னால்வந்த விடுதலை விரும்பிகள் வெகுவேகமாக உரிமைப் பாதையில் நடந்தனர்.

மாஜினி முள்ளுள்ளரோஜா ஆனாலும், மணமுள்ள ரோஜா! ஆம், அவன் வகுத்தபாதையிலும் முள்கள் இருந்திருக்கும். எனினும் இத்தாலியின் உரிமைப்போருக்கு அடியெடுத்துக் கொடுத்தவன் அவன்—அவன் இத்தாலிய விடுதலை வீரர்களின் முதல்வன் —ஆம், மாஜினி, இத்தாலி வரலாற்றில் மறக்கமுடியாத ஒரு ஒளிவிளக்கு!

"புனுகுப் பூச்சால் புரையோடிய புண் மறைந்துவிடாது. அழுகி, துர்நாற்றம் எடுத்து ஆளையே விழுங்கிவிடும். அதைப்போல, நம்முடன் பழகுபவர்களின் குற்றங் குறைகளுக்கு மெருகு போடுவதால் ஆபத்து அதிகரித்து நமது வாழ்வே பங்கப்படும்"

—துர்கனீவ்.

# ★ நமது அமைப்பு ★

எந்த இயக்கத்துக்கும் அதன் நடைமுறை விதிகளும், ஒழுங்கு முறைகளும், சட்ட திட்டங்களுமே ஜீவாதாரமாகும்.

எனவே, திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கியதும், சட்ட திட்டங்களை வகுப்பதற்காக ஒரு குழு நிறுவப்பட்டது. நான், அதற்கு செயலாளனாக நியமனம் செய்யப்பட்டேன்.

விண்ணிலே பறக்கும் காற்றாடி, ஓட்டப் பந்தயத்திலே ஈடுபட்ட வீரன்—கட்டுப்பாடு, தனக்கென ஒரு நியதி, ஆகியவைகளைக் கடைப்பிடித்தால்தான், அந்தக் காரியங்கள் வெற்றி வரும் வகையில் நடைபெற முடியும். ஆகவே, எங்கள் மீது சுமத்தப்பட்ட பெரும் பொறுப்பை யுணர்ந்து, பல்வேறு நாடுகளிலுள்ள அரசியல் கட்சிகளின் அமைப்பு முறை, நமது நாட்டில் உலவும் வேறு பல அரசியல் கட்சிகளின் சட்ட திட்டங்கள் முதலானவற்றை ஊன்றிக் கவனித்தோம். பிறகு, சட்ட திட்டக் குழுவினர் தங்களுடைய எண்ணங்களை எடுத்துச் சொல்லி, பொதுவான ஒரு நகல் திட்டம் தயாரிக்கப்பட்டது.

நமது கொள்கைகள், இலட்சியம், உறுப்பினராகும் முறை, மத்திய-கிளைக் கழகங்கள், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கும் முறை, மாநாடுகள் முதலாய பல பிரிவுகள் அடங்கியுள்ளன இந் நகலில்.

இந்த நகல் திட்டம் சென்னையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் படித்துக் காண்பிக்கப்பட்டது.

திருத்தங்களுக்காகவும், புதிய ஆலோசனைகளுக்காகவும் காரியக் கமிட்டி (செயற்குழு) உறுப்பினர்களுக்கு அதன் நகல் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளன. திருத்தங்கள் அனுப்பவேண்டிய காலம் உறுப்பினர்கள், கோரிக்கைப்படி நீட்டப்பட்டிருக்கிறது.

உறுப்பினர்களின் ஆலோசனையில் தற்போது நகல் திட்டம் இருப்பதால், நமது கழக அமைப்பு நகலைக் குறித்து நான் எதுவும் இப்போது விரிவாகச் சொல்வது உசிதமல்ல.

உறுப்பினர்களின் மேலான யோசனைகள் கிடைத்ததும், அவைகளை எனது குழுவினர்க்குச் சமர்ப்பிப்பேன். எங்களது ஆலோசனைக்குப் பின், திருத்தம் பெற்ற முடிவான நகல் திட்டம், செயற்குழு முன் மீண்டும் சமர்ப்பிக்கப்படும்.

கூடிய விரைவில், மாகாண மாநாட்டுக்கு முன்னரே செயற் குழு கூட்டத்தின் முன் வைக்கப்படலாம். செயற் குழுவின் முடிவு கண்டதும், பின்னர் பொதுக் குழுவின் பரிசீலனைக்குக் கொண்டுவரப்பட்டு நமது சட்ட திட்டங்கள் அமுலுக்கு வரும்.

சிறந்த மேலான முறையில் கழக சட்ட திட்டங்கள் வரையறுக்கப்படும் என்பதைமட்டும் எல்லோரும் எதிர்பார்க்கலாம்.

கே. ஏ. மதியழகன்,
சட்ட திட்டக் குழுச் செயலாளர்.

# ★ பிரேத—விசாரணை! ★

—✕—

"காங்கிரஸ் மகாசபை, முன்பு எவ்வளவுக்கெவ்வளவு பலம் பொருந்திய ஸ்தாபனமாக வளர்ந்து வந்ததோ, அவ்வளவுக்கவ்வளவு இப்போது ஒரு உளுத்துப்போன கட்சியாகக் காட்சியளிப்பது கண்கூடு.

ஒற்றுமை, கட்டுப்பாடு, செயல், திறமை, தியாக உணர்ச்சி முதலிய அருங்குணங்கள் செழித்த காங்கிரஸில் இன்று அதற்கு நேர்மாறான தன்மைகள் மலிந்து காணப்படுகின்றன. : காங்கிரஸ் ஸ்தாபனத்தினிடமும் காங்கிரஸ்காரர்களிடமும் பொதுஜனங்கள் முன்பு அளவற்ற மதிப்பு வைத்திருந்தனர். காங்கிரஸ் இப்போது அந்த மதிப்பைத்தான் இழந்திருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் பொதுமக்கள் முன் தலைகாட்ட நாணவேண்டியதாகிவிட்டது. காங்கிரஸ்காரர்கள் என்றால் பதவி வேட்டைக்காரர்கள் என்றும், சந்தர்ப்பவாதிகள் என்றும், சுயநலப் பூர்த்திக்காக என்ன தியாகம் வேண்டுமானாலும் செய்யக்கூடியவர்கள் என்றும் நாட்டில் பெயர் பரவிவிட்டது.

தேசிய சர்க்காரைப்பற்றிக் குறை கூறும்போது ஒரு மாகாண மந்திரி "பிரிட்டிஷ்காரன் ஆட்சியில்கூட இம்மாகாணத்திற்கு அதிக சலுகையும் அதிகாரமும் இருந்துவந்தது, சுயராஜ்ய சர்க்காரில் அது மறுக்கப்படுகிறது!" என்று சட்டசபையில் கூறினாராம்.

காங்கிரஸ் ஸ்தாபனத்திலும் அதன் சார்பாக மாகாண நிர்வாகத் துறையிலும் காங்கிரஸ்காரர்கள் நாளுக்குநாள் ஊழலை வளர்த்து வரும்போது பொதுமக்கள் மனதில், "காங்கிரஸ் இனி நிலைத்திருக்குமா?" என்ற சந்தேகம் எழுவதில் வியப்பில்லை.

காங்கிரஸ் மகாசபைமுன் இப்போது எழுந்திருக்கும் ஒரே கேள்வி "அது நீடிக்கவேண்டுமா?" என்பதுதான்.

இன்று காங்கிரஸ் அடைந்திருக்கும் பலவீன நிலைமையில் அது நீடித்து தேசப்பணி ஆற்றி வரும் என்று ஒருவரும் சொல்லமாட்டார்கள்.

தேச விடுதலைக்குப் பின் காங்கிரஸ் மகாசபையில் வளர்ந்துவரும் சீர்கேடுகள் கொஞ்சமல்ல. அங்கத்தினர் தேர்தலிலிருந்து அக்கிராசனர் தேர்தல்வரை, சுயநலமும் பதவி மோகமும் தலைவிரித்தாடியிருக்கின்றன"

17-9-50-ந் தேதிய ஆனந்த விகடனின் தலையங்கத்திலே, மேலே கண்டவாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது. விகடன், அக்கிரகாரத்து ஏடு, காங்கிரஸ் பெருமைக்குத் துதி பாடும் வார இதழ். அது, "காங்கிரஸ் உருப்படாது" என்ற கருத்துத் தொனிக்க, வேதனையோடு தீட்டியிருக்கிறது.

இந்திய உபகண்டத்தின் ஒரே அரசியல் கட்சி என்று, இன்றும், வெண்சாமரம் வீசப்படும் காங்கிரசின் திருக்கோலம் 'நாசிக்' மாநாட்டாலும், அதற்குமுன் நடைபெற்ற காங்கிரஸ் தலைவர் தேர்தல் சண்டையாலும், தெருவீதிக்கு வந்துவிட்டது.

"காங்கிரஸ் கரைகிறது—தனது பாதையை விட்டுத் தவறிவிட்டது. இனி, மக்கள் நலனைக் கவனிக்க அக்கட்சியால் முடியாது" என்று நம் போன்றோர் கூறினால், சீறிய நண்பர்களின் சிந்தனைகளைக் கிளறும் அளவுக்கு காங்கிரசின் காட்சிகள் தினசரி பலவித வேடிக்கைச் செய்திகளாக வந்துகொண்டிருக்கின்றன.

நேரு—பட்டேல் சண்டை!
வகுப்பு வெறியர் கொண்டாட்டம்!
தாண்டனுக்கு எதிர்ப்பு!
கிருபளானியின் எதிர்க்கட்சி!

நேரு, காரியக் கமிட்டியில் சேரார்.

இதுபோல, பலவிதமான செய்திகள், பகிரங்கமாகி வருகின்றன. பத்திரிகைகளில் பிரபலமாகி வருகின்றன.

காங்கிரசில் போட்டிச் சண்டை வலுத்துவிட்டதென்பதே, இத்தகவல்கள்மூலம் நாட்டுக்குக் கிடைக்கும் செய்தியாகும்.

இந்த நிகழ்ச்சிகள், நாம் முன்பே எதிர்பார்த்தவைதான். அப்போது, இவைகளை முன்கூட்டி அறிவித்ததற்கு, அலட்சியத்தையே பல தேசிய நண்பர்கள் பதிலாகத் தந்தனர்—பேச்சாலும், பார்வையாலும்.

அவர்கள் திருப்பார்வைக்கு இந்தச் செய்திகளைச் சமர்ப்பிக்கிறோம், 'பிரேதம்' ஆகிவிட்ட காங்கிரசின் 'பரிசோதனை'யில், : இன்னும் அவர்களுக்கு ஆசையும் மோகமும் அகலாத காரணத்தால்!

❀



## "மாலை மணி"

தந்த

**பார்த்தசாரதி**

❀

கழகத்தின் கருத்துக்களைப்பரப்ப 'தினசரி யொன்று தேவை' என்று நினைத்தபோது தானாகவே முன் வந்து கஷ்ட நஷ்டங்களைப் பாராது, எட்டு மாதங்கள் 'மாலைமணி' நடத்தித் தந்த தோழர் டி. எம். பார்த்தசாரதி அவர்கள், தினசரி இதழ் நடத்துவதில் உள்ள தொல்லையும் சிரமமும் மிக அதிகம். எனத் தெரிந்திருந்தும் அவருக்கென்றே அமைந்த துணிச்சலும் காரியமாற்றும் திறமையும் துணையாகக் கொண்டு புன்சிரிப்போடு பணிபுரிந்தார்.

# ★ பிரிவினை கீதம்—பிணி தீர்க்கும் ★

“தனி நாடாகவேண்டும்” என்ற நமது கோரிக்கையைக் கேட்டால், பலர் “முடியுமா” என்று கேள்வி போடுகின்றனர். ‘திராவிடநாடு’ என்று நாம் குறிப்பிடுவது, தற்போதைய சென்னை மாகாணத்தைத்தான். சென்னை மாகாணத்தையும் அதே அளவில் பிறநாடுகளின் படத்தையும் கீழே தந்துள்ளோம். இந்த, விளக்கம் நாம் பன்முறை தந்ததுதான். எனினும், இன்றும் சிலர் ‘சந்தேகத்தோடு’, கேள்விகளை எழுப்புவதால் மீண்டும் கவனத்துக்கு கொண்டுவருகிறோம்.

1"=300-மைல் என்று கணக்கிட்டு,வரையப்பட்டதே இப்படமாகும்.

உலகையே ஆட்டிவைத்த ஜெர்மனியைவிட, திராவிடம் சிறியதா?

உலக வல்லரசுகளில் ஒன்றான இங்கிலாந்தை விட திராவிடம் எவ்வளவு பெரியது!

சிறுநாடு பெல்ஜியம், சிதைந்த போலந்து, வல்லரசு நாடுகள் கவனத்தில் நிற்கும் ருமேனியா, இவைகளைவிட நாம் கோரும் திராவிடம், தனிநாடாக ஆக முடியாதா?

ஸ்விட்சர்லாந்து, டென்மார்க்,போர்ச்சுகல், பல்கேரியா, கிரீஸ், நேபாளம், பின்லாந்து—ஆகியவைகள் தனியரசோடு, தனி நாடாக வாழும்போது அவைகளையெல்லாம் விட பெரிய நிலப்பரப்பான திராவிடம், தனிநாடாக இருக்கமுடியாதா?

நிலப்பரப்பு மட்டுமல்ல,

இயற்கை வளம்
துறைமுக வளம்
மலை வளம்
மண் வளம்

எல்லாம், பன்மடங்கு, நிரம்பியது நாம் கூறும் திராவிட நாடு! பொன் தரும் சுரங்கங்கள், இரும்பு தரும் கனிகள், வெளிநாட்டிலிருந்து பணம் குவிக்கும் மிளகு—மாங்கனீஸ், அமெரிக்கா அள்ளிச் செல்லும் முந்திரி யாவும் இருக்கிறது இங்கு!

திராவிட நாடும் பிற நாடுகளும். அளவு 1"-300மைல்




மக்கள் நாலரைக் கோடிப் பேர் வாழ்கிறோம்! நமக்கான பொருள்களை நாமே உற்பத்தி செய்து வாழும் வகைகள், இருக்கின்றன!

தேவையான உழைப்புச் சக்தியும் இருக்கிறது!

இருந்தும்,
சிமெண்டுக்கு டால்மியா!
ஆணிக்கு டாட்டா!
ஆடைக்கு ஆமதாபாத்!

என்ற நிலை வளர்கிறது. தென்னாட்டில் போதுமான தொழிற்சாலைகள் இல்லை—இருப்பவைகளாலும் வடநாட்டுடன் போட்டி போட முடிவதில்லை.

காரணம்,
பெரிய ஆலைகள் அங்கே!
அவைகளை வளர்க்கும்
பணம்

அதற்கு ஆதரவு தரும்
மந்திரிகள்!

மந்திரிகளையே ஆட்டுவிக்கும்
பிர்லாக்கள்!

நிறைந்துவிட்டனர், வடநாட்டில். வெள்ளையர் ஆட்சியில், அவர்களோடு கை கோர்த்துக் கொண்டு வடநாட்டு முதலாளிகள் பெரிய உருவங்களாக வளர்ந்துவிட்டனர்.

அந்த வளர்ச்சியை முறியடிக்கும் வழி, நம்மிடம் இல்லை.

அந்த வளர்ச்சியை எதிர்க்க அதிகாரம் நமக்கு இல்லை.

ஆகவே, நம் நாட்டு தொழில்வளம் சிறக்க வக்கில்லை!

இதை மாற்றாமல்—எப்போதும் போல, தென்னாடு வடநாட்டுக்கு அடிமையாயிருக்கும் வகையிலேயே, புது இந்திய அரசியலமைப்பும் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

வடநாட்டவர் கண்காணிப்போடு தயாரிக்கப்பட்ட, இந்திய அரசியலமைப்பால், நாம் என்றும் முன்னேற வழியேயில்லை. இரும்புப் பிடிகள், நம்மை பயங்கரமாகப் பிடித்துக்கொண்டுவிட்டன.

திராவிடத்தை, தங்கள் சரக்குகள் விற்கும் சந்தையாக்கிவிட்டனர்—வட நாட்டினர்.

பொருள் உற்பத்தி செய்தால், அவைகள் விற்கப்படவேண்டும். விற்றால்தான், பணம் கிடைக்கும். வாங்கும் இடம் இல்லையென்றால் பொருளை உற்பத்தி செய்தோர் பணத்தைக் காண முடியாது.

எனவே, வடநாட்டு முதலாளித்துவம் தென்னாட்டை—திராவிடத்தை—தனது சரக்குகள் விற்கப்படும் சந்தையாக வைக்க விரும்புகிறது. வடநாட்டு ஆலைகள் குவிக்கும் சரக்குகள் எந்த வெளிநாட்டிலும் விலை போகாது. ஆனால், தென்னாடு முன்னேறாத காரணத்தால், வடநாட்டு நவீன உற்பத்திப் பொருள்களை வாங்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலிருக்கிறது.

இந்தத் துர்ப்பாக்கிய நிலை நீடிக்கவேண்டுமென வடநாட்டு முதலாளிமார் விரும்புகின்றனர்—தங்கள் சுரண்டல் நீடிப்பதற்காக.

அவர்கள் ஆசையை நிறைவேற்றித் தரும் வகையிலேயே வடநாட்டுத் தலைவர்களைக் கொண்ட காங்கிரஸ், நடந்துவருகிறது — அதற்கான சட்டங்களையும் தயாரித்துக் கொண்டுவிட்டது, புதிய இந்திய அரசியலமைப்பு மூலம்.

எனவே, தென்னாடு ஒரு சிறந்த தொழில்வளம் செறிந்த நாடாக ஆகமுடியாது. ஆவதற்கான சூழ்நிலைகளும் தென்படவில்லை!

சுருக்கிச் சொன்னால் வடநாடு—'இங்கிலாந்து' ஆகிறது! நாம் 'அடிமை இந்தியா' ஆகிக்கொண்டிருக்கிறோம்.

ஒரு நாட்டின் வளம், அங்கு வாழும் மக்கள், தங்கள் தேவைக்கான பொருள்களை பெற்று வாழ்தலைக் கொண்டுதான் நிர்ணயிக்கப்படும். பொருள்களில், இயற்கையாகவே கிடைப்பவை — அவைகளைக்கொண்டு தயாரிக்கப்பட்டவை என இருவகையுண்டு. திராவிடம் மூலப்பொருள் உற்பத்திக்கும்—அவைகளைக்கொண்டு பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் வசதிகள், தளும்பி, வழியும் நாடு.

பருத்தி உண்டு—ஆனால் அழகிய ஆடைகளுக்கு ஆமதாபாத், பம்பாயைத்தான் நோக்குகிறோம்!

பருத்தியைக் கொண்டு — பக்கத்திலேயுள்ள கோவையிலேயே நல்ல ஆடைகளைத் தயாரிக்க முடியும்.

ஆனால், அதற்கான வசதிகள் இங்கில்லை—ஆகவே, நல்ல முறையிலும், சகாயவிலையிலும் இங்கு தயாரிக்கும் சூழ்நிலை உதயமாகவில்லை. ஆகவே, இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருள்களால்—வடநாட்டுப் பொருள்களுடன் போட்டிபோட முடியவில்லை.

எலும்புக்கூடு போன்ற உருவமுடையவன், சதை பெருத்த சாண்டோவுடன் சண்டையா போட முடியும்?

வீட்டுக்குச் சுவர், வாயிலுக்கு கதவு, வயலுக்கு வரப்பு—இருந்தால் உள்ளேயிருப்பதை பாதுகாப்போடு இருக்கமுடியும். அதுபோலவே திராவிடத்துக்கும் ஒரு எல்லைக்கோடு இருந்தால், இங்குள்ள வளம் 'கொள்ளை' போகாமல் காத்துவளர்க்க முடியும்.

நமக்கென ஒரு எல்லை இல்லை. கேட்டால் தேசீயம் பேசுகிறார்கள்—ஏக இந்தியா, அகில இந்தியா, அகண்ட பாரதம், ஐயோ! இதையா துண்டாடுவது என்று துடித்துப் பேசுகிறார்கள். ஒற்றுமையோடு வாழ்வோம்—யாவரும் இந்திய மக்கள், ஐக்கியமே நமது இலட்சியம் என்று அழகுபட, வர்ணிக்கிறார்கள்.

இந்த ஒற்றுமைப் பேச்சு, கவைக்குதவாதது—சொல்ல இனிக்கும், செயலில் வரமுடியாது என்று நாம் கூறி வருகிறோம். நமது கூற்றுக்கள், எவ்வளவு ஜீவசக்தி நிறைந்தவை என்பதை பல நிகழ்ச்சிகள் படம்பிடித்துத் தந்தவண்ணமிருக்கின்றன.

1. உணவுப் பொருள்களைப் பெருக்கும் திட்டங்களுக்காக, மாகாண சர்க்கார் மத்திய சர்க்காரைக் கடன் கேட்டது—கிடைக்கவில்லை!
2. உணவுப் பஞ்சம் ஏற்பட்டதைக் காட்டி உதவ வேண்டுமென கெஞ்சிக் கேட்டது — பலன் பூஜ்யம்!
3. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் நீடிக்கவேண்டும் என சென்னை சர்க்கார் இந்திய சர்க்காருக்கு பன்முறை தெரிவித்திருக்கிறது—இருந்தும் அது கூடாது, ரத்து செய்க என்று டில்லி சர்க்கார் கட்டளை இட்டிருக்கிறது.

மாகாண சர்க்கார் கோரி, மத்திய சர்க்கார் மறுத்து, அம்பலத்துக்கு வந்த நிகழ்ச்சிகள் இவை. வெளிக்குத் தெரியாமல், இன்னும் பல இருக்கலாம். அதேபோல, மத்திய சர்க்கார் கட்டளையிட, அதை மீறி, மாகாண சர்க்கார் நடந்துவரும் நிகழ்ச்சிகளும், தினசரி, வளர்ந்துகொண்டுதான் உள்ளன. அவைகளில், அம்பலத்துக்கு வந்தவை.

1. மதுவிலக்கு இப்போது கூடாது, பிற்பாடு கவனிக்கலாம் என்று டில்லி சர்க்கார் தாக்கீது தந்தது. அதைப் பொருட்படுத்தாது, மாகாண சர்க்கார் மதுவிலக்கை சென்னை மாநிலம் முழுதும் அமுல் நடத்தியது.
2. ஜமீன் ஒழிப்பு மசோதாவை அவசரமாகக் கொண்டு வருதல் வேண்டாம் என்று டில்லி சர்க்கார் 'யோசனை' கூற, அதை ஒருபுறம் தள்ளிவிட்டு, ஜமீன் ஒழிப்பை சட்டமாக்கியது.
3. இந்தி கட்டாய பாடமாக்கப்பட வேண்டும் என்ற டில்லி சர்க்காரின் ஆசையை, அலட்சியம் செய்து மாகாண சர்க்கார் இந்தியை இஷ்ட பாடமாக்கிற்று.

ஒரே நாடு, ஒரே சர்க்கார், ஒற்றுமை ராஜ்யம் என்று பேசும் காங்கிரஸ் கட்சியினர்தான், மாகாணத்திலும், மத்திய சர்க்காரிலும் ஆட்சிபீடத்திலமர்ந்திருப்பவர்கள்!

இருந்தும், இவ்வளவு பெரிய பிரச்னைகளில் ஒன்றுக்கொன்று நேர் எதிரிடையாக நடந்துகொண்டிருக்கின்றன.

"ஐக்கியம் என்று பேசுகிறீர்கள் — இந்தியாவிலுள்ள எல்லாப் பிரதேசங்களும் ஒரே மனப்பண்போடு

நடக்கவேண்டும் என்று கர்ச்சிக்கிறீர்கள்! ஆனால் அது நடக்குமா? நடைமுறையில்தான் வரக்கூடியதா? அவரவரும் தத்தமது சுயலாபங்களில்தானே நாட்டங் கொண்டிருப்பர்" என்று நாம் சொன்னால், நம்பாதவர்கள், பலருண்டு நம்மிடையே. அவர்கள் தெளிவு பெறும் வகையிலும், சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

பிரம்மபுத்திரா நதித்தீரத்துலவுபவரும், கங்கையின் மழலையில் மகிழ்பவரும், துங்கபத்திரைக் கரையில் துள்ளித்திரிபவரும், காவிரித் தண்ணீரைப்பருகுபவரும், இமயமுதல் குமரிவரை எல்லோரும் இந்திய மக்கள்! இந்நாட்டுச் சகோதரர்கள்!! என்று கூவி, முழக்குகின்றனர்.

இந்தக் கூச்சல் காதுக்கு இனிப்பு—கருத்துக்குக் கசப்பு என்று நாம் சொன்னால், கெக்கலிப்பர்! ஆனால், அகில இந்தியம் பேசுவது ஒரு போதும் உண்மையாகிவிட முடியாது என்பதை, கீழ்க்கண்ட சம்பவங்கள் தெளிவாக்கும். சென்னை மாகாணத்தை வட நாட்டு மாகாணங்கள், தொழில் துறையில்மட்டுமின்றி, ஏனைய துறைகளிலும் எத்திப் பிழைக்கும் வழிகள் எத்தனையிருக்கின்றன வென்பது விளங்கும். வடநாட்டு மாகாணங்களின், இத்தகைய சுயநலக்கொள்ளைக்கு இந்தியா முழுமையையும் ஆளும்-ஆள ஆசைப்படும் — மத்திய சர்க்காரும், எவ்வளவு ஒத்தூதுகிறது, என்பதும் தெளிவாகும்.

1. அரிசிப்பஞ்சம் தாங்காமல், சென்னை சர்க்கார் அரிசி வேண்டுமென டில்லி சர்க்காரை வேண்டியது. டில்லி சர்க்காரும், ஐக்கியமாகாணத்தில் அரிசி நிறைய இருப்பதால், அங்கிருந்து அனுப்பிவைக்குமாறு, அந்த மாகாணசர்க்காருக்கு கட்டளையிட்டது. கட்டளையின்படி சென்னை சர்க்காருக்கு ஐக்கிய மாகாணத்திலிருந்து அரிசி வந்தது—

வந்த அரிசி படுமோசமானது மட்டுமல்ல! விலையும், இங்கு விற்பதைவிட பலமடங்கு அதிகம்!

இதன் காரணமாக சென்னை சர்க்காரின் கஜானாவிலிருந்து ஒரு கோடி ரூபாய், ஐக்கிய மாகாண சர்க்காருக்குப் போயிற்று.

பணமில்லை என்று திண்டாடும் திராவிடத்திலிருந்து ஒரு கோடி ரூபாயை வாங்கி, மத்திய சர்க்கார், இன்னொரு மாகாணமான ஐக்கிய மாகாணத்துக்குத் தானம் செய்திருக்கிறது.

2. சர்க்கரை நெருக்கடி கதையும் இதுபோலத்தான். வடநாட்டு ஐக்கிய மாகாணம்—நேரு பிறந்த பிரதேசம் — ஏராளமான பணம் 'கொள்ளை' அடித்தது அதைத் தடுக்காமல் டில்லி சர்க்காரும் நீண்டநாள் காலத் தவணை செய்து வந்தது.

ஐக்கிய மாகாணமும் சென்னை மாகாணத்தைப் போல 'இந்திய பாரதபூமி'யில் ஒருபகுதிதான்! இருந்தும், சென்னை திண்டாடும் போது, உதவும் பெருந்தன்மையோ உதார குணமோ ஏற்படவில்லை அதற்கு.

ஏற்படவில்லை — என்பதை நாம் குற்றச்சாட்டாகக் கூறவில்லை.

ஏற்படமுடியாது! — இது அப்போதிருந்தே நாம் சொல்லி வருவதாகும்.

ஒரே நாடு என்றாலும், இந்தியா ஒரு பரந்த உபகண்டமாகும். இங்குள்ள ஒவ்வொரு மாகாணமும் ஒவ்வொரு நாடாகும்! ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிட்டால், இது விளங்கும்! படத்தை, இப்போது ஒருமுறை பாருங்கள்!!

திராவிடநாடு — சென்னை மாகாணம்—1420 00 சதுரமைல் பரப்புடையது. உலக வல்லரசுகளிலே ஒன்றான, இங்கிலாந்தைவிட இரண்டுமடங்கு பெரியது! நான்கு ஆஸ்திரியாக்களுக்குச்சமம்!

| | | | |
|---|---|---|---|
| 10 | பெல்ஜியம் | 5 | பல்கேரியா |
| 2 | செக்கோஸ்லோவேக்யா | 3 | கிரீஸ் |
| 4 | அயர்லந்து | 10 | ஹாலந்து |
| 4 | போர்ச்சுகல் | 14 | பாலஸ்தீன் (பழைய) |

முறையே கொண்டது நமது நாடு!

இருந்தும், இவ்வளவு பெரிய தென்னாடு, வடநாட்டோடு இணைந்து வாழ முடியுமே தவிர, தனித்து எப்படி வாழ முடியும்? திராவிடநாடு என்று ஒரு தனி நாட்டை நிறுவ முடியுமோ? என்று சந்தேகத்தைக் கண்கள் மூலம், கேள்வி ரூபத்தில் கிளப்புகின்றனர், பலர்.

பிரிவினை—என்பது, கேட்டதும் பாச உணர்ச்சி காரணமாக சிறிது கசக்கத்தான் செய்யும். ஆனால் உண்மை யுணர்வு ஏற்பட்டால், அந்த இலட்சியம், வெற்றுக் கூச்சல் அல்ல, காரிய சாத்தியமானதுதான் என்பது விளங்கும்.

பாகிஸ்தான்—கேட்டனர், பலமான எதிர்ப்பு இருந்தது. ஆனால், பத்து கோடி மக்களின் இலட்சிய கீதம் வீணாகிவிடவில்லை! நமது நாட்களிலேயே 'பாரத நாடு' இரண்டாகி, 'பாகிஸ்தான்', 'மிச்ச இந்தியா' ஆகியவைகளையும், இரண்டு சர்க்கார்களையும் பார்க்கிறோம்!

நமது திராவிடஸ்தான் பிரச்னை, பாகிஸ்தானுக்கும் முற்பட்டதாகும். 'பாகிஸ்தான் வேண்டும்' என்று முஸ்லிம் லீக், லாகூர் மாநாட்டில் தீர்மானிக்கு முன்னரே, நமது நாயரும், தியாகராயரும், டாக்டர் நடேசனாரும் 'திராவிட' என்ற சொல்லை பயன்படுத்தி வந்தனர். 'திராவிடன்' என்ற பெயரில் தினசரி நடந்த காலமும் உண்டு.

நமது கோரிக்கை—பாகிஸ்தான் வேண்டுமென்ற பத்துகோடி மக்களின் இதயகீதம் எழும்பு முன்னரே, உருவாகியதாகும். பாகிஸ்தான் கேட்டதற்கான காரணங்களைவிட, திராவிட நாடு நாம் கோருவதற்கு ஆதாரங்கள் அதிகம் உண்டு.

பிரிட்டிஷார் பிடியில் இந்த உபகண்டம்சிக்குமுன், இது ஒரே நாடாக ஒரு போதும் இருந்ததில்லை.

அதிலும் குறிப்பாகத் தென்னாடு, எப்போதும் பிற ஆட்சிக்கு ஆட்பட்டதே கிடையாது—வெளி நாட்டினர் நிரந்தரமாக திராவிடத்திலிருந்து ஆட்சி புரிந்தது இல்லை.

பெரிய பெரிய மன்னர்கள், டில்லியில் தர்பார் நடத்தியிருக்கிறார்கள். அவர்கள் 'ஆசை' திராவிடத்தில் நுழைந்தது இல்லை. வடநாட்டிலே பலத்துடன், பெரிய பெரிய பெரிய சாம்ராஜ்யங்கள் இருந்திருக்கின்றன.

| | |
|---|---|
| சமுத்திரகுப்தன் | ஹர்ஷன் |
| சந்திரகுப்தன் | கனிஷ்கன் |
| அசோகன் | அவுரங்கசீப் |

அக்பர் போன்றார் ஆட்சி புரிந்திருக்கின்றனர். அவரும், எவரும் திராவிடத்தை அடிமைகொண்டதில்லை. சேரனும் சோழனும் பாண்டியனும், செந்தமிழ் பரப்பியே இருந்திருக்கின்றனர்!

தனித்த நாடாக, திராவிடம், தளிர் மலர்ச்சோலையாக வாழ்ந்த, காலம் ஒன்றுண்டு. பொன்னும் மணியும், கன்னலும் செந்நெலும் கவின்பெற்றுத் திகழ்ந்தது தான் தென்னாடு.

முடியுடை மூவேந்தர்கள், தமிழகத்தின் காவலர்களாக இருந்தனர்—கன்னித் தமிழின் மடிமீது அவர்கள் மகிழ்ந்தனர்.

அந்த நாள்—வீழ்ந்தது!

சோழன் செங்கோல் முறிந்தது—பாண்டியன் முரசும் கிழிந்தது — சேரன், சிங்கநாதம் அழிந்தது. விளைவு—தமிழகம் வந்தாரை வாழ வைக்கும் நாடு ஆயிற்று!

வெள்ளையர் இந்திய பூபாக முழுவதையும் தந்திரோபாயத்தால் தனக்கு அடிமையாக்கியதும், இப்பெரும் நிலபரப்பை பல்வேறு மாகாணங்களாக்கினர் தமது ஆட்சி வசதிக்காக.

வெளிநாட்டான் ஆதிக்கத்துக்கு முன்னதாக, இந்தப் பரந்த உபகண்டம் ஒரே நாடாக இருந்ததில்லை.

இந்தியா, பல வேறு இனத்தவர் வாழும் நாடு என்பது, இன்று எல்லோரும் உணர்ந்ததாகும்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து இந்நாடு விடுவிக்கப்பட்டதும், இம்மாபெரும் நிலப்பரப்பு தமக்குக் கீழ் கிடக்கவேண்டுமென்ற பேராசை வட இந்தியத் தலைவர்களுக்கு அதிகமாகிவிட்டது. தங்களது மொழியையும், வாழ்க்கை முறையையும், எங்கும் திணித்து இந்தியாவின் பல்வேறு இனத்தாரையும் ஏமாற்ற பல சூழ்ச்சித் திட்டங்கள் வகுத்த வண்ணமேயுள்ளனர்.

இந்த ஆதிபத்திய வெறியின் விளைவாகவே 'பாகிஸ்தான்' மலர்ந்தது. பத்துகோடி முஸ்லீம் மக்களும், இந்து மத ஆதிக்கபுரியிலிருந்து விடுபடவேண்டுமென முரசு எழுப்பி வெற்றி பெற்றுவிட்டனர்.

இப்போது, பஞ்சாப் சீக்கியர் பாணி பாடுகின்றனர், 'அகாலிஸ்தான் வேண்டும்' என்று.

சீக்கியர்கள், இந்து மதத்தினின்றும் வேறுபட்ட கோட்பாடுகளை யுடையவர்கள். மொழி, வாழ்க்கை வழி, பண்பு எல்லாவற்றிலும் ஏனைய வட இந்தியரை விடப் பெரிதும் மாறுபட்டவர்கள்.

இந்து மதம் எங்களை வாழ விடாது.

பஞ்சாபில் உள்ள எங்கள் தொகை அதிகம்—ஆனால் மைனாரிடியினராகவே யிருக்கிறோம்.

எங்கள் மொழி பஞ்சாபி.

தாய் மொழி பஞ்சாபியை எங்கள் அரசியல் மொழியாகக் கொண்டு, தனி நாடமைக்க ஆசை கொள்கிறோம்.

எங்களுக்கென ஒரு நாடு ஏற்பட்டால்தான் எங்கள் வாழ்வும், எங்கள் தாய் மொழியும் சிறக்க முடியும்.

இந்தியைத் திணித்து எங்களது பழைமையான தாய் மொழியைச் சிதைக்கத் திட்டமிடுகின்றனர், காங்கிரஸ் ஆட்சியினர்.

பஞ்சாபி மொழி பரிதாபமாகக் கிடக்கிறது—ஆனால் இந்தியை எங்கள் பள்ளிகளில் கட்டாயமாக்கியிருக்கின்றனர்.

இக்கொடுமை எங்களால் சகிக்க முடியவில்லை—தாங்க முடியவில்லை! ஆர்ய சமாஜம், காங்கிரஸ் இந்துக்களின் துணையோடு கோடிக் கணக்கான எங்களை, கும்மிருட்டில் கிடத்தவே திட்டமிட்டு வருகிறது. அதன் முதல் நடவடிக்கைதான், எங்கள் மொழியைச் சிதைத்து, வேண்டாத இந்திக்கு மகுடம் சூட்டுவது.

மொழியால் மட்டுமல்ல எல்லாவிதத்திலும் தனிப் பண்பு படைத்த நாங்கள் இன்று அரசியலில் அனாதைகளாக இருக்கிறோம். பொருளாதாரத் துறையில், கேவலமாகக் கிடக்கிறோம்.

உத்யோகங்கள் எங்களவர்க்குக் கிடைப்பதில்லை—அதிலும் இளித்த வாயர்களாக ஆக்கப்பட்டே வருகிறோம்!

கோடிக் கணக்கில் வாழும் நாங்கள், நல் வாழ்வுக்கு வழியின்றி வதைபட்டுச் சாகிறோம்! இது நீங்கி, நாங்களும் நல்லுரிமையோடு வாழ—எங்களுக்கோர் நாடு தேவை, அதுவே 'அகாலிஸ்தான்' என்று, வெற்றிச் சிந்து பாடியவண்ணமிருக்கின்றனர். உரிமையுணர்ச்சி, தனி நாட்டுக் கோரிக்கை, நம்மிடம் மட்டுமல்ல. அங்கும் தீயென வளர்ந்து கொண்டிருக்கிறது!

உரிமைக் கோரிக்கை ஆங்காங்கும் எழும்புவதைக் காணும் பலர், "பேதம் பார்ப்பானேன்—பிரிந்துபோக எண்ணுவானேன்" என்று, கேட்பர். நரியையும் புள்ளி மானையும் சேர்த்துலவச் செய்தால்?

புலியையும் பசுவையும் ஒரே கூண்டில் போட்டடைத்தால்?

தர்மோபதேசம் பலித்தாவிடும்?

அதுபோலவே, இந்திய உபகண்டம், வலுத்த 'புலி'களும் இளைத்த 'பசு'க்களும் அடைக்கப்பட்ட கூண்டாகியிருக்கிறது.

ஒரே கூண்டில் புலியும் பசுவும் இருக்கவேண்டுமென்று கூறுவது எதேச்சாதிகாரியின் ஏமாற்று வித்தை.

ஏமாற்றுவித்தை—பல நாட்களுக்குப் பலிக்காது. இது, மறைக்கமுடியாத உண்மையாகும். இதை எதிரொலிப்பதுதான், நாட்டு மக்களிடை உரிமையுணர்ச்சி வளர்வது! எதிர் முகாமிலிருந்தே, அதற்கான செல்வாக்கும் வளர்ந்துகொண்டு வருகிறது.

பிரிவினைகீதம்—பிணிபோக்கும் மருந்து! அதை, மறைக்கலாம்—ஆனால் நீண்ட நாட்களுக்கு மறுத்துவிட முடியாது.

எரிமலையும் குமுறும் கடலும் எழும்பித்தான் தீரும்!

*

# ★ காலமும் நாமும் ★

*6—9—50ல் நடந்த காஞ்சி பச்சையப்பன் கல்லூரித் தமிழ் மன்றத்துவக்கவிழாவில் தில்லை-வில்லாளன் பி. ஏ. (ஆனர்ஸ்) ஆற்றிய சொற்பொழிவுச் சுருக்கம்.*

காலம் ஓரே பக்கம் ஓடும் புகைவண்டி—அதிலுள்ள பிரயாணிகள் தான் நாட்டு மக்கள். வண்டி தஞ்சையிலிருக்கும் பொழுது, பேரளத்து வடையை எண்ணி ஏங்குவதும், கொள்ளிடத்துச் சுண்டலுக்காகக் காத்திருப்பதும், திருச்சிக் கதம்பத்திற்கும், மணப்பாறை முறுக்குக்கும் 'மல்லு' கொடுப்பதும் கூடாது. இடம்:தஞ்சாவூர், கிடைப்பது முந்திரி பருப்பு, வாங்கிக் கொள்!—இதுதான் முறை. இதுபோலத்தான் நம் சமுகத்தில் சில எண்ணங்கள், ஏற்பாடுகள், பண்புகள், பழக்க வழக்கங்கள், அனுஷ்டானங்கள், ஆச்சாரங்கள்-சில காலத்தால் கடந்து செல்லப்பட்டவை, சில காலத்தினால் இன்னமும் அடைய முடியாதவை! காலத்திற்கும், இடத்திற்கும் ஏற்ற வகையில் சமுக திட்டங்களை மாற்றிக் கொள்ளும் மனப் பக்குவம் வேண்டும்.

சமுகம் ஒரு கட்டிப் பொருளல்ல—ஓடும் நீரைப் போல. காலம் பள்ளமானால் விரைந்து ஓடியும் மேடானால் தொடர்ந்து தேங்கியும் தன்னை உருப்படுத்திக் கொள்ளும்.

இந்த உண்மையை நம் நாட்டுப் பெரியோர்கள் உணருவதில்லை — அவர்கள் பழைமைச் சாக்கடையில் நெளியும் புழுக்களாக இருக்கிறார்கள் — ஆகவேதான் மாணவர்கள் இதனைப் புரிந்துகொண்டு காரியமாற்ற வேண்டும்.

நேற்று இருந்தவை இன்றும் இருக்கவேண்டும் என்று அடம் பிடிக்கிறார்கள் நம் பெரியவர்கள். வீம்புக்காக, அவைகளை அவர்கள் அவ்வளவு அழுத்தமாக நம்புகிறார்கள். கல்லூரியிலே பயிலும் காளைகள்தான் எதிர்கால சமுகத்தை உண்டாக்கப் போகிறார்கள்—ஆகவேதான் அவர்களுக்கு பொறுப்பு அதிகமாகிறது.

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்பது நம் இனச் சித்தாந்தம். 'ஜா' என்ற எழுத்தே தமிழ் மொழிக்கு வேம்பு-இருந்தும் இங்கு சாதிகள் ஏற்பட்டு விட்டன. எண்ணிலடங்காதவாறு பெருகியும், விரிந்தும் போயின. 'சாதிகள் ஆயிரமுண்டிங்கு' என்றார் பாரதியார். 'வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்களென்றால் சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்' என்றார் பாரதிதாசன். இந்தச் சாதித் தொல்லையை எதிர்க்காதவர் எவருமில்லை. நமது ஆண்டவன்கள் எதிர்த்திருக்கிறார்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், பக்திமான்கள், பாகவதர்கள் எல்லோரும் எதிர்க்கிறார்கள்.

திவாகர் கமிட்டி என்ற பெயரால் ஒரு சாதியொழிப்பு அமைப்பு ஏற்பாடு செய்து, சாதியை ஒழிக்க வழி காட்டும்படி கேட்டிருந்தனர் நமது ஆளவந்தார்கள். அவரோ, சர்க்கார் ரிகார்டுகளில் சாதிப் பெயர்களை நீக்கிவிடுவோம் என்று குறிப்பிட்டுவிட்டார். சாதியை ஒழிக்க இது வழியில்லை யென்பது மட்டுமல்ல, கேலிக்குரிய சித்திரமாகிவிடுவோம், நாம், இவ்வகையில் சாதியை ஒழிக்க முயன்றால்!

முதல் தேதி பிறந்தவுடனேயே அஞ்சல்காரனை விரட்டியவண்ணம் மணியார்டர் பாரத்தில் கையெழுத்திடும் உங்களுக்குக் கவலை இருக்கமுடியாதுதான்—கல்வி வளர்ச்சிக்கு அத்தகைய கவலையும் இருப்பது நல்லதல்லதான்! நீங்கள் 'இந்து'ப் பத்திரிகையைப் புரட்டுவீர்கள்—இரண்டாம் பக்கத்தில் தேவை விளம்பரங்கள் ஏராளம் தென்படும், உங்கள் கண்களுக்கு—ஆனால், 'Matri-monial' மணப் பகுதிதான் உங்கள் உள்ளத்தை ஈர்க்கும். இப்பொழுது வருகிற விளம்பரங்களைப்போல பத்தாண்டுகளுக்கு முன்னால் பார்த்திருக்கவே முடியாது. இப்பொழுது வருகிறதே விளம்பரம், சாதியைப் பற்றிய கவலை இல்லை, எந்த வகுப்பைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம் என்று!

ஆம், இப்பொழுது உங்களுக்குப் புரிந்திருக்கும் சாதியொழிப்பிற்கு ஏற்ற வழி கலப்பு மணம் என்று! இந்த நாட்டு அரசியல் தூண்டில்காரர்கள், சந்தர்ப்பப் புழுவை முள்ளிலே கோத்து, மாணவ மீன்களைப் பிடித்துவிடுகிறார்கள்—ஆனால், அதே தலைவர்கள் வாய் கிழிய, வயிறு நோகக் கூவுகிறார்கள், மாணவர்கள் அரசியலில் சேரக்கூடாது என்று! நானும் அதே கருத்தைத்தான் வலியுறுத்துகிறேன், ஆனால் ஒரு திருத்தத்துடன்!

தமிழர் சமுதாயம் தாழ்ந்து கிடக்கிறது—அதற்குக் காரணம், நாட்டவரிடையே ஒற்றுமை மனப்பான்மை வற்றிவிட்டது, வேற்றுமை நஞ்சு வெகு வேகமாக பரவி விட்டது, எனவே, அதன் காரணமாக சாதியென்ற பெரு நோய் வந்து தாக்கி விட்டது. தாயகம் நோயாளி நிலையிலுள்ளது — இதனை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள்—அதுவும் எனக்குத் தெரிகிறது.

ஒரு நோயாளி—அவனுக்கு 'இன்செக்ஷன்' எடுத்துக்கொள் என்று உபதேசம் புரிகிறார், டாக்டர். 'சூரணம் ஒன்று தருகிறேன், காலை, மாலை தவறாது, தேனிலே ஒரு சிட்டிகை போட்டுக் குழைத்துச் சாப்பிடு ஒரு மண்டலம் வரை, பிறகு பாரேன்!' என்கிறார் சித்தவைத்தியசிந்தாமணிப்பண்டிதர். சூன்யம்வைத்து விட்டான் எதிரி என்கிறான் மந்திரவாதி பேய் அறைந்து விட்டது என்கிறான் பூசாரி கிரக பலம் சரியில்லை என்கிறான் சோதிடன் ஒரே நோய்—அதற்கு இத்தனை வகையான விசித்திர வியாக்யானங்கள்! தமிழகநோயாளியைப்பார்த்து, இந்த நாட்டுத் தலைவர்கள் கூறும் மருத்துவ முறைகளும் அப்படித்தான் ஒன்றுக்கு ஒன்று வித்தியாசப் படுகின்றன!

ஆனால் தக்க மருந்து எது என்று நீங்கள் தெரிந்து

கொண்டு விட்டீர்கள் — இனிமேலும் தயக்கமேன்? இங்கு கூடியுள்ள மாணவ மறவர்கள் ஒவ்வொருவரும் உறுதி எடுத்துக் கொள்ளவேண்டும். தங்கள் வாழ்க்கையில் கலப்பு மணமே செய்யவேண்டும் என்று!

பெற்றோர்களின் கட்டளைகளை கடைசிவரை மீறாமலிருந்து, அடக்கவொடுக்கமாக நடந்துகொண்டு, நல்ல நேரத்தில் தங்கள் கோரிக்கையை பெற்ற பெருமக்களுக்கு எடுத்துரைத்தால், ஒரு நாளும் தடுத்துவிட மாட்டார்கள். ஆனால் அவர்களுக்கு அளவிற்கு மீறிய தொல்லைகளைக் கொடுத்து, வெறுப்பை விஷ வேகத்தில் வளர விட்டுவிட்டு திருமண நேரத்தில் போய் நின்றால் சுடும் நெருப்பாகத்தான் மாறிவிடுவார்கள். மாணவர்கள் நன்றாகப் படிக்கவேண்டும். பெற்றோர்களின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு நடந்து காரியத்தில் வெற்றி பெற வேண்டும். வீராப்பு பேசிவிட்டு, பிறகு சோரம் போகிற மாணவர்கள் பலரை நான்பார்த்திருக்கிறேன். கல்லூரிகளில் கர்ஜிக்கும் சிங்கங்களாக இருப்பவர்கள். கல்லூரியைவிட்ட பிறகு பெட்டிப்பாம்பாகிவிடுகிறார்கள்! மலர்மணம் பரப்பியவர்கள், உதிர்ந்து கருகிய சருகுகளாகிவிடுகிறார்கள்.

மாணவர்களில் அரசியல் கருத்துகளில் அக்கறை அதிகம் காட்டி, கட்சிப் போராட்டங்களில்ஈடுபடவேண்டும் என்று கூறவில்லை—அது தேவையுமில்லையென்ற கருத்துடையவன் நான். ஒவ்வொரு மாணவனும் தன் எல்லைக்குள்ளாகவே பெரும் தேசத்தொண்டு செய்யலாம். நிச்சயமாகக் கலப்புமணம் ஒருவன்செய்துகொள்வானால், நம்சமுகத்தில், அவனைத் தியாகிக்குமேல் பெருந்தியாகி என்பேன்.

மாணவர்கள் நாளையநாட்டு மக்கள்! ஆகவேதான் அவர்கள் ஓய்வு நேரங்களில் தங்களைச் சுற்றியுள்ளவர்கள் மதியிருளை விரட்டிடும் வேலையை மேற்கொள்ள வேண்டும். அறியாமை பெரும் நோய். அந்நோய் தீருகிறவரை நம்சமுகம் முன்னேறமுடியாது! மூடப்பழக்க வழக்கங்கள் ஏராளம் உண்டு, நம்மவர் இதயங்களில்! அவைகளை நாம்தான் போக்கமுயலவேண்டும்.

ஒற்றுமையும், அறிவும் பெருகிவிட்டால் அந்தச் சமுகம் நிச்சயமாக உலகநாடுகளோடு போட்டியிடும் அளவிற்கு உயரமுடியும்!

ஆனால், மாணவர்களின் மன வளத்தைப் பெருக்கிடும் முறையில் கல்லூரிகளிலும் எருவிடவில்லை. அது வருந்தத்தக்க ஒரு பெருங் குறையாகும்! கல்லூரிகளில் என்னென்ன பாடங்களை வைப்பது என்று முடிவு செய்யும் பாட திட்டக் குழுவார் உலகத்திற்கு எட்டாத விசித்திரப் பிறவிகள்போல நடந்துகொள்கிறார்கள்.

ஒரு மாணவனுக்கு உலகத்தைப்பற்றிய அறிவு எதுவாக இருக்கமுடியும்—கிரகம் ஆகர்ஷண சக்தியால் இயங்க முடிகிறது என்று விஞ்ஞான வகுப்பு கூறுகிறது. ஆயிரம் நா படைத்த ஆதிசேடன் தாங்குகிறது உலகை என்று தமிழ் வகுப்பு கூறுகிறது. பூமி உருண்டையென்று பூகோள வகுப்பு கூறுகிறது. இந்த முரண்பட்ட நிலையில் பாடங்களை வைத்துவிட்டு, மாணவ மனதை இருட்குகையாக்கிவிடுகிறார்கள். பிறகு நாம் எதிர்பார்க்கும் அறிவொளி ஏற்படாமல் போய்விடுகிறது!

கல்வித் துறையில் தொடர்புடையவர்கள், கல்விப் பகுதியில் தலைமை வகிப்பவர்கள், காரியமாற்றுபவர்கள், தமிழ்ச் சமுதாய முன்னேற்றத்தைப் பெரிதாகக் கருதி பாட திட்ட மாற்றத்தில் அக்கறை செலுத்தவேண்டும். காலம் போகிற போக்கினை யுணர்ந்து, கல்வித் துறையில் மாற்றங்கள் செய்யாதவரை மாணவர்கள் எதிர்கால மக்களாகும் பக்குவம் பெறாமலே போய்விடுவர்!

காலமாற்றத்தில் கவனத்தைத் திருப்பி ஒவ்வொரு துறையிலும் புது அமைப்புகள் ஏற்பட வழி வகுத்ததால்தான், இன்று எண்ணிப் பூரிக்கிற அளவு விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது மக்களிடத்திலே — சமுதாயத்திலே ஆண்டு பலவாக மண்டிக் கிடந்த இறந்த கால ஏற்பாடுகளை, இழிந்த பல எண்ணங்களை, முறைகளை இடித்து நொறுக்கிட ஒரு படை புறப்பட்டு வேலை செய்ததால் இன வுணர்ச்சியும், மொழிப் பற்றும், நாட்டுவேட்கையும் ஏற்பட ஆரம்பித்தன, தமிழகத்தில்!

மொழிப் பற்று என்றவுடன், மற்ற மொழிகளை அப்படியே வெறுத்தொதுக்கவேண்டியது என்ற கருத்திலே குறிப்பிடவில்லை! பிற மொழிகளை கதிரவன் ஒளியைப்போல, சுகந்தரும் தென்றலைப்போல வரவேற்கிறோம். இந்தியைக்கூட நாட்டின் நல்லறிவாளர்கள் கட்டாயம் என்றபோதுதான் கடுவிஷத்தைக் குழந்தைகளுக்குக் கொடுக்கிறார்கள் என்ற அளவிற்குகோபமும் ஆத்திரமும் உண்டாகிவிட்டன!

தாய் மொழி காக்க, வீரர்கள் கிளம்பிவிட்டனர். வீட்டிற்கொரு பிள்ளையைப் பெற்றோர்கள் அனுப்பினர். அவர்கள் சிறையைக் கண்டு சிரங் கவிழ்த்துக் கொள்ளவில்லை — அடக்குமுறை கண்டு அடங்கிவிடவில்லை—தடியடியைப் பார்த்ததும் தயங்கி நிற்கவில்லை. சிறைகளை, 'சிங்கார வனங்களாக எண்ணி, ஆணும் பெண்ணுமாக ஆயிரக்கணக்கிலே சென்றனர். தாலமுத்து நடராசன் என்ற இரண்டு உயிர்களையும் தாய் மொழிக்காகத் தத்தம் செய்தனர்; வென்றனர்.

மீண்டும் அதனைக் கொண்டு வம்பு கொடுத்தனர், இன்றுள்ள ஆளவந்தார்கள்—ஆனால், அவர்களே உண்மையை உணர்ந்து கட்டாய மொழி என்ற நிலையை மாற்றிவிட்டார்கள். களிப்புக் கடலில் தமிழகம் மூழ்கி எழுந்தது. சர்க்காரைப் பாராட்டினர் இதயமுள்ள தமிழர்கள் எல்லாம்—இனப்பற்றும், மொழியார்வமும் குன்றாத தென்னாட்டாரெல்லாம்!

மொழிப் பற்று என்றவுடனேயே மொழித் தூய்மையென்ற பெயரால் பிடிவாத எண்ணங்கள் பல வற்றை இளைஞர்கள் இதயத்திலே நுழைக்க வேண்டும் என்பதற்காக அல்ல—வெளிப்படையாகவே சொல்கிறேன். வடமொழியிடத்துத் தமிழர்கள் வெறுப்புக் காட்ட வேண்டும் என்று நான் கூறவில்லை.

மொழியிலே களைகள் போகவேண்டும்—களைகளை நீக்கவேண்டும் என்று கூறுவதிலே தவறில்லை. லக்ஷிமி நாராயணன் என்ற சொல்லை இலட்சுமிநாராயணன் என்று திருத்தி எழுதுவதிலே திருப்தி காணுதவன்—அந்தப் பெயரால் குறிப்பிடப்படுகிற ஆண்டவன் அவன் மனைவி, அவனிருக்கும் பாற்கடல், அதிலிருக்கும் ஆதிசேடன், அங்கு தேவர்கள் வந்து அடிக்கடி முறையிடுவது......இவை போன்ற மௌடீக எண்ணங்களை வளர்த்து விடுகிறதே அந்தச் சொல் என்று எண்ணிடும் கூட்டத்தைச் சேர்ந்தவன். மொழிப்பற்றை வெறியாக்க விரும்பாதவன் — விவேகக் குறைவான வேலை

(அடுத்த பக்கத்தில்)

# வேஷம் போடுகிறார்கள்!

நடிப்புப் புலவர்-K. R. ராமசாமி

பேசாதே!

கதை எழுதாதே!

நடிக்காதே!

காங்கிரஸ் சர்க்கார், 'வாழமுடியவில்லை — வகை செய்வீர்' என்று கேட்கும் மக்களை நோக்கி, இந்தக்கணைகளை வீசுகிறார்கள்.

மக்கள் நலன்பேசி மார்தட்டி ஆட்சிப்பீடம் ஏறிய இவர்களிடம் நாடு எதிர்பார்த்தது இவைகளையல்ல. என்றாலும், எதிர்க்கட்சிகளின்மீது பாய்ந்து தங்கள் ஆசையைத்தீர்த்துக்கொள்வதையே ஆட்சியின் இலட்சணம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

நமது இயக்கத்தாரின் கருத்துக்களிலோ, எழுத்துக்களிலோ என்னதவறு இருக்கிறது என்று, இதுவரையில் எந்தக்காங்கிரஸ் மந்திரியாலும் வெளிப்படையாகச் சொல்லமுடியவில்லை. நமது இலட்சியப் பாதையின் கருத்துக்களை மறுத்து எந்தகாங்கிரஸ் தலைவரும் பேசியதுகிடையாது.

அவர்கள், தங்கள்எண்ணங்களை மக்களிடம்பரப்ப வானொலி நிலையம் வைத்திருக்கிறார்கள். பெரிய பத்திரிகைகள் உண்டு அவர்களிடம். சினிமா பிடித்து மக்களிடம் காட்டமுடியும். இத்தகைய பிரச்சார வசதிகள் மூலம் நாம் கூறுபவைகளை மறுக்கலாம்—அவர்கள்.

ஆனால், அவர்கள் இத்தனை வசதிகளிருந்தும் நம்மைப் பார்த்து 'வகுப்புவாதி'—என்று ஏளனமாகப் பேசியே திருப்தியடைய எண்ணுகிறார்கள். காரணம், நமது கருத்துக்களை அவர்களால் மறக்க முடியவில்லை. நாம் கூறுபவை, நாட்டின் நலிவைத் துடைக்கும் கருத்துக்கள். எனவே, அவர்கள் ஜீவசக்தி வாய்ந்த நம் மீது, கோபத்தைக்காட்டி அடக்க முனைகிறார்களே அல்லாது விவேகத்தால் வெல்ல முடிவதில்லை.

நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையில் காங்கிரசார் ஆட்சி நடத்த வேண்டும் என்பது தான் நமது ஆசை. ஏழைகளும் பணக்காரர்களும், குடிசையும் மாளிகையும், கோடீசுவரனும் பிச்சைக்காரனும் நிறைந்தது தான் நாடு. நாட்டை ஆள்வோர், ஏழையை பணக்காரன் உறிஞ்சாமலும், புலி ஆட்டைக் கொல்லாமலும் கவனித்து ஆட்சியை நடத்தவேண்டும். பணக்காரன் வீட்டில் பலலாயிர வகை உணவுகளோடு பந்தி பரிமாறும்போது, ஏழைக் குடிசையினர் முச்சந்தியில் நின்று கதறுவது ஏன்? எதனால்? என்பதை நினைத்து, அவைகளைப் போக்கி, வாழச் செய்யவேண்டும்.

வாழத்தான் மனிதன் பிறக்கிறான்—ஆனால் முப்பத்து முக்கோடி தேவர்களும் அவர்களைப பரிபாலிக்கும் அரி, ஹர, பிரம்மாக்களும் நிறைந்த இந்த 'புண்ணிய பூமியில்' — சிலர், போக போக்கியங்களோடு வாழ்கிறார்கள்! பலர் உடல் துடித்து சாகிறார்கள்!!

இந்தப் பரிதாபக் காட்சியைப் பாரீர், என்று நாம் எடுத்துக் காட்டுகிறோம். இதைப் போக்கப் பரிகாரம் தேடவேண்டாமா—என்று அன்போடு கூறுகிறோம். நமது வேண்டுகோளைக் காணும் ஆளவந்தாரோ, ஆத்திரப்படுகின்றனர். காரணம், நாடு படும் வேதனை அவர்களுக்கும் தெரிகிறது! ஆனால், சமாளிக்கும் சாதுர்யமும், வழி வகைகளும்தான் இல்லை அவர்களிடம்!!

இந்த நிலை இன்றுள்ள ஆட்சியாளரிடம் வளர்ந்து வரும் காரணத்தால—மக்களிடம் முன்பு இவர்களுக்கிருந்த செல்வாக்கு மங்கி வருகிறது. காங்கிரஸ்காரர்கள் என்றாலே, 'அவர்களை கலியுகக் கடவுள்கள்' என்று முன்பு மக்கள் கொண்டாடினர், வெள்ளையன் ஒழிந்து காங்கிரஸ் ராஜ்யம் ஏற்பட்டால் நாட்டில் தேனும் பாலும் ஓடும்–சுகத்தோடு வாழலாம் என்று மக்கள் நம்பினர், நம்பும் வகையில் இன்றுள்ள 'கனம்கள்' அன்றுகர்ஜனை எழுப்பியதால்!

நம்பிக்கை நாசமாகி—எதிர்பார்த்தது கிடைக்காமல் ஏமாற்றம் அதிகமாவதால் 'காங்கிரஸ்' என்றாலே, வெறுக்கின்றனர் மக்கள்.

(அடுத்த பக்கத்தில் பார்க்க)

30-ம் பக்கத் தொடர்ச்சி

களிலீடுபடக்கூடாது என்ற கருத்துடையவன். இன்று நாட்டிலே நடமாடும் சீர்திருத்த இயக்கத்தவர் இந்த வகையிலேயே மொழி வழி எழும் பிழைகளைத்திருத்த முனைகிறார்கள். அப்பொழுதுதான் வடமொழிக்கு எதிர்ப்பு ஏற்படுகிறது, தாயகத்தில்! வேறொன்றுமில்லை.

மாணவர்கள் இக்கல்லூரியை விட்டு வெளியேறு முன் எவ்வளவோ அரியபெரிய உண்மைகளை அறிந்து கொள்ள இருக்கிறார்கள். இவைகளையெல்லாம் அவர்களை அனுப்பிய பெற்றோர்களோ, அவர்களுடனுள்ள மற்றவரோ அறியமாட்டார்கள். சொன்னாலும் நம்பமாட்டார்கள். பழைமையின் பிடி அவ்வளவு வலுவானது!

ஆகவேதான் மாணவர்கள், இம்மாதிரி மன்றங்களின் மூலம் தங்கள் நாவன்மையை வளர்த்துக் கொள்ளவேண்டும் எழுத்துத் திறமையைச் செழிக்கச் செய்ய வேண்டும். இன்று திறக்கப்படுகிற தமிழ் மன்றத்தில் எதைப் பற்றி வேண்டுமானாலும் பேசலாம்—தவறில்லை. அரசியல் கருத்துகளை எடுத்து ஆராயலாம்-குற்றமில்லை! ஊரிலே குஸ்திச் சண்டை நடக்கிறது. செல்கிறோம் தூரத்திலே இருந்து பார்க்கிறோம். பார்ப்பதினாலேயே நாம் குஸ்தி சண்டை போடவேண்டும் என்பதல்ல—நம்மைப் போன்று பார்த்தவர்களிலேயே சிலர் கட்சிப் பிரிவினை ஏற்பாடு செய்துகொண்டு தாக்கிக் கொள்வார்கள் — குஸ்திச் சண்டை நடக்கும் மைதானங்களில் இது வாடிக்கையான வேடிக்கை! அது போலத்தான் மாணவர்கள் அரசியல் கருத்துக்களால் அவதிகளைப் பெருக்கிக் கொள்ளக் கூடாது—ஆராயும் நிலையோடு நிறுத்துக்கொள்ளவேண்டும்.

இந்தத் தமிழ் மன்றம்: நல்ல பேச்சாளர்களை, நல்ல எழுத்தாளர்களை நாட்டிற்கு நிச்சயமாகத் தரப் போகிறது—இம்மன்றம் எதிர்காலத்திற்கு இன்றியமையாத வீரர்கள் பலரை பயிற்சியளித்து அனுப்பும் பாசறையாகத் திகழட்டும். பாடி வீடாக மிளிரட்டும்! போர்க்கூடாரமாக அமையட்டும்!

தகுதி திறமை

# தங்கத் துளிகள்

நான் படுத்திருந்தேன்—ஏதோ ஒரு தங்க ஒளி என்மீது பட்டது-திடுக்கிட்டு விழித்துக்கொண்டேன். ஒரு எழில் மாது நின்றுகொண்டிருந்தாள். அவளது பொன்னுடல் அந்த ஒளியாலே அதிக காந்த சக்தியை அடைந்து, என் கண்களுக்குள்ள கூச்சத்தை கூட்டிவிட்டது! என்னைப் பார்த்துச் சிரித்தாள்—நான் திரு திருவென விழித்தேன். அவள் என்னிடம் இரண்டு இலைகளைக் கொடுத்தாள்—அவை விசித்திரபுரி பர்வதத்தில் விளையும் ஆச்சர்ய இலைகள் என்று விளக்கினாள். அவைகளின் பெயர்களையும் சொன்னாள். எனக்குத் தெளிவாக நினைவில்லை—ஓரளவு கவனமிருக்கிறது—தகுதித் துளிர், திறமைத் தளிர் என்று கூறினாள் என்று நினைவிலிருக்கிறது. அது ஒரே செடியிலிருக்கும் இலைகளின் வெவ்வேறான பருவங்களில் பறிக்கப்பட்டனவாம்—துளிர் மிகச் சிறிய இலை—தளிர், கொஞ்சம் இலைநிலையடையுந் தறுவாயில் நிற்கும் கொழுந்து!

இத்தனையும் கூறி முடித்து, தகுதித் துளிரைக் கசக்கி வாயில் போட்டுக்கொள்ளும்படிக் கட்டளையிட்டாள். அப்படியே செய்தேன். என்ன ஆச்சர்யம்!-எனக்கு சிறகுகள் முளைத்துவிட்டன. பிறகு திறமைத் தளிரைக் கசக்கிக் கண்களிலே பிழிந்து கொள்ளச் சொன்னாள். செய்தேன், சொன்னபடி-உலகமே என் கண்களுக்குத் தெரிந்தது! 'தேவி, நீ யார்' என்றேன். 'என்பெயர் சமூக தேவி—நீ நாட்டைச் சுற்றிவிட்டு ஓடிவா' என்றாள் மறைந்துவிட்டாள். ஒளி போயிற்று — நான் காரிருளில் நின்றேன். நடந்துகொண்டே இருந்தேன்.

[லொட் லொட் என்ற ஒலி கேட்கிறது. ஒரு அழகிய சிலையினடியில் ஒரு சிற்பி உட்கார்ந்து, அச்சிலையின் விழிகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறான்.]

சிற்பி:- யார் அங்கே?

நான்:- தென்னாட்டான்!

(அடுத்த பக்கத்தில்)

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

அதிருப்தி அதிகமாகி வருகிறது, நாட்டில். காணும் மந்திரிமார்களோ, அதிருப்தியைப் போக்கி முன்பிருந்த அன்பைப் பெறவேண்டும் என்று ஆர்வத்தில் புதுப் புது 'வேட்டுகளை'க் கிளப்பினர்! ஏதோ, பெரிய நன்மைகளைச் செய்வதுபோல நாடகமாடுகின்றனர்!!

அவைகளில் ஒன்றுதான் சமீபத்தில் வடநாட்டிலிருந்து இங்கு உணவு மந்திரி வந்தது—வந்தவரிடம் மக்கள், தங்கள் காய்ந்த வயிற்றைக் காட்டி 'ஐயா, சோறு!' என்று கேட்டனர். ஆனால் அவரோ, 'ஆகா—தருகிறேன்' என்று மரங்களை நடச்சொன்னார்! மரம் பெரிதாகி, மழையை வரவழைக்கும் — பின் உணவு கிடைக்கும் என்று போதனை செய்தார்!!

ஜஸ்டிஸ் கட்சியும், நாட்டை ஆண்டிருக்கிறது. அது போதும் காடுகளும், சோலைகளும் வளர்க்கும் வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. சாலை மருங்கும் சோலைகள்! திடல்களிலெல்லாம் காடுகள்! அப்போது இவ்வளவு ஆடம்பரம் இருந்ததில்லை. உத்திரவிடுவார்கள்—அந்தந்த இலாகா அதிகாரிகள் அவைகளை நிறைவேற்றி, பொறுப்போடு மரங்களை வளர்ப்பார்கள். மரங்களும் வளரும்!

இவர்களோ, நடுவது பத்துமரம். அதற்கு இவ்வளவு ஆர்ப்பாட்டம்! எல்லா மந்திரிகளும் மரம் நடவந்தார்கள். ரேடியோவில் பேசினார்கள். ஊரெல்லாம் சுற்றினார்கள். ஆனால் என்ன நடந்தது? வீதிக்கு இரண்டாக நட்டுவிட்டுச் சென்றமரம், இவர்கள் ஆட்சியைப்போல கருகிப்போய்க் கிடக்கிறது!

முன்பெல்லாம், நாடகங்களில் ஒரு பாட்டுபாடப் படுவதுண்டு. நானே பலதடவைகளில் பாடியிருக்கிறேன்.

"சாலையிலே இரண்டுமரம்
சர்க்கார் வச்ச மரம்
ஓங்கி வளர்ந்த மரம்..........."

என்பதாக. எல்லா சர்க்காரும் மரம்வளர்த்தலில் சிரத்தைக் காட்டியது என்பதுதான், அந்தக் காலத்து நாடோடிப் பாடலாகிய இது விளக்குவதாகும். ஆனால், இந்தச் சர்க்கார் தாங்கள் ஏதோ ஒரு புது ஆராய்ச்சி கண்டு விட்டதுபோல் பிரமாதப் படுத்துகின்றனர்! 'வன—ம—கோ—த்—ச—வம்' கொண்டாடுகின்றனர்!

இதுபோன்ற ஆடம்பர ஆர்ப்பாட்டங்கள்மூலம், தாங்கள் மக்கள் நன்மைக்காக மாபெரும் காரியங்கள் செய்வதாக வேஷம் போடுகின்றனர். இதுபோன்ற வேஷங்களை—நாம் விளக்கி, அறிவுக்கேற்ற வகையில் நாட்டின் பிரச்சினைகள் அப்போதைக்கப்போது தீர்க்கப்படவேண்டும், அப்படிச் செய்யத்தவறுகிறது. மக்களிடம் பாவியுள்ள மூடநம்பிக்கையைப்பயன்படுத்தி, தங்களின் கையாலாகாத்தனத்தை மறைக்கப் பார்க்கிறது, என்று எச்சரிக்கிறோம். நமது எச்சரிக்கை, எரிச்சலாகத் தென்படுவதாலேயே நம்மீதுபாய்வது பெரிதெனநினைக்கின்றனர் — மோசமான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

இந்தப் போக்கால், இவர்கள் செல்வாக்கும் வளராது. நமது, சக்திவாய்ந்த கொள்கைகளும் மங்கிவிடாது.

சி:- நான் பிறந்த பொன்னாட்டில் பிறந்தவன் தானா நீயும்—கேட்டாயா, நம் நாட்டில் இன்று உலவி வரும் ஒரு கேடுகெட்ட செய்தியை—என்னால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை, சில துட்டர்கள் கட்டிவிட்ட கதையை!

நா:- சிற்பியாரே, சொல்வதைத் தெளிவாகச் சொல்லுங்கள்.

சி:- தாய்நாட்டாரே, நாம் பிறந்த மண்ணில் நம் சந்ததியாருக்குத் தகுதியில்லையாம், திறமையில்லையாம்—சொல்கிறார்கள், சில அற்பர்கள்!

நா:- தகுதியும், திறமையும், தருக்கரின் துலாக் கோலாலேயா நிறுக்க முடியும்?

சி:- தருக்கரின் செருக்குக்குத் தானே, சர்க்காரும் துணையாய் நிற்கிறது!

நா:— ஆத்திரம் வேண்டாம்.

சி:— ஆத்திரமில்லை அன்பரே, கோத்திரப் பெருமையைக் காட்டி, சாத்திர ஏடுகளை நீட்டி, நம் இனத்தினரை நாயினும் கீழாய் நலியவைத்து விட்டார்கள்.

நான்:— பொறுப்போம்—அதனால் தவறில்லை.

நா:— தங்கம் விளையும் என் தாய் நாட்டுத் தோழரே—என்னைப் பாரும்—என் கரத்திலே உள்ள சிறு உளி, அதன்மீது அடிபடும் இந்த சுத்தி—இந்த இரண்டையும் கொண்டு உருவாகியிருக்கும் எழில் சிற்பத்தைப் பாரும். என்னைத் திறமையற்றவர்களின் முன்னவன் என்று பேசினால், என்னால் பொறுத்திருக்க முடியவில்லை! என் பிள்ளைக்குத் தகுதியில்லையென்று கூறினால் என்னால் பொறுமையுடனிருக்க முடியவில்லை.

நா:— புறப்படுங்கள் போவோம் —போர்க்களம் அமைப்போம்.

சி:— அதற்கு முன் இந்த இறந்த உலக மக்களையெல்லாம் சந்திப்போம்.

[மிக உயர்ந்த கோபுரம்—அதனடியில் ஆயிரக்கணக்கானவர்கள் கூடியிருந்தனர். எல்லோரும் கண்ணீர் வடித்தவண்ணம் உட்கார்ந்திருந்தனர்.]

சி:— கோபுரம் கட்டிய கோமான்கள் நீங்கள்—ஆனால் இன்று குந்தி அழுவதால் ஆகும் காரியம் என்ன? எழுங்கள், விழியுங்கள்—புறப்படுவோம்!

ஒருவன்: — கோபுரத்தைக் கட்டினோம், வானை முட்டிட!

மற்றொருவன்:— நம் இரத்தத்தைச் சேறாக்கி, வியர்வையை நீராக்கி எலும்புகளை, நரம்புகளை, சதைத் திரளைக் கருங்கற்களாக்கி, கோபுரத்தை எழுப்பினோம்.

இன்னொருவன்:— அத்தனையும் செய்தோம் நாம்—அதனை அரைக்குடம் நீரால் குளிப்பாட்டி விட்டு, நாம் தொட்ட தீட்டு போய்விட்டது என்று கூசாமல் கூறுகிறது ஒரு கூட்டம்—வெட்கமில்லாமல் கேட்டுச் சகித்துக் கொண்டிருக்கிறார்கள், நம் சந்ததியினர்.

கோபக்காரன்:— சூத்திரர்கள் நாமாம், என் ஆத்திரம் கரை புரளுகிறது. கும்பாபிஷேகம் செய்து, உழைப்பாளி உலகை அவமானப்படுத்தி வருகிறது ஒரு ஊதாரிக் கூட்டம்!

சி:— ஊருக்குழைத்து விட்டு உருமாறிப்போன உத்தமர்களே, கோபுரத்தைக் கட்டி முடித்தீர்கள் நீங்கள்—சிலையைச் செய்து தந்தேன் நான். இரண்டாலும் வயிறு வளர்க்கிறார்கள் சிலர். அவர்கள் சொல்கிறார்கள் நம் வழி வந்தவர்களுக்கு தகுதியில்லையாம், திறமைக் குறைவாம்!

எல்லோரும்:— வெட்கம், வெட்கம்!

நா:— நீங்கள் வெட்கப்படுவது உண்மையானால், மானம் சூறையாடப்படுவதை அறிந்து ஆத்திரப்படுவது உண்மையானால், தென்னாட்டார் என்பது உண்மையானால், உங்கள் உடலில் ஓடும் இரத்தத்தில் வீரம் விளையாடுவது உண்மையானால் உடனே புறப்படுங்கள்.

சி:— தென்னாட்டுத் திலகங்களே, தயங்கவேண்டாம். நமக்குத் தகுதியில்லையாம்—திறமையில்லையாம்—சோல்லாமல் சொல்கிறார்கள் சிலர். அவர்களுக்குச் சொல்வோம் — அவர்களுக்குச் சொரணை ஏற்படுகிறவரை, சிந்தனையில் சென்றுதைக்கிறவரை!

[கலப்பை அசைந்து செல்கிறது வயல்களில். பாட்டிசைத்த வண்ணம் உழவர்கள் மாடுகளைத் தட்டி ஓட்டுகின்றனர்.]

சி:- தனக்கென வாழாத தங்கக்குணம் படைத்தோரே, உழுது உழுது பிறர் வயிற்றை வீங்கவைத்து ஏங்கிச் செத்தது தவிர நீங்கள் கண்டது என்ன? உங்கள் திறமையால் உலகம் வாழ்கிறது. எனினும் உங்கள் பரம்பரைக்குத் திறமையில்லை என்று பிறர் உழைப்பைத் திருடி வாழும் உன்மத்தர்கள் கூறுகிறார்கள்.

ஒருவன்:- தகுதியில்லையாம், நமக்கு!

உழவன்:- வயலை வளமாக்கி, வாழ்வினைச் செழிக்கச் செய்வது திறமையில்லையா! அந்த உழைப்பின் உருவங்களுக்கு உரிமைபெறத் தகுதியில்லையா?

வேறொருவன்:- தகுதி, திறமைபேசி, உரிமையைத் தட்டிப் பறிக்கப்பார்க்கிறார்கள், தகிடுதத்தக் காரர்கள். பார்ப்போம் ஒருகை—கிளம்புங்கள், சிங்கங்கள் நாம் என்பதைக் காட்டுவோம், அந்த இழிகுணத்தவருக்கு!

[கூட்டம் வரவர வளர்கிறது அடுத்து தறியோடுகிறது. நெசவாளிகள் வேலைசெய்து கொண்டிருக்கின்றனர்]

நா:- பார்த்தீர்களா, பாரிலுள்ளோரது மானங் காத்திடும் மகான்கள்—பிறருக்கு பட்டு, பீதாம்பரம் அளித்துவிட்டு தாங்கள் கந்தலை கட்டிக்கொண்டுவேலையிலே முனைந்து விட்டார்கள்.

சி:- துணிமணிகள் தந்திடும் போரணி வீரரே, ஆண்டவனிலிருந்து அன்னக்காவடிவரை உங்களால் தங்கள் மானத்தைக் காத்துவருகிறார்கள். ஆனால் தகுதியில்லையாம் உங்களுக்கு, திறமைக் குறைவாம், தளுக்குமொழிபேசி, மேனி மினுக்கைக் காட்டி நம்மவரைத் தாழ்த்திவிட்ட தீயர் கூட்டம் கூறுகிறது.

நெசவாளி:- அப்படியா? நம் திறமையை எள்ளி நகையாடுகிறார்களா? தகுதி கிடையாதெனப் பேசிடும் தடித்தனம் படைத்தவர்கள் இந்தப் பூமியில் வாழும் தகுதியை இன்னமும் அளித்துள்ளார்களா, நம் வழி வந்தோர்! வெட்கம், வேதனை!

நா:—நாம் செல்லுவோம், இப்பொழுதே, கொல்லுவோம் கொடுமையை, சொல்லுவோம் அந்த சூது மதி படைத்தவரின் சூழ்ச்சிகளை!

[தொழிலாளர்கள் அனைவரும் திரண்டு வருகின்றனர். எல்லோரும் கோபத்தால் கொழுந்துவிட்டெரியும் தீச்சுவாலைபோல நடந்து வந்துகொண்டிருந்தனர். ஒரு

[பெரிய திடல் — அதன் பெயர் உரிமை மைதானம். அங்கு, காவியம் செய்தோர், ஓவியக்காரர், ஆடல் பாடல் அறிந்தோர் இன்னும் எல்லா வகையினரும் குழுமி நின்றனர்]

நா:—நாட்டவரே, நல்லவரே, கேட்டீரோ, நம்மை இழித்திடுவோர் ஆட்டமும், பாட்டமும் வளர்ந்து விட்ட கதையை! நான் தென்னாட்டான். சமூக தேவி என்னை அனுப்பினாள். உங்களைக் கண்டேன். உணர்ச்சியை உண்டேன். உவகை கொண்டேன். இறந்த உலகத்திற்கு நீங்கள் வந்துவிட்டீர்கள். ஆனால் உங்கள் சொந்தக்காரர்களுக்கு திறமையில்லை, தகுதியில்லை என்று சொல்லுந் துணிவும் பிறந்துவிட்டது சிலருக்கு! ஆகவே, கல்லறை பூமியைக் கடந்து வாருங்கள், போவோம், போய், நம் தகுதியையும், திறமையையும் காட்டுவோம்.

சி:— நாம் ஆண்ட பரம்பரையினர். சேரனாயிருந்திருக்கிறோம், சோழனாக வாழ்ந்திருக்கிறோம். பாண்டியனாக பவனி வந்ததுண்டு. கோட்டை கொத்தளங்கள் உண்டு, மதியூக மந்திரிகள் இருந்திருக்கிறார்கள், படையுண்டு, அகழ் உண்டு, அரண்மனை உண்டு—எல்லாம் உண்டு. இருந்தும் இன்று 'எச்சல் இலைகளால்' எளனப்படுத்தப்படுகிறார்கள், நம்மவர்கள்.

உழைப்பாளி:— கோட்டை கட்டினோம். கோபுரம் எழுப்பினோம், நாடு திருத்தி நகரமைத்தோம், சிற்பங்கள் செய்தோம், அற்புதக் காவியங்கள் ஆக்கினோம், அழகான சோலைகள், சாலைகள் அமைத்தோம். எல்லோரா சிற்பங்கள் நம் விரல்களின் வெளியீடு, அஜந்தா நம் அற்புதக் கற்பனையின் குழந்தை — ஆகாயத்தை அணைத்து மகிழும் கோபுரங்களைத் தாங்கியுள்ள கோயில்களை ஆக்கித் தந்தோம் நாம். இத்தனைத் திறமைக்குரிய செயல்களைச் செய்யத் தெரியாத இனம் நம்மைப் பார்த்துக் கேலி பேசுகிறது. அந்தோ என்ன கொடுமை!

உ:— திறமை இல்லை என்று சொல்கிறார்கள்— தகுதி பெறவில்லை யென்று பேசுகிறார்களே—இவர்களுக்கு இதைச் சொல்லும் தகுதியை யார் அளித்தார்கள்? நாடற்ற நாதியற்றவர், நாடாண்ட பரம்பரைக்கு நியாயம் வழங்குகிறது! விசித்திரமான வேதனை!

நா:— வாருங்கள், தாயகத்திற்கு, ஒவ்வொரு நிகழ்ச்சியாகப் பாருங்கள்.

[எல்லோரும் கிளம்பி நடந்தார்கள்—நடக்கவில்லை, அசைந்தார்கள், அவ்வளவு பெரிய கூட்டம். தென்னாட்டை அடைந்துவிட்டார்கள். நீதி மன்றத்தினுள் நுழைந்துவிட்டனர். அங்கே ஒரு வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. சிறிது சத்தமுமின்றி அமைதியாக அதனைக் கவனிக்கின்றனர்.]

நீதிதேவன்:— நீ யார்?

குற்றவாளி:— இந்நாட்டுக் குடையவன்.

நீ:— அதனால்தான் உனக்கு எதிலும் உரிமையில்லை. கல்லூரிகளில் இடமில்லை, பணி மனைகளில் வேலையில்லை.

கு:— ஏன்?

நீ:— தகுதியில்லை.

கு:— அப்படியென்றால்...

நீ:— உன்னைக் காட்டிலும் திறமைசாலிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அளித்து மிகுதிப்பட்டால் தான் உனக்கு இடம்.

கு:— தகுதி, திறமையை அளக்கும் கருவிக்குப் பெயர் என்னவோ?

நீ:— மதிப்பெண்.

கு:— (சிரித்துக்கொண்டே) அதனை வாங்கும் முறையும், போடும் வகையும் ஊரறிந்த இரகசியமாயிற்றே.

நீ:— (முகங் கடுகடுக்க) அதிகம் பேசாதே—சட்டத்தின்படி நான் சொல்லிவிட்டேன். இதனைத் தட்டி நடந்தால் ஆபத்துதான்.

கு:— ஆபத்து யாருக்கு?

நீ:—பேசாதே மேலும்—போ, போய்விடு!

[நீதிமன்றம் கலைகிறது. இறந்த உலகத்திலிருந்து எல்லையில்லாத ஆத்திரத்தோடு கூடியிருந்தவர்கள், இன்னும் கோபத்தின் உச்சிக்குக் குடிபோய்விட்டார்கள்! வெடிக்கும் எரிமலையாக நடந்துவந்தனர்]

நா:—தகுதி, திறமை நமக்கு இல்லையென்பது இருக்கட்டும்—தகுதி, திறமையுடையவர்கள் என்று பெருமையடித்துக்கொள்ளும் பித்தர்களைப்பற்றியும் ஆராய்ந்து விடுவோம்.

சி:—அதுவும் முறைதான்—ஆகட்டும், புறப்படுங்கள்!

['ஈஸிசேரி'ல் சாய்ந்தபடி, தேர்வு விடைத் தாள்களைத் திருப்புகிறார் பேராசிரியர் பிச்சைக் காசு. அப்பொழுது அவரது தர்ம பத்தினி பேராசைப் பெருந்தேவி அங்கே வருகிறாள்]

பி:—பார்த்தியாடி, உன் அண்ணமகன் செய்திருக்கிறதே.

பே:—என்ன பண்ணிட்டான்—நன்னா எழுதியிருக்கானோல்லியோ—அவன் சமர்த்தாச்சே!

பி:—அவன் சமர்த்தை நீதான் மெச்சிக்கணும்! காலங் கெட்டுண்டு வர்ரது. அந்தப் பயல்கள் சொல்கிறமாதிரி இவன்களும் மக்காயிண்டே போறான்க.

பே:—என்னா இப்படிப் பேசறேள்?

பி:—ஒரு மண்ணாங்கட்டியும் எழுதலேடி. ஒரு கணக்கானும் ஒழுங்காப் போடல்லே!

பி:—(யோசிக்கிறார் சிறிது நேரம். பிறகு) சரி அவனுக்கு ஒரு கடுதாசு போடு—வந்து தொலையட்டும். புதுசா ஒரு பேப்பர் எழுதட்டும். என்ன பண்றது— கர்மம்!

[கடுதாசி எழுத அவள் அவசர அவசரமாக உள்ளே நுழைகிறாள். ஏகாம்பர முதலியார் வியர்வை சொட்டச் சொட்ட அப்பொழுதுதான் மாடிப்படியேறி வருகிறார்]

பி:— வரணும், முதலியார்வாள்! ஏது இவ்வளவு தூரம்—வரமாட்டேளே?

ஏ. மு:—உங்களுக்குத் தெரியாததா? நம்ம பயல் கணக்கிலே கொஞ்சம் 'டல்'......அதனாலே...

பி:— முதலியார்வாள், கொஞ்சம் என்னை மன்னிக்கணும். என்னண்டேதான் கணக்கு பேப்பர் இருக்கு—நினைச்சால் போடலாம். ஆனால்...

ஏ. மு:—அப்படியெல்லாம் ஒண்ணும் சொல்லப்படாது. எப்படியாவது நீங்கதான் கருணை காட்டணும்!

பி:— உங்க பயலுக்கு என்னண்டை வர்ரது தெரிஞ்சாலே பிடிக்காதே!

ஏ. மு:—அவன் கிடக்கிறான், சிறுவன், ஏதோ இந்தக் கட்சியிலே சேர்ந்து கத்தறானேன்னு பார்க்கி றீர்களோ. அதெல்லாம் மனசிலே வைக்கப்படாது.

பி:- என்ன செய்யச் சொல்றேள்......

ஏ. மு:- இதை வைச்சுக்குங்கோ...

[ஒரு பையை நீட்டுகிறார் அதற்குள் இரண்டு நூறு ரூபாய் நோட்டுகள் இருக்கின் றன. பேராசிரியர் பார்க்கிறார். அசட்டு சிரிப்பு தவழ்கிறது அவர் முகத்தில்]

பி:— ஒரு நானூறு ரூபாய்க்கு நேக்கு செல விருக்கு—ஆத்திலே கூட ஒரு பட்டுப் புடவை புது மாதிரியிலே வந்திருக்காமே உங்க கடையிலே, அதை வாங்கணும்னு பிடிவாதம் பண்ணிறா.

[அப்போதுதான் மீண்டும் வந்த அவர் மனைவி பேசுகிறாள்.]

பி:— முதலியார்வாள், அவா சொல்றது, புனலூர், புவனசுந்தரி பார்டர் புடவையை—உங்க கடையிலே இருக்கேல்லியோ!

ஏ. மு:— சரி, புடவை அனுப்பறேன். என்னங்க பையனைக் கொஞ்சம் கவனிச்சுக்குங்க பாக்கி இப்பவே வேணுமானாலும் தந்துடரேன்!

[அவர்கள் எல்லோரும் இந்தக் காட்சியைப் பார்த்தனர். இந்த அர்த்தமற்ற மார்க்கை அடிப்படையாகக் கொண்டு நம்மினத்தை திறமையற்றவர், தகுதியிழந்தவர் என்று தீர்மானிக்கச் சொல்கிறார்களே என்று ஆத்திரம் தொனிக்க அவரவர் ஏதேதோ பேசிய படி நடந்தனர். ஒரு பெருங்கூட்டம்— இதோ ஒரு சிங்கக் குரல் கேட்கிறது. அமைதியாகக் கேட்கின்றனர்.]

பேச்சாளர்:— சிங்கத் தமிழரே கேளுங்கள்! நமக்குத் தகுதி இல்லை, திறமை போதாது என்று காட்ட புதியதொரு கருவியை எதிரிகள் கண்டுபிடித்துவிட்டார்கள். மதிப்பெண் பெறுவது தகுதிக்கும், திறமைக்கும் அடையாளமானால், இன்று ஓடும் இரயிலை அமைத்தவர்கள், பறந்திடும் விமானத்தை, மிதந்திடும் கப்பலை, பயங்கர பாலங்களை, அளந்தறிய முடியாத அணைக்கட்டுகளை ஆக்கித் தந்தவருக்குத் திறமையில்லையா? அப்படியே பார்த்தாலும் நம இனத்தினர் ஒவ்வொரு துறையிலும் வல்லவர்கள் உண்டு. வக்கீலுக்கு ஒரு எத்திராஜ், மருத்துவத்துக்கு ஒரு இலட்சுமணசாமி, பொருளியலுக்கு ஒரு சர். ஆர். கே, அகில உலக அனுபவத்திற்கு ஒரு சர். இராமசாமி, பாட்டுக்கு ஒரு பாகவதர், தேசிகர், நடிப்புக்கு இராமசாமி, நகைச்சுவைக்கு கிருஷ்ணன் என்று அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனாலும் எண்ணிக்கைக்கு ஏற்ற இடம் தருவதுதான் முறை—அறம்! அதுவும் ஏய்க்கப்பட்ட சமுகம் எழுந்து நடக்க உதவும் கோல்—அந்த வகையில் இடமொதுக்கும் பழக்கந்தான். அதனால் தான் வகுப்பு நீதி வேண்டும் என்கிறோம்.

சட்டத்தை ஏவிவிட்டார்கள், நம்மைக் கொட்டும்படி! கொட்டியும் விட்டது. ஆனால் அதனால் அடங்கிவிடப்போவதில்லை. போரிடப் போகிறோம் நிச்சயமாக!

[மக்கள் கையொலி எழுப்புகின்றனர்]

உங்கள் உரிமைப்போர் ஆரம்பமாகிறது. தயாராக இருங்கள்!

[கூட்டத்தைக் கவனித்த அவர்கள் மேலும் நடந்தனர்.]

நா:- திறமை, தகுதி இருக்கிறது ஆகவே சமூக நீதியை ஒழித்து தாங்களே ஏகபோக உரிமை கொண்டாடலாம் என்று எண்ணி இறுமாந்து கிடப்பவர்களின் திறமையும் தகுதியும் நமக்குத் தெரியும். படித்ததை வாந்தி எடுப்பதாலோ, அத்திம்பேர், அம்மாமி என்று கூறி அதிக மார்க்குகள் வாங்குவதாலோ, 'மோகனுஸ்திரம்' விட்டு முன்னணியில் நிற்பதாலோ நாம் ஏமாற வேண்டியதில்லை. தகுதி, திறமையை நிர்ணயிக்கும் கருவியும் முறையும் மாறிவிட்டால் இவர்களுக்கு ஆபத்து தான்—ஆசையிலே மண்தான்! ஆனாலும் எண்ணிக்கைக்கு ஏற்ற அளவு கேட்டால் என்ன செய்ய முடியும்? கூட்டத்தில் பேசிய போர் வீரனின் பேச்சைக் கேட்டீர்களா? நீங்களும் அவர்களுடன் ஒத்துழைத்தால் நீதி நிலைக்கும், நேர்மை சாகாவரம் பெறும்—என்ன சொல்கிறீர்கள்?

எல்லோரும்:- ஆகா, அப்படியே!

சி:- சிலைகள் பேசும்.

க:- கலைகள் கருத்துக்களை எழுப்பும்.

ஓ:- ஓவியங்கள் சாட்சி கூறும்.

பா:- பாடல்கள் நமக்காக பரிந்து வாதாடும்.

உ:- கோபுரங்கள், கோட்டைகள், கொத்தளங்கள், மாடமாளிகைகள், கூடகோபுரங்கள், வெட்டிய அகழ்கள், தோண்டிய சுரங்கள், வளமாக்கிய வயல்கள், வெட்டிய வாய்க்கால்கள், கட்டிய அணைக்கட்டுகள், நம் முன்னவர் மணி முடிகள், அரியாசனங்கள் எல்லாம் நம் வழக்கிலே வந்து கூறும்.

நா:- நம் தகுதிக்கும், திறமைக்கும் எடுத்துக்காட்டுகள் ஏராளம் உண்டு. வஞ்சகத்தால் இன்று தாழ்வுக் குழியில் கிடக்கிறோம். அதனின்று எழுந்து வர ஏற்பாடு செய்யப்பட்ட கருவியே வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை! கூடாது என்கிறார்கள் சுயநலமிகள் நாம் இனித் தூங்க முடியாது!

சி:- உரிமைப் போர்.

மற்றவர்:- தொடுப்போம்!

[சமூகதேவியை நாடிச் சென்றனர் எல்லோரும். வணங்கினர். அவள் எல்லோரையும் வரவேற்றாள்.]

நா:— தாயே, கட்டளைப்படி சென்றேன்—அனுபவம் கிடைத்தது.

ச:— தகுதி, திறமை, ஒவ்வொரு மனிதனின் இரத்தத்திலும் கலந்துள்ள தங்கத் துளிகள்—குறையும், நிறையும்மாறலாம். ஆனால்எவருக்கும் இல்லையென் சொல்லமுடியாது.

ச:- அறப்போர்

மற்றவர்:- தொடுப்போம்!

ச:- வெற்றிப் பாதையில்

மற்றவர்: — நடப்போம்!

[படுத்துக்கொண்டே நடப்பது எப்படி என்று கேலியோடு அவள் சிரித்தாள். அப்பொழுதுதான் கனவிலே உளறியிருக்கிறேன் என்று புரிந்துகொண்டேன்.]

# ‘புராதனப் பெருமை’ உயிர் பெற்ருல்!

சில மாதங்களுக்குமுன், இந்தியப் பார்லிமெண்டில் சில ‘வைதீகங்கள்’, இந்தியாவின் புராதனப் பெருமையைச் சீரழிக்கக் கூடாது என்றனர். அங்குதான் என்றல்ல, பல இடங்களிலும் பல ‘பழைமை விரும்பி’கள் இதுபோலவே பேசி வருகின்றனர். பழைமையையொதுக்குவதென்றால், பதைத்து, பண்டையப் பெருமைக்குள் மறைகிறார்கள்! புராதனப் பெருமை, உயிர்பெற்றால் எப்படியிருக்கும்? விளக்குவதே இச் சித்திரம்!

# புது ★ ★ ஏகாதிபத்தியம்!

வடநாட்டு ஏகாதிபத்தியம் வளர்ந்து வருகிறது—என்று நாம் கூறி வருகிறோம்.

"பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இங்கிருந்து ஒழிந்தது உண்மை. ஆனால், நாம் ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து விடுபட்டுவிடவில்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் இடத்தில் இப்போது வடநாட்டு ஏகாதிபத்தியம் அமர்ந்துகொண்டுவிட்டது. டில்லி ஏகாதிபத்தியம் நம்மை அடிமைப்படுத்தி வருகிறது" என்பதாக நமது பிரச்சார வீரர்களும் விளக்கி வருகிறார்கள்.

ஏகாதிபத்தியம்—என்ற சொல், இந்திய விடுதலை விரும்பிகளால், வெள்ளை ஆட்சியை நோக்கி, அன்று வீசப்பட்டதாகும்.

இன்று, அதே சொல்லை, நாம் எடுத்துக் காட்டுகிறோம்—வார்த்தைப் பஞ்சத்தால் அல்ல; நம்மைவிட்டு இன்னும் ஏகாதிபத்தியத் தளை அறுபடவில்லை என்பதால்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்திய உபகண்டத்தை விட்டு நீங்கிவிட்டது. ஆனால், நம்மீது புது ஏகாதிபத்தியம் ஏறி அமர்ந்துவிட்டது.

முன்பு பிரிட்டிஷ் ஆதிபத்தியம்!

இப்போது டில்லி ஆதிபத்தியம்!!

* * *

"எல்லாவற்றையும் சுரண்டிச் செல்கிறான்' நம்மை ஓட்டாண்டியாக்கி விட்டான்! ஆறாயிரம் மைல்களுக் கப்பாலிருந்த ஆங்கிலேயன் தனது ஆதிக்கத் தர்பாரை நடத்துகிறான்—எதிர்த்துக் கேட்டால் ஏகாதிபத்தியம் சாயாமலிருக்கச் செய்வதற்காக நம்மீது அடக்குமுறைகளை வீசுகிறான்"—இதுபோல, அன்று விடுதலை விரும்பிகள் முழக்கமிட்டனர்.

"நமது நாட்டைச் சுரண்டிச் செல்ல டில்லி ஆதிபத்தியம் திட்டமிட்டுவிட்டது. நமது வருமானத்தைச் சுரண்டிச் சென்று, நமது வயிற்றிலடிக்கிறது. 'இது நியாயமா?' என்று கேட்டால் நீட்டுகிறது துப்பாக்கியை"—இன்று, நாம், இதுபோலக் கூறுகிறோம்.

* * *

எல்லாம் தனக்காகவே இருக்கிறது. எல்லோரும் தன்னிஷ்டப்படியே நடக்கவேண்டும்—அங்கு கிடைக்கும் பொருள்கள், இருக்கும் மக்கள், எல்லாம் தனக்குக் கட்டுப் பட்டவர்கள் — என்ற நிலை இருப்பதுதான், ஏகாதிபத்தியம் என்பதற்குப் பொருள்.

ஒரு பிரதேசத்தை, இன்னொரு பிரதேசத்தார் ஆக்கிரமித்துக்கொண்டு, அந்தப் பிரதேசத்து மக்களைக் கொண்டு தனக்கான நல்வாழ்வை அமைக்கும் சுயநலக் கும்பலின் சுரண்டலைக் குறிக்கும் சொல்தான் ஏகாதிபத்தியம்;

* * *

தன், ஆதிக்கம் நீடிக்க வேண்டுவதற்காகச் சட்டங்களைத் தயாரித்துக்கொண்டு, தனது இலாபச்சுரண்டலை நடத்தும் திட்டத்தோடு வடநாடு, இருக்கிறது. டில்லி சர்க்கார் நடந்துகொள்கிறது.

ஆகவே, டில்லி ஏகாதிபத்தியம் என்று நாம்சொல்கிறோம். தான்வாழ, நம்மைச் சுரண்டுகிறது என்று குற்றஞ்சாட்டுகிறோம். நமது உழைப்புதந்த செல்வத்தைக் கொட்டிச்செல்கிறது என்று குமுறுகிறோம்.

* * *

இதைக்கேட்டும் தேசிய நண்பர்கள்—தக்க பதில் தராவிட்டாலும் கெக்கலிக்கிறார்கள்!

சோஷியலிஸ்டுகள் "சொத்தைப்பேச்சு" என்று — மறுக்கமுடியாவிட்டாலும் - மார்தட்டுகிறார்கள்!

கம்யூனிஸ்டுகள்—காணமுடியாத கனவு—என்று கதைக்கிறார்கள்!

## 2

பொருளாதாரச் சுரண்டல் அதிகமாகி உச்ச நிலையை அடைவதுதான் ஏகாதிபத்தியம்.

முதலாளித்துவத்தின் கடைசி உச்சக் கட்டம் தான் ஏகாதிபத்தியம்.

இது சமதர்மச் சிற்பியான லெனின், ஏகாதிபத்தியம் என்பதுபற்றி கூறுவதாகும். "Imperialism is the highest stage of capitalism" என்று அவர் தெளிவாக, விரிவாக விளக்கியுள்ளார்.

(அடுத்த பக்கத்தில் பார்க்க)

# நிலைத்த பெருமை

அறிஞர் எம் என். ராய்

அரசியல், மனிதர் நடவடிக்கைகளில் ஒரு பகுதி. மனித சமுதாயம் ஏதாவதொரு தத்துவத்தின் மீதே, நடத்திச் செல்லப்படவேண்டும். அந்தத் தத்துவம் காலத்துக்கேற்றவாறு மாறலாம். ஆனால் காலத்தையும் வேளையையும் கடந்து—சில கொள்கைகள், சில உண்மைகள் எப்போதும் நீடிக்கும். இல்லையென்றால் மனித முன்னேற்றத்தில், நமக்குள்ள நம்பிக்கையை நாம் இழந்துவிடுவோம். காட்டுமிராண்டிக் காலத்திலிருந்து அடைந்த முன்னேற்றமே, நாகரீகம் என்பதை, எப்படி, நாம் நிர்ணயிக்க முடியும்? காட்டுமிராண்டித்தனம்—நாகரீகம், என்ற இரண்டுக்கும் இடையில், பொதுவாக, ஏதாவது இருக்கத்தான் வேண்டும் அப்படி அறுதியிட்டுக் கூறுவதற்கு. நாகரீக முன்னேற்றத்துக்குக் காரணமாயிருப்பது மனித சமுதாயத்தின் பெரு முயற்சியை எடுத்துக் காட்டுவது எதுவோ, அதுதான், காட்டுமிராண்டித்தனம் — நாகரீகம் ஆகியவைகளுக்கிடையே இருக்கும் பொதுவானதாகும்.

இதற்குத்தான், தத்துவம், விதிமுறை என்று பெயர்.

தத்துவம் என்பது — மனித நடவடிக்கைகளுக்கான ஒரு வழிகாட்டியாகும். இந்த வழிகாட்டிக்கென சில வரையறைகளும், மனித சமுதாயத்துக்குக் கட்டுப்பட்ட நிரந்தர கோட்பாடுகளும் இருக்கவேண்டும். மனித வர்க்கத்தின் ஒரு கூட்டம்—அரசியல் இயக்கம் என்று கூறினாலுஞ் சரி, வேறு ஏதாயினுஞ் சரி—மேற்படி கோட்பாடுகளை மதித்து, அவைகளின் பாதையில் நடக்க ஆசைப்படும். அதே வழிகளில் எதிர்காலத்தைச் சமைக்க முயற்சிக்கும்.

ஒரு புது உலகைச் சிருஷ்டிப்பது மட்டுமல்ல நமது நோக்கம்; எத்தகைய புது உலகம் நிர்மாணிக்கப் படவேண்டும் என்பதையும் சிந்தித்து உருவாக்க வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். ஆகவே, நமக்கு இருக்கும் பொறுப்பு, மகத்தானது. புது உலகம்—காண்பது இலேசான காரியமல்ல! ஆதலால் 'சுதந்திரம்' என்றால் என்ன, என்பது குறித்து தெளிவாக நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

சுதந்திரம் என்ற சொல் புரியாததல்ல—பரவாததல்ல. ஆனால் அதன் முழுப் பொருளும் பலருக்குத் தெரியவில்லை—அதனால் விளையும் பயன், அறிவிக்கப் படவில்லை. ஆகவே, இன்று உலகுக்கு சுதந்திரம் பற்றிய தத்துவம் உணர்த்தப்பட வேண்டும். அதன் அருமை பெருமைகள், அறிவிக்கப்பட்டால்தான், தாழ்ந்தோர் உயர முடியும்—அடிமை விலங்கை ஒடிக்க இயலும். இத்தகைய மன எழுச்சி இல்லையென்றால், நாகரீக வளர்ச்சி யேற்பட முடியாது. இது, மறக்க முடியாத மாணிக்க மொழியாகும்.

உரிமை வாழ்வு, மக்களுக்குக் கிடைக்காத வரையில், உலக முன்னேற்றம், நாகரீக முதிர்ச்சி யென்பவையெல்லாம் வெறும் கேலிக்கூத்துத்தான். இந்த உரிமை வாழ்வு, மனித சமுதாயத்தின் ஒரு பகுதியினர்க்கு மறுக்கப்பட்டால் — அதற்காகப் போராடுவது மகத்தான காரியமாகும். மனிதர்கள் யாவரும் வாழப் பிறந்தார்கள்—என்பதுதான், இயற்கையின் தத்துவம். இந்த ஒழுங்கை உலகில் நிலைநாட்டும் ஒரு நடவடிக்கைதான்—அரசியல் வாழ்வு.

பொது வாழ்வு—புயல்கள் வீசும் கடல். எனினும், அதைக் கடந்து குறிப்பிட்ட இடத்தைச் சேர்வதில்தான் இன்பம் இருக்கிறது. அந்த இன்பத்தைப் பெற—யாவருக்கும் தர—பணி புரிவதுதான் நிலைத்த பெருமை!

(முன்பக்கத் தொடர்ச்சி)

அந்த விளக்கத்தில் 'ஏகாதிபத்தியம்' என்றால் எது என்பதையும் படம் பிடித்துத் தருகிறார்.

★ ஆலைகள் அதிகமாகப் பெருகிக் கிடத்தல்

★ அபரிமிதமான செல்வாக்கு பெற்ற பாங்கிகள் இருத்தல்

★ பணச் செலாவணியும், நிதிக்குவியலும் நிறைந்து

★ லேவாதேவித்துறையில் பெரிதும் ஈடுபட்டு இருத்தல்

★ வெளிநாடுகளில் போய் மூலதனம் போட்டு, வியாபாரம் பெருக்கும், வசதி பெற்றிருத்தல்.

முதலியவைகளைக் கொண்டுள்ள நாடே, இன்னொரு நாட்டை அடிமைப்படுத்திய ஏகாதிபத்திய நாடு என்று நன்றாக விளக்கியுள்ளார்.

**3**

தென்னாட்டைவிட ஆலைகள் அதிகம் நிரம்பியது,
ஏராளமான பெருத்த பாங்கிகளைக்கொண்டது,
பிர்லாக்களும் டாடாக்களும் பணமாளிகைக்கட்டி வாழ்வது,
வெளிநாடுகளில் சென்று மூலதனம்போடும் அளவில் வசதிபடைத்தோரைக் கொண்டிருப்பது,
வடநாடேயாகும்!

ஆகவேதான், நாம், வடநாட்டு 'ஏகாதிபத்தியம்' என்று அழைக்கிறோம்.

வடநாடு, மேற்குறிப்பிட்ட வழிவகைகள்மூலம் தென்னாட்டைச் சுரண்டுகிறது. அதற்கானத் திட்டங்களைத் தந்திரமாகத் தீட்டி, அவைகளைச் சாதித்து வருகிறது,

இந்த நிலை வளர்வதைக்காட்டியே, நாம் எச்சரிக்கிறோம்—ஏகாதிபத்தியம் நம்மைவிட்டுவிடவில்லை; முன்பைவிட அதிகமாகி வருகிறது, என்று.

வடநாட்டு ஏகாதிபத்தியம் கோரஉருவில் எழும்பிக்கொண்டிருக்கிறது — காங்கிரஸ், தேசியம் என்ற போர்வையில்.

இந்தநிலை ஆபத்தல்லவா? — பிரிவினை பற்றினால் "பேசாதே!" என்போரைக் கேட்கிறோம், சிந்தியுங்கள், பொருளாதாரத்துறையில் வளரவழியிருக்கிறதா நம்மை நாம் காத்துக்கொள்ளாவிட்டால்? அன்போடு, இதை, அவர்களின் ஆராய்ச்சிக்கு அர்ப்பணிக்கிறோம் — நாடு நமது! நாளை வாழவேண்டியவரும் நாம்!! என்பதால்.

# ஆள்வோர்க்கு............!

ஈன்றெடுத்த உன் அன்னை தாசியென்னும்
இழிநிலையை வீழ்த்துதற்குப் பாடுபட்டார்
கீழ்ச்சாதி கடைச்சாதி என்போர் நாவை
கிழித்தெறிய வாள்கொண்டு முழக்கமிட்டார்
ஆன்றபுகழ் திராவிடத்தின் பழஞ்சிறப்பை
அழிப்பாருக் கறிவூட்டத் திட்டமிட்டார்
உன்தம்பி; உன்தோழர்; உன்இனத்தார்!
ஒழி அவரை! மொட்டையடி! சிறையில் தள்ளு!

புல்லாகப் புழுவாகப் பூச்சியாகப்
புரிநூலார், வடநாட்டார் உனைமதிக்க
செல்லாத காசாகத் திறமையற்று
சீர்கெட்டு நிற்கின்றாய்! அதனை மாற்றி
"நில்லப்பா! வீழாதே! நீட்டு வாளை!
நீ, ஆண்ட இனத்தோன்றல்! மதிகொள்" என்றார்
உன் தம்பி; உன் தோழர்; உன் இனத்தார்!
ஒழி அவரை! மொட்டையடி! சிறையில் தள்ளு!

வீழ்த்தவரை! வெறிகொண்டு வீழ்த்து வீழ்த்து!
வெற்றிமத யானைகளை வீழ்த்து வீழ்த்து!
தடியடியால் புகைவீச்சால் தளர்வை யூட்டு!
தாலிகளை மனையறுக்கக் கொன்று தள்ளு!
தலைமயிரைச் சிரைத் துடையில் 'நம்பர்' போடு!
சதிசெய்தார் எனக் கூறித் தலையை வெட்டு!
எதுபோகும்? சிறையில்நீ சிரைத்துப் போட்ட
'அது' போகும்! அதோடுன்றன் மானம் போகும்!

இறப்பார்கள்! அவர் கொள்கை இறவாதப்பா!
எழுவார்கள் பலபேர்கள்! நிற்காதப்பா!
அறப்போரின் முடிவையவர் அறிவாரப்பா!
ஆதாரம் பழஞ்சரிதை! காண்பாயப்பா!
பலப் போரில் திறங்காட்டி வெற்றிகொண்ட
பாண்டியரின் பரம்பரையில் வந்தாரப்பா!
உன்தம்பி; உன்தோழர்; உணர்வாயப்பா!
உணராயேல் காலமதை உணர்த்துமப்பா!

—கண்ணதாசன்

# ★ அமைதிபுரி பயணம் ★

[ வாணன் ]

“மூன்றாவது உலகப் போரை தவிர்க்க முடியாது, என்று நாங்கள் நம்பிக்கையிழந்து விடவில்லை. ஆனால் அப்படி போர் ஏற்படாதவாறு தற்காப்பு செய்து கொள்ளவேண்டியது மிக அவசியமானது. வருங்காலத்தில் போர் ஏற்பட்டால் நாம் செய்யவேண்டிய தியாகத்தைவிட குறைந்த அளவு தியாகத்தையாவது தற்போது செய்தால்தான் உலகம் அமைதிபுரியாக இருக்கமுடியும். ஆனால் தியாகமே செய்யாமல் இனி உலகம் சமாதானமாக வாழமுடியாத நிலை ஏற்பட்டு விட்டது. ஆகவேதான் மூன்றாவது உலகப் போரை ஆரம்பத்திலேயே நிறுத்தவும், ஆக்ரமிப்பாளர்களை தடைப்படுத்தவும் இந்த தற்காப்பு திட்டத்தை ஆதரிக்க கோருகிறேன்!”

இவ்விதமாக ‘தற்காப்பு ஏற்பாடுகள்’ என்று கூறிக்கொண்டு 3,400 மில்லியன் பவுன் திட்டமொன்றை பார்லிமெண்டின் முன்னிலையில் வைத்தார் பிரிட்டிஷ் பிரதமர் அட்லி.

“இது மாத்திரம் போதாது. ரஷ்யாவிற்கு சாதாரண சாமான்கள் கூட அனுப்பக் கூடாது. மேற்கு ஐரோப்பா பூராவும் சேர்த்து இன்னும் பல்லாயிரக் கணக்காக போர் வீரர்களை சேர்த்து எழுபது அல்லது எண்பது டிவிஷன்கள் கொண்ட ஐரோப்பிய சேனை வேண்டும்” என்று சர்ச்சிலின் ஆவேசப் பேச்சுடன் போர் மசோதா பிரிட்டிஷ் பார்லிமெண்டில் நிறைவேறியது.

இந்த மூன்றாண்டு திட்டப்படி பிரிட்டனின் போரணி இன்னும் இரண்டு வருடங்களுக்கும் 77,000 வீரர்கள் புதிதாக சேர்த்துக்கொள்ளும். ஜெர்மனியிலும், மத்தியதரைக் கடலிலும், ஆசிய நாடுகளிலுமுள்ள பிரிட்டிஷ் சைன்யங்கள் இன்னும் மூன்றாண்டுக்குள் பிரமாண்டமாக வளரும். ஆனால் இந்த “சைன்ய விஸ்தரிப்பு” போர் வராமல் தடுப்பதற்காகத்தான்!

இதே மாதிரி அமைதியைக் காப்பதற்காக ஐரோப்பிய பார்லிமெண்ட் மேற்கு ஐரோப்பிய சேனையை விஸ்தரிக்க ஆரம்பித்துள்ளது.

“எதிரியுடன் சமாதானம் பேசுவதற்கு, எதிரியளவு நாமும் பலம் வாய்ந்தவர்களாகவேண்டும்” என்று தத்துவம் பேசிக்கொண்டு ட்ரூமன் அமெரிக்க படையை விஸ்தரிக்கும்படி உத்திரவிட்டிருக்கிறார்.

X X X

உலக சமாதானத்தை நிலை நிறுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய நாட்டுச் சபையின் ஆறாவது ஆண்டு விழாவின் ஆரம்ப நேரத்தில் உலகத்தின் நிலை தான் நாம் மேலே விவரித்திருப்பது. கையில் ஏறிய ரத்தக் கறையுடன் துடிக்கும் இதயமும் வஞ்சக உள்ளமும் போராடும் நிலையில் ஆத்திரத்தோடு ஐக்ய நாட்டு சபையின் பிரதிநிதிகள் நியூயார்க் போய்ச் சேர்ந்துள்ளனர். இந்தப் பொதுக் கவுன்சிலின் கூட்டம் மனிதக் கூட்டத்தை சமாதானபுரி பக்கமாவது அழைத்துச் செல்லுமா என்பது கனவில்கூட நடக்க முடியாத சம்பவமாகத்தான் தெரிகிறது.

உலக அமைதிக்காக ஆரம்பிக்கப்பட்ட இரண்டு முயற்சிகளும் பெரும் தோல்வியுடனேயே முடிந்து விட்டது, மனிதவர்க்கத்தின் துரதிர்ஷ்டம்தான். முதல் உலகப் போருக்கு பிறகு ஆரம்பிக்கப்பட்ட ‘சர்வதேசியச் சங்கம்’ ஹிட்லரால் “பேடிகளின் சங்கம்” என்று கூற வேண்டியளவுக்கு மோசமான நிலைக்கு வந்தது. அமெரிக்கத் தலைவன் உட்ரோ வில்சனால் ஆரம்பிக்கப்பட்ட அந்த மகத்தான சங்கம் இரண்டாவது உலகப் போரை தடுக்கமுடியாமல் ஆரம்பித்தவர்களாலேயே அழிக்கப்பட வேண்டியதாயிற்று.

பின்னால் சர்வ தேசியச் சங்கம் இருந்த இடத்திற்கு ஐக்ய நாடுகளின் சபை கொண்டு வரப்பட்டது. முன்னையதின் அனுபவத்திலிருந்தாவது பிந்தியது ஒழுங்காக நடத்தப்பட்டு உலகத்திற்கு அமைதியை தேடித்தரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. உட்ரோ வில்ஸன் எடுத்துக்கொண்ட சிரமத்தைவிட அதிகமான சிரமத்தை ரூஸ்வெல்ட் ஐக்ய நாட்டு சபைக்காக எடுத்துக்கொண்டார். நல்ல வேளை! இந்த பிரமாண்டமான மனக்கோட்டை இன்று அழிந்து தூளாவதை காண வேண்டிய நிலையிலிருந்து அவர் தப்பித்துக்கொண்டார், இறந்துவிட்ட காரணத்தினால்!

போரரக்கனின் கொடுமைக்கு ஆழ்த்தப்பட்ட மக்கள் சமாதான தேவதையை இனி சாஸ்வதமாக உலகத்திலேயே இருத்திவைக்க ஆசைப்பட்டனர். கஷ்டப்பட்ட மக்களின் மனதில் இந்த எண்ணம் தோன்றுவது இயற்கைதான். தங்களுக்குள் ஏற்படும் வேறுபாடுகளை தீர்த்துக்கொள்ளவும் ஒற்றுமையை வளர்க்கவும் ஐ. நா. சபை அவசியம் என்று கூறி ஆரம்பிக்கப்பட்டது. தாங்கள் ஒரு அகில உலக ஸ்தாபனத்திற்கு கட்டுப்பட்டு நடக்க ஒத்துக்கொண்டால் தங்களுடைய தேசீய, நாட்டுணர்ச்சியை ஓரளவுக்கு கட்டுப்படுத்த வேண்டிவரும் என்பதை அவர்கள் உணரவில்லை. உணர்ந்தார்களோ இல்லையோ அவரவர்களுடைய தாய் நாட்டுணர்ச்சி வெறியாகவே யிருந்தது. அதோடு மாத்திரமில்லை. உலக வல்லரசுகள் ஹிட்லரை தோற்கடிப்பதில்தான் ஒற்றுமையை காண்பித்ததே தவிர வேறெந்த காரியத்திலும் ஒற்றுமையுடனிருக்க தயாராக இல்லை.

பிரிட்டிஷ், அமெரிக்க வல்லரசுகள் தங்கள் வியாபாரத்தை நடத்துவதில் எந்தத் த்டையும் ஏற்படுவதை விரும்பவில்லை

பிரான்ஸ், ஹாலந்து பெல்ஜியம் போர்ச்சுகல் முதலிய நாடுகள் தங்கள் காலனி நாடுகளை விட்டுக் கொடுக்கும் எண்ணத்திற்கு வர தயாராகவில்லை.

போருக்குப் பிறகு ஏற்படும் வறுமை காரணமாக உண்டாகும் மக்கள் எழுச்சியை கம்யூனிசம் பக்கம்

திருப்ப தன்னாலான உதவியை ரஷ்யா செய்யத் தயாராகி விட்டது. உலகத் தொழிலாளர்களை ஒன்று சேர்ப்பதை தன் தலைக்கொள்கையாகக்கொண்ட நாடாயிற்றே அது.

ஆகவே, ஐக்ய நாட்டு சபை ஆரம்பிக்கும்போதே வல்லரசுகள் தங்கள் சுதந்திரங்கள், கொள்கைகள் எதையும் விட்டுக் கொடுக்க தயாராயில்லை. அதுமாத்திரமில்லை. தங்கள் தங்கள் கொள்கைக்காக போராட தயாராகிவிட்டனர். ஆரம்பிக்கப்பட்ட இரண்டாண்டுக்குள்ளாகவே ஐக்யநாட்டு சபைக்கு "மாறுபட்ட நாடுகளின் சபை" என்று பெயர் கொடுக்கவேண்டிய அளவுக்கு நிலைமை விபரீதமாகிவிட்டது. ஐக்யநாட்டு சபையில தங்கள் பிரச்சினைகளை தீர்க்யாரும் முற்படவில்லை. அந்தந்த நாடுகளும் அதனதன் வசதிக்கேற்றபடி ஒன்று சேர ஆரம்பித்தன. உலக சங்கம் ஒன்று இருக்கும பொழுது தனிப்பட்ட சில நாடுகளின் சங்கம் ஆரம்பித்தால் அதற்கு 'அறிவிக்கப்படாத யுத்தம்' ஆரம்பிக்கப் பட்டுவிட்டது என்றுதானே பொருள். அட்லாண்டிக் ஒப்பந்தம் கையெழுத்திடப் பெற்றது. ஐரோப்பிய அசெம்பளி கூட்டப்பட்டு ஐரோப்பிய சேனை நிறுவப் பெற்றது.

மற்றொரு பக்கத்திலே கம்யூனிஸ்டு நாடுகள் ஒன்று சேர்ந்துவிட்டன. அவர்கள் சேருவதைத்தவிர வேறு வழியுமிருப்பதாக தெரியவில்லை.

ரஷ்யா வளர வளர, பண பலம் படைத்த அமெரிக்கா எதிர்ப்புச் சக்திகளை ஒன்று திரட்டத் தொடங்கி விட்டது, பிரிட்டன் மற்றும் பல மேற்கு ஐரோப்பிய நாடுகளின் உதவியுடன்.

இந்த நிலையில் ஐ. நா. சபையில் யாருக்கு என்ன வேலை இருக்கமுடியும்? சென்ற ஆண்டு பாரிசில் ஐ. நா. சபை கூட்டம் நடந்தபோது பெவின் மறைமுகமாக இதையேதான் கூறினர்.

"நாம் ஆரம்பத்தில் எண்ணியபடி உலக ரீதியில் ஒத்துப்போக முடியாவிட்டால், அதற்காக நேரம் போக்குவதில் பயனில்லை. இனிமேல் அந்தந்த வட்டாரங்களாகவாவது முன்னேறுவோம்" இதைப் பேசிய பெவின் ஐ. நா, சபையை கலைத்துவிடுவதற்குவேண்டியதைச் செய்திருக்கலாம். ஆனால், ஐ. நா. சபையையே தங்கள் போருக்கு ஒரு ஆயுதமாக பயன்படுத்த ஆரம்பித்துவிட்டார். அமெரிக்க பிரிட்டிஷ் நாடுகளுக்கு ஐ. நா. சபையில் பெரும்பான்மை ஓட்டுக்கள் உண்டு. ஓட்டுக்களின் எண்ணிக்கையை காண்பித்து இந்த அமெரிக்க பிரிட்டிஷ் நாடுகள் ரஷ்யாவுக்கெதிராகச் செய்யும் சதிச் செயல்களுக்கு நியாயம் காண்பிக்கின்றன. ஓட்டுக்களை அதிகம் காண்பிக்க முடியாவிட்டாலும், ரஷ்யா அவ்வப்போது காரசாரமான பேச்சுக்களால் தன் நிலைமையை விளக்கிவந்தது. கடைசியில் நிலைமை பேச்சளவோடு நிற்கவில்லை. அமைதியைத் தேடித் தருவதற்காக ஆரம்பிக்கப்பட்ட அதே ஐ நா. சபையின் சார்பாக கொரியாவில் அமைதி கலைக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான கொரியர்கள் இன்று உயிரிழக்கின்றனர். கொரியாவின் உள்நாட்டு யுத்தத்தில் தலையிட்டதின் காரணமாக ஐ. நா. சபை தற்கொலை புரிந்துகொண்டது என்று கூறினல் அது தவறாகாது. ஐ நா. சபை, ஒரு துக்க சாகரத்துடன் முடிவுபெறுகிறது. இது நாம் விரும்புவதல்ல. இப்பொழுதிருக்கும் நிலைமையில் இப்படி கூறுவதுதான் சரியானது.

ஐ. நா. சபையின் தோல்விக்குப் பிறகு உலகநிலை என்ன?

சமாதானத்தை நிலை நிறுத்துவதற்காகவாவது ரஷ்யாவுடன் சண்டைபோட்டு தோற்கடிக்க வேண்டுமென்று அமெரிக்கா விரும்புகிறது. இந்த கருத்துடன் அமெரிக்கப் போர்த் தளபதி ஒருவர் விட்ட அறிக்கை பின்னல் வாபஸ் வாங்கப்பட்ட போதிலும், இந்த எண்ணத்திலிருந்து வேறாக நடக்க அமெரிக்காவிரும்புகிறது என்பதற்கு அறிகுறி எதையும் காணமுடியவில்லை. எப்படியாவது ரஷ்யாவின் ஆதிபத்தியத்தை ஒழித்துக் கட்டவேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டது அமெரிக்கா.

இன்னொரு பக்கத்தில் ரஷ்யா மௌனமாக திரை மறைவில் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது. அதற்கேற்பட்ட சௌகர்யமான சந்தர்ப்பம் இன்று ஆசியா முழுவதும் தானகவே சிவப்பாக மாறிக்கொண்டிருக்கிறது.

ரஷ்யக் கம்யூனிசம் எவ்வளவோ விதத்தில் கெடுதல்என்று அமெரிக்கர்களும்,பிரிட்டிஷ்காரர்களும்ஆசிய மக்களுக்கு எடுத்துரைக்கலாம். ஆனல் வெறும் வார்த்தைகளும், கொள்கைகளும் அவர்களுக்கு தற்சமயம் தேவையில்லை. அவர்களுக்கு தேவையானது பசித்த வயிற்றுக்கு சோறு. உடுக்க உடை, தங்கஇடம். வாழ்க்கை வசதிகள். இவைகளை எந்த அளவுக்கு வெள்ளை ஏகாதிபத்தியங்கள் அவர்களுக்கு கொடுத்தது என்பதை அவர்கள் இன்னும் மறந்திருக்கமாட்டார்கள். சைனவின் சமவெளிகளில் அமெரிக்கர்களின் துப்பாக்கிகள் சுட்டதையும், கொரியமக்களின் உயிர்கள் இன்று அமெரிக்க குண்டுகளுக்கு இரையாவதையும், மலாய் மக்களுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் கொடுக்கும் குண்டுப் பரிசுகளையும், இந்தோனேஷியாவில் டச்சுக்காரர் நடத்திய "போலீஸ்" வெறியாட்டத்தையும் எந்த ஆசியாக்காரனும் மறக்கமுடியுமா? முந்நூறு ஆண்டுகள் ஆட்சி நடத்திய பிறகு ஆசிய காலனி நாடுகளுக்காக ஐரோப்பிய வல்லரசுகள் விட்டுப்போன சொத்து அறியாமையும், வறுமையும்தானே! இந்த வஞ்சகச் செயல்கள் புரிந்த வல்லரசுகளுக்கு ஆசிய மக்கள் உதவி புரியவேண்டிய அவசியம் என்ன? இன்றுமாத்திரம் வல்லரசுகள் ஆசிய நாடுகளுக்கு கொடுக்க முன்வரும் பொருள்தான் என்ன? பழையபடி உற்பத்தி செய்யப் பட்ட சாமான்கள் — அதாவது மார்க்கெட்டாக்கும் முயற்சி, இந்த சூழ்நிலையில் ரஷ்யா ஆசிய மக்களுக்கு கொடுக்கும் பொருள் என்ன?

"கம்யூனிசம்—தேவையான அளவு உணவு. சக்திக்கேற்ற உழைப்பு. தங்க இடம். உடுக்க உடை" இவைகள் உண்மையில் கம்யூனிஸ்டு நாடாகிவிட்டால் கொடுக்க முடியுமா முடியாதா என்பதை ஒருபக்கம் வைத்துவிட்டுப் பார்த்தால் ஆசியமக்களுக்கு இதைவிட நல்ல உதவி வேறெந்த நாட்டால் செய்ய முடியும்—முடிந்தது. வார்த்தை அளவிலாவது ரஷ்யா நிச்சயம் செய்கிறது. ஆனல் ஐரோப்பிய வல்லரசுகளைப் பற்றி ஆசியா நன்ருகத் தெரிந்துகொண்டிருக்கிறது. ஆகவேதான் ஆசியா சிவப்பாகிறது. தங்களுடைய வறுமையையும் அறியாமையையும் போக்கிக் கொள்ளத் துடிக்கும் ஆசிரியர்களுக்கு கம்யூனிசம் ஒரு கலங்கரை விளக்கம். ஆனல் இந்த நேர்மையான எண்ணம் அமெரிக்கர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் பிடிக்கவில்லை

வறுமையை ஒழிக்க எந்தத் திட்டமும் தராவிட்டாலும் ஆசிய மக்கள் தாங்களாகவே செய்யும் கம்யூனிச முயற்சியையும் அவர்கள் தடை செய்கின்றனர். மீறி செய்தவர்கள், தண்டிக்கப்படுகிறார்கள்!

“கொரிய மக்கள், “சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி” :என்றனர். அதற்காக அவர்கள் பெற்ற தண்டனை அமெரிக்க குண்டு வீச்சு. இம்மாதிரியே ஆசியாவின் ஒவ்வொரிடத்திலும் நடைபெற்று வருகிறது. நடைபெறும்.

இந்த மாதிரி, உலக யுத்தம் ஏற்படுவதற்கான ரணங்கள் அதிகமாகிக்கொண்டே செல்கின்றன. இப்படியேபோனால்விரைவில் உலகமுழுவதும் கொரியா நிலைமை ஏற்படும். இத்தோடு அமெரிக்கர்களின் கீழிருக்கும் காரணத்தினால் ஆத்திரப்பட்டுக்கொண்டிருக்கும் ஜப்பானும் போரிலிறங்கும். ஆக ஒரு நேரத்தில் ஆசியாபூராவும் இரத்தமயமாகும். பிற்போக்குவாதிகளை அரசாங்கத்தில் கொண்டுள்ள இந்திய உபகண்டமும் இந்த இரத்தக்களரியில் மாட்டித்தான் தீரும். ஐரோப்பிய வல்லரசுகள் தங்கள் பலத்தை சோதனை செய்ய ஆசியாவை ஒரு ஆய்வுச்சாலையாக பயன்படுத்திக் கொள்ளும்.

நிலைமை முற்றிப் போவதற்குள் அறிவாளிகள் தங்கள் திறமையைக் காட்டியாகவேண்டும். ஆசியா சீர்திருத்தப்படவேண்டும். அறியாமை, வறுமையைப் போக்க எந்த வல்லரசுகளுடனும் சேர்ந்துதானாகவேண்டுமென்ற அவசியமில்லை. மனித தர்மம் தேவைக்கேற்ற உணவையும் சக்திக்கேற்ற உழைப்பையும் தரச்சொல்கிறது. உலகத்திலே எந்த அறிவுள்ள மனிதனும் சண்டையை விரும்பமாட்டான். இரு சண்டைகளில் அடிபட்டு ஐரோப்பா கண்டம் ‘யுத்தம்’ என்ற பெயரை கேட்டாலே பயப்படுகிறது.

உலகமெங்கும் சமாதான பிரியர்களிருக்கிறார்கள் அவரவர்கள் அவரவர்களால் முடிந்தளவு மனிதாபிமானத்தை வளர்க்கவேண்டும். அமைதி புரி பயணம் மிக கடினமானது. கொள்கை வெறியர்களும் சுரண்டல் வீரர்களும் அதில் நம்மை கொள்ளையடிக்க வருவார்கள். ஆனால் அவர்களை மீறி நாம் செல்ல வேண்டும்.

மனித வாழ்க்கை இன்பமுற அமைதி இன்றியமையாதது. அதை அடைய வேலை செய்யவேண்டியது ஒவ்வொரு மனிதனின் கடமை. ஐ. நா. சபை நம்மை அழைத்துச் செல்லாமல் பாதியிலேயே உயிர் விட்டு விட்டாலும் நம்முடைய உழைப்பில் அதை உயிர்ப்பிக்கலாம்.

—✲—

நாம் புகழுக்காகப் போர் புரியவில்லை;
பொருளுக்காகப் போர் புரியவில்லை;
கௌரவத்துக்காகப் போர் புரியவில்லை;
விடுதலைக்காகப் போர் புரிகிறோம்.

முழந்தாளிட்டுக் கொண்டு உயிரோடிருப்பதைக் காட்டிலும்; நின்றுகொண்டே இறப்பது மேல்.

மாஜினி.

## பேச்சு ராஜ்யம்!

எதற்கெடுத்தாலும் பிரசங்கங்கள் கிடைக்கிறதே தவிர—நாட்டின் நலிவு தீர்க்கும் உருப்படியான திட்டங்கள் எதுவும் போடப்படவில்லை, நேரு சர்க்காரில்! பேசுகிறார்கள்—பத்திரிகைகள் பிரமாதமாகப் போட்டுவிடுகின்றன. மக்களை தங்கள்பேச்சுக்கள்மூலம் மயக்கி,ஆள்வதே இந்த மகானுபாவர்களின் எண்ணமாயிருக்கிறது!!

# ★ ஓராண்டுப் பாதை ★

கொள்கைகளோ காற்றில் பறக்கவிடப்பட்டன; தொண்டர்களோ துரோகமிழைக்கப்பட்டார்கள்; உழைப்பாளிகளோ உதாசீனம் செய்யப்பட்டார்கள்! உண்மை உறுப்பினர்களோ அவநம்பிக்கைக்குள்ளாக்கப் பட்டனர்; பதேச்சாதிகார பாசிஸ வெறி மனப்பான்மையோ தலைமைபீடத்தில் தாண்டவம் ஆடிற்று; இயக்கமோ சதிக்குள்ளாக்கப்பட்டுக் கிடந்தது!

இப்படிப்பட்ட கொடுமையான நெருக்கடி நிலைமை, சென்ற ஓராண்டு காலத்திற்கு முன்பு நாம் வாழ்ந்த இயக்கத்திலே ஏற்பட்டது! அந்த நிலைமையை நினைக்க, இப்பொழுதுகூட நெஞ்சு வேகிறது!

எதிர்க்கட்சியினர் எக்காளி கொட்டி நகைத்தனர்; கேலி பேசினர்; கிண்டல் செய்தனர்!

தூய்மை உள்ளம் படைத்தோராகிய நாம், இயக்கத்தைச் சீர்கேடுகள் அண்டாவண்ணம் தடுத்துக் காக்க, நேரிய சீரிய முயற்சிகள் பலவற்றை மேற்கொண்டோம். ஆணவ பதேச்சாதிகாரம் அத்துமீறி தலைமைபீடத்தில தாண்டவமாடியதால், நமது முயற்சிகள் பலன்படாமற் போயிற்று.

இறுதியில், கொள்கைகளைக் காப்பாற்றுவதற்கான கண்ணியமான வழி, "திராவிட முன்னேற்றக் கழகம்" காணுவதைத் தவிர வேறில்லை என்ற முடிவுக்குத் தூய்மையுள்ளம் படைத்த உண்மை உழைப்பாளிகளாகிய நாம் வந்தோம் என்பதை நாடு நன்கறியும்; தெளிவறிவுடையோர் தீர உணருவார்கள்!

தூய்மை உள்ளம், உண்மை உழைப்பு, நேர்மைப் போக்கு, நீதிமுறை ஆகிய அடிப்படைகளின்மீது, திராவிட முன்னேற்றக் கழகம்கட்டப்பட்டு வளர்ந்து வந்ததால், அது சென்ற ஓராண்டு காலத்திற்குள்ளாக அன்பும், அழகும், வனப்பும், வளமும், அறிவும், ஆற்றலும்பெற்ற அரும் மகவாய்த் திகழ்கிறது. அதன்வளர்ச்சியைக் கண்டும், அதன் பேச்சு மொழியைக்கண்டும், அதன் அருந்திறலைக் கண்டும் பொறாமைப் படுவோரும், புலம்பியழுவோரும், இல்லாததையும் பொல்லாததையும் கூறி வயிற்றெரிச்சல்படுவோரும், ஏதேதோ உளறிக் கொட்டுபவரும், நாட்டில் இல்லாமலில்லை. அவர்கள், ஏதேதோ எதிர்பார்த்து ஏமாந்தவர்கள், — எனவே ஏதேதோ புலம்புகிறார்கள், பரிதாபத்துக்குரியவர்கள்!

கழக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வரும் சாதனங்களிலே முக்கியமானதும், முதன்மையானதும் கழகப் பிரச்சாரக் குழுவாகும்.

சென்ற ஓராண்டு காலத்தில் பிரச்சாரக்குழு ஆற்றிய அருஞ்செயல்கள் அளவிடற்கரியனவாகும்.

நெடுஞ்செழியன், M. A.

பிரச்சாரக்குழு செயலாளர்

திராவிட முன்னேற்றக் கழகம் — அந்தப் பகுத்தறிவுப் பண்ணை, திராவிடத்தின் காடு, நகரங்கள், பட்டி தொட்டிகளிலெல்லாம் நிறுவப்பட்டுவிட்டது. பிரசாரக்குழுவினராகிய சொல்லேருழவர்கள் கருத்து விதைகளை ஏந்திச் சென்று, மக்களின் உள்ளக் கழனியிலே விதைத்து வருகிறார்கள். பகுத்தறிவுப் பயிர் வளர்க்கப்பட்டிருக்கும் கழனிகள், இலட்சக் கணக்கிலே பெருகிவிட்டன என்று அறியும்போது, உழவர்கள் மகிழாமல் இருக்கமுடியாதல்லவா! அந்த மகிழ்ச்சி வெள்ளத்தைத்தான் இந்த ஓராண்டு நிறைவு விழாவின் போது, கழகத் தோழர்களாகிய பண்ணையினருக்குக் காணிக்கையாகப் பிரசாரக் குழுச் செயலாளன் என்ற முறையில் செலுத்துகிறேன்.

கழகத்தின் பிரசாரகர்கள் மிக மிகக் குறைவு— என்றாலும், கழகத்தின் எக்காள ஒலி, நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் அன்றாடம் கேட்டுக்கொண்டேயிருக்கிறது!

பிரச்சாரகர்களிலே முழு நேரத் தொண்டர்கள் யாரும் கிடையாது—என்றாலும், கழகக்கருத்து விதைகள் எங்கணும் எப்பொழுதும் தெளிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன!

பண பலமற்ற மிகச் சிறிய நமது பிரசாரப்படை அரசாங்கத்தின் அடக்குமுறைகளைத் தகர்த்தெறிகிறது; ஆணவக்காரர்களின் ஆதிக்கத்தை அழியவைக்கிறது; இருண்ட நாட்டிலே அறிவு ஒளிக் கதிர்களை எட்டினமட்டும் ஊடுருவிப் பாயச் செய்திருக்கிறது! எதிர்க்கட்சியினர் கொடுக்கும் தொல்லைகளைச் சமாளித்து, கல்லடி, சொல்லடி, வசையடி, சாணியடி ஆகியவற்றைத் தாங்கி, தன் தடந்தோளால் உதிர்த்துத் தள்ளி, கடுவேகமாக முன்னேறி வருகிறது; பொறாமையின் விளைவால், மனப் புகைச்சலின் காரணமாகக் குரைத்துக் கொண்டிருப்போரை அலட்சியம் செய்துவிட்டுத் தன்வழியிலே கண்ணும் கருத்துமாகச் சென்றுகொண்டிருக்கும் கண்ணியப் படையாக இருந்துவருகிறது. "இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்" என்ற வீரவுரை முழங்கி நடைபோடும் வெற்றிவலம் வந்துகொண்டிருக்கிறது.

கழகப்பிரச்சாரப்படைமிகசிறிது—என்றாலும் கல்லையும் தகர்த்தெறியும் சிற்றுளியாக இருந்து வருகிறது!

வற்றா அன்பும் ஆர்வமும், ஊக்கமும், உறுதியும், நேர்மையும், நீதியும், பற்றும், பண்பும் கொண்டு தம்ஓய்வு நேரத்தில் இடை இடைவிடாப் பிரசாரத்தில் ஈடுபட்டுவரும் பிரசாரக் குழு உறுப்பினர்கள் அனைவர்க்கும், இந்த நல்ல வாய்ப்பிலே, செயலாளன் என்ற முறையில் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். (அடுத்தபக்கம்)

Page numbering incorrect

# மறையவில்லை, மறை!

— ஈழத்தடிகள்

தமிழ் அழுகிறது—தன் தலைவனை இழந்துவிட்ட காரணத்தால்!

தமிழர் இனம் கோவெனக் கதறுகிறது, தம் அறிஞர் மறைந்துவிட்ட காரணத்தால்!

தமிழர் நாடே, கண்ணீர் காடாகிவிட்டது, நாட்டுத் தலைவரிலே நல்லதொரு பெருந் தலைவர் பிரிந்துவிட்ட காரணத்தால்!

ஆம், மறைமலையடிகளார் மறைந்துவிட்டார் என்ற செய்தி நம்மை யடைந்தபொழுது, நம் செவிகள் நம்ப மறுத்துவிட்டன, கண்கள் நீரைச் சொரிந்தபடி இருந்தன, கரங்களும், கால்களும் உதறின, நா குளறிற்று!

மறைமலையார் மறைவு நம் இதயத்தை ஈட்டிக் கொண்டு தாக்குவது போலத் தானிருக்கிறது.

அவர் செய்த தொண்டு—எவரும் இதுவரை ஒரு மொழிக்கு செய்யாத தொண்டு! தமிழுண்டு, தமிழ் மக்களுண்டு, தமிழ் நாடுண்டு, ஆற்றுவோம் நாம் நல்லதொண்டு என்று வாழ்ந்தவர்.

தமிழன்னையின் மடியிலே தவழ்ந்து, தோளிலே புரண்டு, மார்பிலே கிடந்து வளர்ந்து பிறகு அவர்களுக்கு அணிகளாயிரம் செய்து பூட்டி மகிழ்ந்தார் அவர்.

தமிழ்த் தாய் இன்று தேம்பியழுகிறாள், தன் அறிவு மகன் மடிந்துவிட்டான் என்ற செய்தி கேட்டதிலிருந்து!

தமிழன்னைக்கு ஆளவந்தார் ஆற்றவந்த துரோகத்தை முறித்துத் தள்ள அவர் வெகுபாடுபட்டார். ஆச்சாரியார் இந்தியை நுழைத்தபொழுது அவர் பொங்கியெழுந்தார். போரிட்டே தீருவேன் என்று முழங்கினார். "இந்தி மொழியா?" என்று கேட்டார் சிங்கக் குரலில்! 'இல்லை, இல்லை யென்றனர்' தமிழ் மக்கள், 'அப்படியானால் ஏன் உறக்கம், எழுங்கள், போரிடுங்கள்' என்றார். தமிழ்க் காளைகள் களத்திலே திரண்டு நின்றனர். போரிட்டனர்—வென்றனர்! மீண்டும் இந்தியைப் புகுத்தி, இன்னலை பெருக்கியபோதும், வயது வளர்ந்து, வாட்டம் அவரைத் தழுவியிருந்தாலும், 'அன்னைக்கு ஆபத்தா, அப்படியானால் வருகிறேன்' என்று கூறிக்கொண்டு இந்தி எதிர்ப்பு அறப்பணிகளில் ஈடுபட்டார். அவர் உளமெல்லாம் உவகைப் பெருக்கால் நிறைய, கட்டாய இந்தி போயிற்று! களிப்புக்கடலில் ஆழ்ந்தார்.

மறைமலையடிகளார், இந்த நாட்டு மூதறிஞர்களின்

43-ம் பக்கத் தொடர்ச்சி

பொதுக் கூட்டம், ஊர்வலம், மாநாடு, இசையரங்கு, நாடகம், அறிக்கை, புத்தகம், பத்திரிகை ஆகியவற்றின் மூலமாகக் கழகப் பிரச்சாரம் நல்ல முறையிலே நடந்து வருகிறது—என்றாலும் அவற்றின் அளவும், தொகையும் குறைவு; மேன்மேலும் பெருகவேண்டும்; பெருக்க வேண்டிய பொறுப்பு கழகத் தோழர்களனைவருடையதாகும்.

கழகப் பிரச்சாரகர்களும், கழக அமைப்பாளர்களும் நல்லமுறையிலே கட்புறவு கொண்டு, கழகப் பிரச்சாரத்தை மேன்மேலும் ஊக்குவிக்கவும், உயர்வாக்கவும், பரப்புவிக்கவும், பயன்படவைக்கவும், நல்ல முறையிலே முயலவேண்டும் என்பதை அன்னார்களுக்கு நினைவுறுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

கழகமாகிய மரத்தை நிலை நிறுத்துவது ஆணிவேராகிய அமைப்புமுறை என்றால், கழகத்திற்கு உணவூட்டுவது இலைகளோடு கூடிய மாக்கிளையாகிய பிரச்சாரமாகும்.

பிரச்சாரம் கழகத்திற்கு உணவு கொடுக்கிறது—உயிர் கொடுக்கிறது.

இருக்கும் பிரச்சாரகர்களைப் போல மேன்மேலும் நமக்குப் பிரசாரகர்கள் தேவை. அவர்களை உற்பத்தியாக்கும் முயற்சிகளைக் கடைபிடிக்க வேண்டியது கழகத் தோழர்களின் இன்றியமையாக் கடமையாகும்.

கழகப் பிரச்சாரகர்களின் கையிலே காணப்படும் பகுத்தறிவு வாள்கள், அண்ணா அவர்களின் உள்ள உலைக் களத்திலே தயாரிக்கப்பட்டு வடித்தெடுக்கப் பட்டவையாதலால், அவை என்றும், எங்கும் வெற்றி வாள்களாகவேதான் திகழும்—ஆகவேதான் திராவிட முன்னேற்றக் கழகப் பிரச்சாரகர்கள் திராவிடத்தின் இருளைப் போக்கும் தீரர்களாக இருக்கிறார்கள். வாழ்க அவர்கள் உள்ளம்! வளர்க அவர்கள் முயற்சி!! திராவிட நாடு திராவிடருக்கே!!!

———

முதல்வர். அவர்தான், தமிழ் விரோதிகளை நமக்கெல்லாம், 'அதோ திருடர் ஓடுகின்றனர், விடாதே' என்று காட்டிவிட்டார். பிறகுதான் சமூக விரோதிகள் அங்கங்கே தாக்கப்பட்டனர், பேச்சால், எழுத்தால் மட்டும்—பிற முறைகளினால் இல்லை!

ஆயிரமாயிரம் காரணங்களைக் காட்டி, தமிழ் வைரிகளை அவர் தாக்கியபொழுது, சீறிடும் நாகமாயினர் எதிரிகள். அடிகள் அஞ்சி நடுங்கி ஓடுங்கிவிடவில்லை. அவர் குரலில் உறுதி தொனித்தது. அவர் அழுத்தந் திருத்தமாகவே தன் கருத்துரைகளைக் கூறி, தமிழைக் கெடுத்து வந்த தருக்கரின் கொட்டத்தை அடக்கினார்.

வஞ்சகர்கள் அவரது தொண்டைக் கெடுத்துவிட வழி பார்த்தனர். வாழ்வுறிஞ்சிகளின் குறும்பால் அடிகளாருக்கு ஏற்படக்கூடாத எதிர்ப்பும் வந்தது. "மேல்நாடும், கீழ்நாடும்" எப்படி அமைந்துள்ளன என்ற விளக்கக் கட்டுரையைக் கல்லூரி பாட திட்டத்திலிருந்து விலக்கிடவும் துடித்தனர், தமிழர் சமூகத்தின் பிறவிப் பகைவர்கள்—முடியவில்லை.

அடிகளார், நம் இனப் போருக்கு, அன்று, பாதை வகுத்துக் கொடுத்த செம்மல். 'மகனே, அஞ்சாதே, போர்க்களம் நோக்கிப் புறப்படு—இதோ வாள் எடுத்துக் கொள், இதோ கேடயம் பிடித்துக் கொள்!' என்று நம்மின மறவரை அனுப்பிவைத்தார்.

அடிகள் இன்று மறைந்தார் என்ற செய்தியைத் தாங்கிடும் அளவு நம் இதயம் இறுகிவிடவில்லை. தாங்கிக்கொள்ள முடியாமல் தவிக்கிறது, நம் இதயம்! சாவு இயற்கைதான், அறிவோம்; எனினும், நம்மையறியாமல் அழுகை வந்துவிடுகிறது!

அவரே தமிழ். தமிழ் என்றால் அடிகள்! அடிகள் மறைவென்றால், தமிழே மடிந்துவிட்டதுபோல் ஒரு திக்பிரமை, கணநேரம்—பிறகு நம்மை நாமே தேற்றிக் கொள்கிறோம்.

அடிகள் தமிழுக்கு ஆற்றியுள்ள தொண்டை எண்ணிப் பார்க்கும்பொழுது ஒரு சிறு திருப்தி—செய்ய வேண்டிய அளவு செய்துவிட்டார், என்ற நினைப்பு வரும். ஆனால், அடுத்த விநாடியில் இன்றும் இத்தமிழகம் தனி நாடாகி, அதில் சேரன், சோழன், பாண்டிய னாட்சி ஏற்படவில்லை. அதில் கொலுமண்டபங் கட்டி, பண்டைத் தமிழரின் பண்பு கெடாமல், இற்றை நாளின் அரசியல் நுணுக்கங்களும் இறந்துபடாமல், பன்மொழிப் புலவர், பாவலர், ஓவியர், காவிய கர்த்தாக்கள் அனைவரையும் கூட்டி, அதற்கு அடிகளார் தலைவர் என்று அறிவித்திடும் நாள் வரவில்லையே என்ற ஏக்கம் நம் இதயத்தைப் பிளக்கிறது!

அடிகளாரை நாம் பிரிந்துவிட்டோம். ஆம், உடல் மறைந்துவிட்டது! எனினும், அவர் ஊட்டிய மொழிப் பற்று, அவர் காட்டிய நற்கருத்துகள், நீட்டிய நாட்டுணர்ச்சி நம் இதயத்தில் இன்றும் நர்த்தனமாடுகின்றன. அடிகள் மறையவில்லை—மறையக்கூடாது! அவர் என்றும் நம் முன் இருப்பார், இருக்கிறார், தமிழ் உள்ளவரையில், தமிழ் மக்கள் எல்லாம் தன்மானத்துடன் வாழ்கின்றவரை, தமிழகம் தாழாதுள்ளவரை, அடிகளார் நம்முடன் இருப்பார், நம் மூச்சில், பேச்சில் குடியிருப்பார். நம் உணர்ச்சியில் ஊக்கத்தில் வாசம் செய்வார். அவர் புகழ் மங்காது, வளரும்! அடிகள் வாழ்க என்று தமிழகம் எழுப்பிய முழக்கமே, அவரின் அறிவுக் குடும்பத்திற்கு நாம் தரும் ஆறுதல். அவர் தமிழின் சொத்து, அவர் மறைவு தமிழுக்கே ஒரு நிறைவுசெய்ய முடியாத பேரிழப்பு என்பதே நாம் தேற்றிக்கொள்ள, ஒருவரையொருவர் அமைதிப் படுத்திக்கொள்ள உதவும் மருந்து—அடிகள் வாழ்க! அவர் புகழ் ஓங்குக!

—


# நாட்டுக்கேற்ற நல்ல நூல்கள்

*

| | |
|---|---|
| திருக்குறள் இசைப் பாடல்கள் (பாவலர் வேலாயுதசாமி) | 0—7—0 |
| மின்னொளி (ப. கண்ணன்) | 0 6—0 |
| ஒரே முத்தம் (மு. கருணாநிதி) | 1—4—0 |
| கெட்டிக்காரன் (சிறுவருக்கு) (ப. க. குஞ்சிதம்) | 0—2—6 |
| சிந்தனைச் சுடர் (சி. பி. சிற்றரசு) | 0—5—0 |

அச்சில் உள்ளவை

சிந்தனைச் சித்திரம்

ப. கண்ணனின் உணர்ச்சியூட்டும் சிந்தனைச் சிதறல்கள்

வாள் முளைத்த சாமியார்

தோழியர் ப. க. குஞ்சிதம் சிறுவருக்கு தரும் கருத்து விருந்து

பாலைவனக் குயில்கள்

'திராவிட நாடு' உதவி ஆசிரியர் இராம. அரங்கண்ணலின் கருத்துச் சிற்பம்.

பேராசிரியர், இராமசாமி.

மு. இராசகோபாலன் B. A. எழுதிய அறிஞர் வரலாறு.

வியாபாரிகளுக்கு ரூபாய் 1-க்கு 4 அணா கழிவுண்டு. முன் பண மனுப்பினால், புத்தகமனுப்பும் செலவு எம்முடையது. தனிப் பிரதிகள், தபால் தலை அனுப்பினால் அனுப்பப்படும்.

# தென்றல் நூற்பதிப்புக் கழகம்

சலகண்டபுரம் : : சேலம் மாவட்டம்.

# ஆறு ஆண்டு அறுவடை

**மதியழகன் B. A.**
மாணவர் கழக செயலாளர்

ஒரு பல்கலைக் கழகப் பகுதியிலேயுள்ள ஓர் தென்னஞ் சோலை! அதற்குப் பக்கத்திலே ஒரு வீடு, அந்த வீட்டிலேயுள்ள ஒரு சிறு அறையிலே பத்து, பதினைந்து கல்லூரி மாணவர்கள், வட்டமாக, சிந்தனை தேக்கிய முகங்களுடன் ஏதோ திட்டமிடுபவர்கள்போல் அமர்ந்திருந்தனர். அந்த நாட்களிலே பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் ஆகியவைகளிலே திராவிட இயக்கக் கருத்துக்களையும், பகுத்தறிவுக் கொள்கைகளையும் தாங்கிக்கொண்டிருந்த மாணவர்களைக் காண்பதே மிக மிக அருமை நாடு வெளிநாட்டானிடம் சிக்கி வெட்கத்தின் சின்னமாய் அடிமைக்கூடமாய் இருந்த காரணத்தால் காங்கிரசிலே இருப்பது தான் கௌரவம் என்று கல்லூரிக் காளைகள் கருதிய நேரம், நாட்டின் நாலாவித பிரச்னைகளைப் பற்றியோ, நமது கலாச்சாரத்தின் மாண்பு பற்றியோ, “நாகரிகத்தின் சிறப்பு பற்றியோ, நாட்டுக்குள்ள நலிவு பற்றியோ, அதை போக்கும் மார்க்கமும் மருந்தும் பற்றியோ சிந்திக்க மாட்டாதவர்களாய்மட்டுமில்லை, சிந்திக்க மறுப்பவர்களாய் இருந்தனர் மாணவ உலகிலே.

எங்கும் காரிருள். வானத்திலே கருமேகங்கள்! ஒளியின் ரேகைகூடக் காணோம். இடி விழுமா? மின்னல், அக ஒளியையும் பறித்துவிடுமா? மழை கொட்டுமா? வெள்ளம் பொங்குமா? அல்லது பூமியே வெடித்து விடுமா? இதையெல்லாம் பற்றி எண்ண அவர்களுக்கு நேரமில்லை. கல்லூரிகளிலே பகுத்தறிவுக் கொள்கைகளின் மணம் வீச வேண்டும். நமது கொள்கைகள் வெற்றி வலம் வரவேண்டும். அதற்கான ஒரு படைவரிசை, அணிவகுப்பு அமைந்தாக வேண்டும். இது அவர்களது அடங்கா ஆசை. எனவேதான் அவர்களால் சேர்ந்த பத்துப் பதினைந்து இளைஞர்களும் "பகுத்தறிவு இளைஞர் கழகம்" என்றோர் அமைப்பை நிறுவினர். அந்தக் கழகங்கூட ஊருக்கும் உலகத்திற்கும் தெரியாமல் இரகசிய சங்கங்களின் பாணியிலே இருக்க வேண்டும் என விரும்பினர். ஏனென்றால், விளம்பரத்திற்காக ஏற்பட்ட அமைப்பல்லவே அது! விடுதலை விளக்கை ஏற்றிவைக்கவேண்டும் என்ற வேட்கையால் உந்தப்பட்டோரின் கூட்டு முயற்சியின் விளைவல்லவா அது! அவர்கள் ஏதோ சிலர்தான் இருந்தனரே தவிர, அவர்கள் முகங்களிலே வீசிய நம்பிக்கை ஒளி—விழிகளிலே தென்பட்ட உறுதி—இவர்கள் எண்ணம் கனவல்ல—நனவாகும் நாள் வரும் என்பதைத் தெளிவுபடுத்தியது.

அவர்கள் தங்களுக்குள்ளாகவே பேசிக்கொண்டனர். நாம் ஏதோ சிலர் இருக்கிறோம் என்று வெட்கப்பட வேண்டியதில்லை. சிலராக இருப்பவர் பலராக மாறும் நிலை வரும். நம்மைவிட சிலராக இருந்தோர், பெரிய சாம்ராஜ்யங்களை ஜெயித்ததாக, சர்வாதிகாரிகளையே ஆட்டிப் படைத்ததாகவெல்லாம் வரலாறுகளிலே நிகழ்ச்சிகள் இருக்கின்றன. உன்னத இலட்சியத்திற்காக உழைத்த உத்தமர்கள் ஒருவர் இருவரின் துணைகொண்டே ஒரு சமுதாயத்தை உருவாக்கிய நிலைமைகளும் உண்டு. நாம் நியாயம், நேர்மை, நீதி, ஆகியவைகளின் மீதுப், நமது லட்சிய மாளிகையை எழுப்ப விரும்புகிறோம் எனவே எண்ணிக்கையல்ல, நமக்கு முக்கியம். எண்ணம்தான் முக்கியம். நமது கோட்பாடுகளை மற்றவருக்கும் எடுத்துச் சொல்லவேண்டும். திராவிட மாணவர்களிடையே ஒரு புதிய விழிப்பையும் எழுச்சியையும் உண்டுபண்ண வேண்டும். அத்தகையோரின் தொகை அறிவாலயங்களிலே அதிகரிக்க வேண்டும். அவர்களுக்கு கொள்கைகளின் அவசியத்தைச் சொல்வதற்காக புத்தம் புதிய கருத்துக்களைச் சேகரிக்க வேண்டும். நமக்குள்ளேயே வாதங்கள் செய்து அறிவுத் தெளிவு பெற வேண்டும் என்றெல்லாம் திட்டமிட்டனர். திராவிடநாடு தேவை என்பதற்கு தர்க்கரீதியான காரணங்கள், மதங்கள் எப்படி உற்பத்தியாயின என்பதன் வரலாறு, கடவுள் உண்டா இல்லையா என்பதன் வாதப் பிரதிவாதங்கள் இவைகளெல்லாம் அவர்கள் பேச்சிலே அடிபட்டன. இந்த சம்பவம் நடந்த இடம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆண்டு 1943 ஆகஸ்ட் மாதம் ஒரு நாள். அந்த சிறு கூட்டத்திலே இருந்தோர் நண்பர்கள் நெடுஞ்செழியன், அன்பழகன், செழியன், இளம்வழுதி, நான், இன்னும் சிலர். அந்த இரகசிய கழகத்திற்கு நண்பர் செழியனை செயலாளராக தேர்ந்தெடுத்தோம். அந்த சங்கம் நிறுவி முடிந்தது. கல்லூரி மண்டபங்களிலே நமது குரல் ஒலிக்கத் தொடங்கியது. தூங்கிக் கிடந்த மாணவரின் சிந்தனையைக் கிளறத் தவறவில்லை நமது செயல். ஆனால் அதற்காக மாணவர் வட்டாரத்திலே கிடைத்தது, வரவேற்பல்ல—வசவுதான். இன்மொழியல்ல — ஏளனந்தான். களிப்பு விழிகளல்ல — கடுகடுப்பான பார்வைதான் — இவற்றையெல்லாம் தாங்கிக் கொள்ள நெஞ்சுரம் நமக்கு இருந்

தது. திராவிடர் என்று சொல்லிக்கொள்ளவே மறுத்தனர் நமது மாணவர். நமது கொள்கை கோமாளித்தனமானது என்று கூறிக்கிடந்தனர். ஆனாலும் நாம் அயரவில்லை. ஆறு ஆண்டுகளுக்குமேல் உருண்டோடிவிட்டன.

இன்றையதினம் என் மனக்கண் முன் அந்த தென்னஞ்சோலையருகேயுள்ள வீட்டின் அறையிலே கூடிய நண்பர்கள் காட்சியையும் அன்று எடுத்துக்கொண்ட உறுதியையும் நினைவுபடுத்திக் கொள்கிறேன்.

அண்ணாமலை பல்கலைக் கழகத்திலே நமது ஆசைக் கனவுகளுக்குச் செயலுருவம் தந்துகொண்டிருந்த வேளையிலே தான் குடந்தையிலிருந்து குதூகலச் செய்தியொன்று வந்தது. நமது முயற்சிக்கு துவக்க விழாபோல் திராவிட மாணவர் மாநாடு ஒன்று நடைபெறவேண்டும். அறிஞர்களை, பேராசிரியர்களை அழைத்து வழிவகை தெரியவேண்டும். மாணவர் படை அமையவேண்டும் என்று குடந்தை கல்லூரிமாணவர் விரும்பினர் தோழர் தவமணிராசன், மாணவருலகின் விடிவெள்ளியாய்க் கிடைத்தார். குடந்தை மாநாடு மாணவர்கள் குமுறும் எரிமலை என்பதை அவரின் கொப்பளிக்கும் உணர்ச்சி கொடுமையை அழிக்கும் என்பதை எடுத்துக்காட்டிற்று. திக்குத்திசை தெரியாமல், திணறிக்கொண்டு, திரு இடத்தின் பயணத்தை துவங்கிய நமக்கு துணைவராய் தூண்டாவிளக்காய் வழிகாட்டியாய் அண்ணா அகப்பட்டார். நாம் அவருக்கு அகப்பட்டோம். ஆற்றலும் ஆர்வமும் கைகுலுக்கியது. நமது வருகையை வாஞ்சையுடன் வரவேற்று திராவிடநாடு இதழ்தான் முதன் முதலில் தலையங்கம் தீட்டியது. நம்மையும் நமது நோக்கத்தையும் நாட்டுக்கு அறிமுகப்படுத்தி நாட்டுப் பணியிலே பங்கு கொள்ள அழைத்தது.

குடந்தை மாநாடு நடந்த நாளிலே கல்லூரிகளிலே மட்டுமல்ல, உயர்நிலைப்பள்ளிகளிலும் நமது கொள்கைகள் உலவவேண்டும் என்பதை உணர்வதுபோன்ற திருவாரூரில் தமிழ்மாணவர் மன்றவிழா நடைபெற்றது.

மறு திங்களிலே ஈரோட்டிலே அண்ணா அவர்கள் தலைமையிலே மாணவர் மாநாடு கூடியது. நாட்டின் பல பாகங்களிலிருந்த மாணவ மணிகளும் வந்து குவிந்தனர். நாட்டுக்கு இந்தக் கொள்கைக்காக பணி செய்த தொடர்பு, மாணவர்களுக்கும், மாணவர்களின் துணை பலம் இயக்கத்திற்கும் இங்கே கிடைத்தது. இந்த மாநாட்டின் முடிவு, நாட்டின் நாலா பகுதிகளிலும் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்வது என தீர்மானம் நிறைவேறியது. அதன்படி, நாடெங்கும் ஒவ்வொரு மாவட்டத்திலும், நாடு, நகரம், பட்டி, தொட்டிகளிலெல்லாம் அறிவின் தூதர்களாய், விடுதலைச் செய்தியை ஏந்திச் செல்வோராய் பவனி வந்தோம். கோடை விடுமுறையிலே, கொடும் வெயிலிலே சுழலெனச் சுற்றி வந்தோம். ஜாதிபேத இழிவுபற்றி, கண்மூடிக்குருட்டு பழக்க வழக்கங்களின் தீமைபற்றி, பகுத்தறிவின் அவசியம்பற்றி, நாட்டு விடுதலை, விஞ்ஞானத்தின் அவசியம், சமதர்மத்தின் தேவை என்ற இப்படிப்பட்டவைகளைப் பற்றியெல்லாம், நாடு, இனம், கலாச்சாரம், கலை, வரலாறு இவற்றைப்பற்றியெல்லாம் தற்குறித்தனத்திலே ஆழ்ந்து தாசராகவிட்டிருக்கும் திராவிடருக்கும் எடுத்துக் காட்டினோம். இந்தப் பணியினால் தூங்கிக் கிடந்த திராவிடரிடை ஓர் எழுச்சியை உண்டுபண்ண முடிந்தது. இதைத் தொடர்ந்து ஆண்டுதோறும் பயிற்சிப் பள்ளி ஏற்பாடு செய்து, பாசறை அமைத்து, பக்குவம் செய்து, நாட்டின் நாலாபக்கங்களிலும், ஒவ்வொரு கோடைவிடுமுறையிலும் அனுப்பியுள்ளோம். இந்த வேலையின் பயனாய் பல ஆயிரக்கணக்கான கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. பல லட்சம் மக்களுக்கு நமது கொள்கைகளை எடுத்துரைத்திருக்கிறோம். நூற்றுக் கணக்கான மாணவமணிகள் பேச்சாளர்களாக தங்கள் குடும்பத்தை, குதூகலத்தையெல்லாம் மறந்து கொள்கைக்காக உழைத்துள்ளனர். இந்த நிகழ்ச்சி எந்த நாட்டு மாணவர் வரலாற்றிலும் இல்லாத ஒரு புதுமை என்றே கூறவேண்டும்.

இந்தப் புத்துணர்ச்சிக்குப் பிறகு பல்வேறு இடங்களிலே திராவிட மாணவர் மாநாடுகள் நடைபெற்றன. திருச்சியிலே வடமண்டல திராவிட மாணவர் மாநாடு, திருவாரூரிலே தென்மண்டல திராவிட மாணவ மாநாடு, மதுரையிலே தமிழ்நாடு திராவிட மாணவர் மாநாடு, விருதுநகரிலே இராமநாதபுரம் திராவிட மாணவர் மாநாடு, தஞ்சையிலே திராவிட மாணவர் மாநாடு, புதுப்பேட்டையிலே திராவிட மாணவர் மாநாடு என்ற பல மாணவர் மாநாடுகள் வளர்ந்து வரும் இயக்கத்திற்கு இனிப்பூட்டும் சேதியாக இருந்தன. இவை ஒவ்வொன்றும் மாணவர்களின் அணிவகுப்பை அமைக்கும் பயிற்சிக் களங்களாயின. நமது வளர்ச்சியின் ஒவ்வொரு மைல் கல்லென்றே சொல்லவேண்டும்.

நமது கருத்துக்கள் ஒலிக்காத கல்லூரி மண்டபமில்லை. பள்ளிகளெல்லாம் நமது பாசறைகள் என்றசூழ்நிலை வளர்ந்தது. பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் நமது பாதையிலே நடக்கத் தொடங்கினர். இந்தப் பருவத்திலேதான், தங்கக் கோட்டையிலே ஒளிவிடும் வைரமணிகளென அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலேயிருந்து தோழர்கள் நெடுஞ்செழியன், அன்பழகன், செழியன், பூ. கணேசன், இளம்வழுதி, இமயவரம்பன், வி.வி.இளஞ்செழியன், குடந்தையிலேயிருந்து தவமணி, இராசன், கருணானந்தம், திருவாரூரிலிருந்து மு. கருணாநிதி, அரங்கண்ணல், தில்லையிலேயிருந்து தில்லாளன், திருநாவுக்கரசு, திருமாறன், பச்சையப்பன் கல்லூரிகளிலேயிருந்து கஜேந்திரன், இளஞ்செழியன், இராதா மணாளன், ஈரோட்டிலேயிருந்து சம்பத், அப்பாவு, மதுரையிலேயிருந்து சத்தியேந்திரன், விருதுநகரிலேயிருந்து ஆசைத்தம்பி, அதிராம்பட்டினத்திலேயிருந்து இளங்கோ—இப்படிப்பட்ட தூங்கா மணிவிளக்குகளைப் பெற்றுப் பெருமைப்பட்டோம். நாட்டுக்கு அவர்கள் தொண்டை காணிக்கையாக்கினோம்.

இந்தநிலைமைக்கு எழிலுருவம் தருவதுபோல நீடாமங்கலத்திலே மாகாண திராவிட மாணவர் மாநாடு கூடியது. அண்மையில் மறைந்த பேராசிரியர் சேலம் கல்லூரித் தலைவர் ராமசாமி அவர்கள் கலந்து தலைமை தாங்கி அறிவுரை வழங்கினார். அந்த மாநாட்டின் பயனாய் நாடெங்கும் கிளைக் கழகங்கள் திறவினோம். 100க்கு மேற்பட்ட மாணவர் கழகங்கள் மலர்ந்துள்ளன என்று பெருமையோடு கூற முடிந்தது. மத்திய கழகத்துடன் சங்கிலித் தொடர்பால் இணைத்தோம். நமது கூட்டு சக்தியையும். ஒற்றுமை வலிமையும் கண்டு வைதீகம் சீறவும், அரசாங்கம் மருளவும், மாற்றார்கள், அவர்கள் யார்? புயலெனக் கிளம்பியிருக்கிறார்களே என்று எண்ணவேண்டிய நிலைமையும் ஏற்படுத்தியது. பேச்சு மன்றங்களிலே நமது தோழர்களுக்கே வெற்றி மாலை, எழுதுவதிலே இவர்களுக்கு இணையில்லை. விளையாட்

டிலே வெற்றி வீரர்கள். படிப்பிலே யாருக்கும் இளைத்தவர்களல்ல என்ற பெருமையை நமது மாணவர்கள் பெற்றுத் தந்தனர்.

நமது கொள்கையைத் தாங்கிய குற்றத்திற்காக நமது மாணவர் பட்ட கஷ்ட நஷ்டம் கொஞ்சமல்ல. பெற்றோரின் வருத்தம், ஆசிரியரின் கோபப் பார்வை, ஊர்மக்களின் உறுமல், ஊராள்வோரின் உபத்திரவம் இவ்வளவும் பாய்ந்ததுண்டு. இவ்வளவையும் துச்சமெனக் கருதும் துணிவுள்ளம் நிரம்ப இருந்தது.

1947-ஆம் ஆண்டிலே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே ஓர் பெரும் அமளியை உண்டுபண்ணினர் ஆணவக்காரர்கள். பல்கலைக் கழக விடுதியிலே பறந்த நமது இலட்சியக் கொடியை இறக்க முயன்றனர். கொடி காக்கும் முயற்சியில் நமது மாணவர்களின் குருதி கொட்டிற்று! காங்கிரஸ் கட்சி மாணவர்கள் போலீஸ் வெறியாட்டத்துடன் நமது மாணவர்கள் அறைகளிலே புகுந்து மண்டைகளை உடைத்தனர். பலர் கை கால்கள் நொறுக்கப்பட்டனர். அன்றைய தினம் அண்ணாமலை நகர் மாணவர் நமது கொடிக்கு இரத்தத்தால் வர்ணம் பூசினர். அண்ணாமலை நகர் மண்ணிலே திராவிட விடுதலைக்கு இரத்த அபிஷேகம் நடைபெற்றது. வெந்த புண்ணிலே வேலாக, ஆளவந்தார் நமது மாணவர் இயக்கத்தை ஒழிப்பதற்கென நான் உட்பட பலரின்மீது வழக்கும் தொடர்ந்தனர். மந்திரி பீடத்திலே இருந்த ஒருவரே இதற்கு தூடம் போடுபவரானார். பலரின் படிப்புக்குத் தடை விதிக்கப்பட்டது. இறுதியிலே வழக்கு மன்றம் நிரபராதிகளென கூறியது. இவற்றுலெல்லாம் நம்மை சிதறடிக்க செய்தவர்களின் முயற்சி மண்ணைக் கவ்வியது. நாம் மறைந்துவிடுவோம் என மமதையாளர் நினைத்தனர். மாறாக அந்த மந்திரியார்தான் மந்திரி பீடத்திலே யிருந்து மறைந்தார்! நாமோ மடமட-வென வளர்ந்திருக்கிறோம்.

அந்த நிலையிலேதான் திராவிடத்திற்கு ஓர் மா பெரும் சோதனை ஏற்பட்டது. எங்கேயோ இருக்கும் இந்திச் சனியனை நமது சின்னஞ் சிறுவர்களின் தலையிலே சுமத்தி தமிழ்க் கலாச்சாரத்தை சூறையாடும் திருத்தொண்டிற்கு நமது மந்திரிமார் அச்சாரம்போட்டு விட்டனர். எப்பக்கம் வந்து புகுந்துவிடும், இந்தி எத்தனை பட்டாளம் கூட்டி வரும் என்று தமிழகம் துடித்துக் கிளம்பியது. நாட்டுத் தலைவர்கள், தமிழ் வித்தகர்கள், பொதுமக்கள், தாய்மார்கள் சகலரும் ஏகோபித்த எதிர்ப்பை எழுப்பினர். மறைந்த தமிழ்க் கடல் மறைமலை அடிகள் தலைமையிலே செயிண்ட் மேரி மண்டபத்திலே மாநாடு ஒன்றும் நடைபெற்றது. தலைவர்கள் நாட்டு மக்களுக்கு இந்தியின் தீமைகளை எடுத்து உரைத்துக்கொண்டிருந்தனர். 1948 ஆகஸ்ட் மாதத்திலே மாகாண மாணவர் இந்தி எதிர்ப்பு மாநாடு கூட்டினோம். இந்த மாநாட்டிற்கு தமிழகம் முழுதுமுள்ள பல்வேறு கல்லூரிகளிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். சென்னை மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டிலே இந்தியை எதிர்த்துப் போராட்டம் துவக்கவேண்டிய அவசியமும் அவசரமும் குறித்தும், மாணவர்கள் மேற்கொள்ள இருக்கின்ற பங்கு குறித்தும் ஆர்வம் நிறைந்த உரைகள் நிகழ்த்தப்பட்டன. இந்த மாநாட்டின் மறுதினமே இந்தி எதிர்ப்பு கமிட்டி கூடி, அண்ணா அவர்களை தலைவராக நியமித்து அறப்போர்ப் பிரகடனம் செய்தது. அறப்போருக்கு ஆதரவாக அமைந்திருந்தனர் ஆங்காங்குள்ள மாணவர்கள். பல்வேறு இடங்களிலே நடைபெற்ற அடையாள மறியல்களில் பெரும் பங்கு கொண்டனர். சில மாணவர்கள் சிறைத் தண்டனையையும் ஏற்றனர். நமது ஆற்றல் மிகுந்த எதிர்ப்புக்கு பயந்து கட்டாய இந்தி எடுபட்டுவிட்டது.

கம்யூனல் ஜி. ஓ. பற்றி உயர்நீதி மன்றத் தீர்ப்பால் தேள் கொட்டியது போன்ற நிலை ஏற்பட்டது திராவிட மாணவ உலகுக்கு, வகுப்பு நீதி வேண்டும், சுப்ரீம் கோர்ட்டிற்கு அப்பீல் செய், அரசியல் சட்டத்தைத் திருத்து என்ற முழக்கங்களுடன் பச்சையப்பன் கல்லூரியிலே முதன் முதல் போர்ப் பரணி தொடங்கியது. திராவிட மாணவர்களின் நலத்தை பல திக்கும் இந்த செயலை எதிர்த்து துவக்கப்பட்ட போராட்டத்திற்கு பச்சையப்பன் கல்லூரி வேலை நிறுத்தத்தன்று கொடி மரம் நாட்டப்பட்டது. இரண்டு நாட்கள் பிரம்மாண்டமான ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடை பெற்றன. இந்தப் போராட்டத்தில் ஆந்திரர், கேரளர், கன்னடியர் ஆகிய மாணவரும் நம்மோடு கைகோர்த்து நின்றனர். அவர்களைச் சேர்ந்த ஐக்கிய முன்னணியை உருவாக்கிக் காட்டினோம். நாட்டு மக்களின் ஆதரவை சேகரிக்க முடிந்தது. இதைத் தொடர்ந்து சென்னை ஆர்ட்ஸ் கல்லூரி ஸ்ட்ரைக், சேலம் கல்லூரி மாணவர் சிறப்பான ஊர்வலம், வாணியம்பாடியிலே யாரும் கல்லூரிக்கு வரவில்லை, விருதுநகரிலே அணிவகுப்பு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே அமைதியான வேலை நிறுத்தம், மதுரை அமெரிக்கன் கல்லூரியில் போராட்டம், குடந்தையிலே, கோவையிலே வகுப்பு நீதிக்காக மாணவர் ஹர்த்தால், திருச்சியிலே, திருநெல்வேலியிலே கல்லூரிக் கதவுகள் மூடிக்கிடந்தன என்று இப்படிப்பட்ட செய்திகளை பத்திரிகைகளுக்கு விருந்தாக்கிக் காட்டினர் நமது போர்க்கோலம் பூண்டுள்ள நமது மாணவ மணிகள். இவைதான் என்றில்லாமல் பெரியகுளம், ஆரணி போன்ற பல நூறு உயர்நிலைப் பள்ளிகள் உரிமை முழக்கம் செய்துள்ளது. இங்கெல்லாம் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் தலைமை தாங்கி நடத்தியிருக்கிறது. சென்னையிலேயுள்ள என்ஜினீயரிங், ஸ்டான்லி மெடிகல் கல்லூரி போன்ற தொழில் கல்லூரிகள், தங்களது கலாசாலை சங்கங்களின் மூலமாகவே அதிகாரப் பூர்வமாக வகுப்பு நீதியின் அவசியம் குறித்து தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்தாருக்கு அனுப்பிவைத்துள்ளனர். சென்ற வாரத்திலே டில்லி மந்திரி திவாகருக்கு கருப்புக்கொடி காட்டிய நிகழ்ச்சியிலே பல நூறு மாணவர்கள் கலந்து வடநாட்டு ஆதிக்க வெறுப்பைக் காட்டிக் கொண்டனர்,

பொட்டல் வெளியிலே—தானியம் பூத்துக் குலுங்கும் காட்சி—அறுவடைக்கு தயாராகிய அழகிய காட்சி—அப்படிப்பட்ட அறுவடையை ஆறு ஆண்டுகளில் பெற்றிருக்கிறோம். ஆனால் திராவிட மாணவர்களுக்கு எதிர்காலம் ஏராளமான வெற்றியைத் தரக் காத்திருக்கிறது. அவர்கள் உழைப்பால் உருவாக இருக்கும் இலட்சிய மாளிகைகளை, அவர்கள் பிடிக்க இருக்கும் கீர்த்திக் கோட்டைகளை காலம் காட்டத்தான் போகிறது. வளர்க திராவிட மாணவர் இயக்கம்!

---

Edited Printed & Published by
C. N. Annadurai M A at Dravida Nadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram.

22-9-50 முதல் தமிழ் நாடெங்கும் நடைபெறுகிறது.

Edited, Printed and Published by C. N. Annadurai, M. A. at Dravida Nadu Press, 95, Tirukkachinambi Street, Kanchupuram.